தேவியின்
கண்மணி
03-11-2021
ரூ.20

பரிமளா ராஜேந்திரன்



# உயிர் தொடும் அமுதம் நீ!


பெண்மணி
ஆர்.மணிமாலா
நவம்பர்- 2021
என் உயிர்த் துணையே...
-முழு நாவல்
ஆன்மிகம்:
கந்தசஷ்டியும் கார்த்திகை தீபமும்!
சின்னத்திரை:
மூன்று வருடத்துக்கு திருமணம் இல்லை!
- 'வானத்தைப்போல' சுவேதா
கோவில்:
திருமணத்தடை நீக்கும் பாண்டவ தூதப்பெருமாள்!
நகைச்சுவை பட்டிமன்றம்
இன்பம் பொங்கும் தீபாவளி! எழுச்சியா? மகிழ்ச்சியா?
சுற்றுலா:
தென்னகத்து தீவு நகரம் ஸ்ரீ ரங்கப்பட்டணம்!
இசை:
புல்லாங்குழலில் சிக்கில் பாணி!
-சிக்கில் மாலா சந்திரசேகர்
ரூ.1000/- பரிசு அறிவுத்திறன் போட்டி
விலை ரூ.28/-


தேவியின்
கண்மணி
அடுத்த இதழ்...
தீபாவளி மலர்
தேவிபாலா எழுதும்
நாத்தனார்-2
சிறப்பு நாவல்
திரைப்பட நட்சத்திரங்கள் மற்றும்
பிரபல
எழுத்தாளர்களின்
சுவையான படைப்புகள்!
தீபாவளி
சிறப்பு பகுதிகளுடன்
வெளிவருகிறது

# அரசியல்ல... இது சாதாரணமப்பா

அண்மையில் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த முன்னாள் மத்திய மந்திரி பாபுல் சுப்ரியோ, மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரசில் சேர்ந்தார். இதையடுத்து எம்.பி. பதவியை அவர் ராஜினாமா செய்தார். இந்நிலையில் அசன்சோல் தொகுதியில் பிப்ரவரி மாதம் இடைத் தேர்தல் நடைபெறும் என்று டெல்லி அரசியல் வட்டாரத் தகவல் தெரிவிக்கிறது.


பாபுல்சுப்ரியோ


விப்லப் குமார்

உத்தரகண்ட், குஜராத், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் ஏற்கனவேமுதல்வர்களை மாற்றிய பா.ஜ.க. மேலிடத்தின் கவனம் இப்போது திரிபுரா மீது குவிந்துள்ளது. திரிபுரா முதல்வர் விப்லப் குமார் தேவை மாற்ற வேண்டும் என பா.ஜ.க. அதிருப்தியாளர்கள் போர்க் கொடி உயர்த்தியுள்ளதால் அகர்த்தலாவில் பரபரப்பு உச்சம் பெற்றுள்ளது.

சத்தியபால் மாலிக் பா.ஜ.க.வைச் சேர்ந்த மூத்த தலைவர் ஆவார். உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த அவர் ஜாட் சமூகத்தின் பிரதிநிதியாகக் கருதப்படுகிறார். முன்பு காஷ்மீரில் கவர்னராக பணியாற்றிய சத்தியபால் மாலிக் இப்போது வடகிழக்கு மாநிலமான மேகாலயாவில் கவர்னராக உள்ளார். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்காவிட்டால் மத்தியிலும் மாநிலத்திலும் தாமரை மலராது என்று சத்தியபால் மாலிக் சமீபத்தில் விளாசியது அதிர்வலைகளை உச்சப்படுத்தியுள்ளது.


சத்தியபால் மாலிக்

# வாழ்க்கையில் பயம் இருக்கக் கூடாது!

தமிழில் விஜய் ஜோடியாக 'பீஸ்ட்' மூலம் ரீ எண்ட்ரி கொடுக்கும் பூஜா ஹெக்டே, பல மொழிகளில் உருவாகும் பான் இந்தியா படங்களின் 'ஹாட்' நாயகி.


இந்திய படங்கள் அனைத்திலும் நடிக்க விரும்பும் பூஜா ஹெக்டே, எல்லா மொழிப் படங்களும் எனக்கு சொந்தமானவை என்கிறார். அவருடன் அழகிய உரையாடல்.



-பூஜா ஹெக்டே



சஞ்சய் லீலா
பன்சாலி



ராஜ்குமார் ஹிரானி



ராதே ஷ்யாம்...



சர்க்கஸ்...

**இ சினிமா படங்களை எப்படி தேர்வு செய்கிறீர்கள்?**

ஸ்கிரிப்ட்டுக்காக மட்டுமல்ல, அந்தப்படத்தை யார் இயக்குகிறார்கள் என்று பார்த்த பிறகுதான் ஒரு படத்தை தேர்வு செய்கிறேன். இயக்குனர்கள் ராஜ்குமார் ஹிரானி, சஞ்சய் லீலா பன்சாலி, எஸ்.எஸ். ராஜமவுலி போன்ற இயக்குனர்கள் நாளைக்கே கூட என்னை அழைத்தால், கதை சொல்லுங்கள் என்று கூட கேட்க மாட்டேன். அவர்கள் படத்தில் நடிக்க உடனே சம்மதம் சொல்லி விடுவேன்.

இந்தியில் ‘சர்க்கஸ்’ படத்தில் நடிப்பதற்காக ரோஹித் ஷெட்டி இப்படித்தான் அழைத்தார். உடனே நான் அவர் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டேன். எனக்கு இணையாக யார் நடிக்கிறார்கள் என்று கூட கேட்கவில்லை. அதற்குப் பிறகுதான் தெரிந்தது ரன்வீர் நடிக்கிறார் என்று. இதை என்னால நம்ப முடியவில்லையே ஆச்சரியப்பட்டுப் போனேன்.

**இ ‘பாகுபலி’ பிரபாஸ் உடன் நடிக்கும் ‘ராதே ஷ்யாம்’ படம் பற்றி?**

அது நாடு முழுமைக்குமான ஒரு படம். அதில் காதல்,

அழகுணர்வு எல்லாம் உண்டு. என்னை தொட்டு செல்வது போலவே இந்தப் படத்தின் கதை நகரும். படம் முழுக்க என்னை பார்க்கலாம்.

**இ பல மொழிகளில் நடிக்கிறார்கள்... வித்தியாசம் தெரிகிறதா?**

சினிமா இண்டஸ்ட்ரிக்களை நான் ஒருபோதும் வேறுபடுத்திப் பார்க்க விரும்பவில்லை. எல்லாமே எனக்கு சொந்தம் என்று நான் நினைக்கிறேன். பிரபாஸ் உடன் நான் நடித்த 'ராதே ஷ்யாம்' படம் மட்டுமல்ல இன்னும் நடித்த மற்ற படங்களும் பான் இந்தியா படங்கள்தான்.

ஆனால் நான் ஒரு படத்தை அணுகும்முறை வித்தியாசமானது. நல்ல கதையம்சம் உள்ள படமாக இருக்க வேண்டும். படத்தில் வரும் ஒவ்வொரு பகுதியும் ரசிகர்களின் அன்பை நான் பெறுவது போல் இருக்க வேண்டும். அப்போதுதான் ரசிகர்களால் நான் அங்கீகரிக்கப்படுவேன்.

**இ சினிமாவில் வெற்றி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

நான் நடித்த படங்கள் பொருளாதார ரீதியாக வசூலை வாரிக் குவிக்கும்





போது பெரிதும் மகிழ்ச்சி அடைவேன். அது சமயம் என்னை அதிகம் பாதிக்காத அளவுக்கு பார்த்துக் கொள்வேன். என்னை பொறுத்தவரையில் அடுத்து என்ன செய்யலாம் என்று தான் எப்போதும் யோசிப்பேன். வெற்றியோ, தோல்வியோ எதுவும் என்னை பாதிக்காத வகையில் எனது மனநிலையை வைத்துக் கொள்வேன். வாழ்க்கையில் பயம் என்பது இருக்கக் கூடாது. நான் அப்படித்தான் வாழ பழகிக் கொள்கிறேன்.

**இ உங்களை வழிநடத்துவது எது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

எனது பிரார்த்தனைகளைத் தான் சொல்வேன். எனது படங்கள் வெற்றிப் படங்களாக அமைவதற்கும் என்னுடைய உள்ளுணர்வு சரியான முடிவை எடுப்பதற்கும் இந்த பிரபஞ்சத்திற்கு தான் நான் நன்றி சொல்வேன். நான் நடிக்க முடியாது என்று புறந்தள்ளிய படங்கள் தோல்விப் படங்களாக அமைந்திருக்கின்றன. ஆகவே இந்த பிரபஞ்சம் தான் சரியான திசையில் போக எனக்கு வழிகாட்டுகிறது.



எஸ்.எஸ்.ராஜமவுலி

–திருமகன்.

# அரசியல்ல... இது சாதாரணமப்பா


சரண்ஜித்சிங்


மம்தா பானர்ஜி


பஞ்சாப், மேற்குவங்காளம், அசாம் மாநிலங்களுக்குட்பட்ட சர்வதேச எல்லைகளில் 15 கி.மீ. தூரஎல்லைக்குள் கைது, சோதனை, பறிமுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள எல்லை பாதுகாப்புப் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. சமீபத்தில் இந்த 15 கி.மீ. தூரத்தை 50 கி.மீ. தூரமாக மத்திய உள்துறை அமைச்சகம் விரிவாக்கம் செய்தது. இதற்கு பஞ்சாப் முதல்வர் சரண்ஜித்சிங் சன்னி, மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் நவம்பர் மாதம் 29-ந் தேதி தொடங்குகிறது. இக்கூட்டத்தொடர் டிசம்பர் 23-ந் தேதி வரை நடைபெறும் என்று தெரிகிறது. பட்ஜெட் கூட்டத் தொடர் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கும். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் உத்தரபிரதேசம், உத்தரகண்ட், கோவா, பஞ்சாப், மணிப்பூர் ஆகிய 5 மாநிலத் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் என்று கூறப்படுகிறது.


நிதின்அகர்வால்

உத்தரப்பிரதேச சட்டசபைத் துணைத்தலைவராக சமாஜ்வாடி கட்சி சார்பில் நரேந்திர வர்மா நிறுத்தப்பட்டார். இந்நிலையில் அதே கட்சியைச் சேர்ந்த அதிருப்தியாளர் நிதின் அகர்வாலுக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆதரவு அளித்தார். 304 வாக்குகளைப் பெற்ற நிதின் அகர்வால் துணை சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார். நரேந்திர வர்மாவுக்கு 60 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

–விறலேந்தல்



# மோசடி கும்பல்: சிக்கி சுழலும் நடிகைகள்

நிழல் உலகம் பல ரகசியங்களை கொண்டது. இரவில் இயங்குவது என்பதால் அதில் பெண்கள் ஒரு சுவாரஸ்யம். அதுவும் கனவுக் கன்னிகளான நடிகைகள் அதில் ஒரு அங்கமாகி விடுகின்றனர். தெரிந்தோ தெரியாமலோ பணத்துக்கு அடிமையாகி சமூக விரோதிகளிடம் சிக்கிக்கொள்கிறார்கள்.

அவ்வாறு ஒரு மோசடி கும்பலிடம் இந்தி, மலையாள இளம் நடிகைகள் இப்போது சிக்கி சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி ஒரு மோசடி கும்பலின் தலைவன் தான் சுகேஷ் சந்திரசேகர். சிறுவயது முதலே சீட்டிங்கில் ஈடுபட்டு மோசடி மன்னனாக வளர்ந்த அவனது வழக்கு தொடர்பாக இப்போது விசரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் பிரபல இந்தி நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ்.

தொழிலதிபர்களிடம் சுகேஷ் சந்திரசேகர் நடத்திய 200 கோடி ரூபாய் பண மோசடி வழக்கில் தான் ஜாக்குலின் பெர்னாண்டசுக்கு அமலாக்க பிரிவு அழைப்பாணை அனுப்பியுள்ளது. 4 முறை சம்மன் அனுப்பியும் , 'தொழில் நிமித்தமாக வெளியில் இருப்பதால் ஆஜராக முடியாது' என்று டிமிக்கி கொடுத்த ஜாக்குலின், பின் ஒரு வழியாக ஆஜராகி, சுகேசின் பண மோசடி குறித்த அமலாக்க துறை அதிகாரிகளின் கேள்விகளுக்கு பதிலாக, பல தகவல்களை



நோரா ஃபதேஹி

கொட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

ஜாக்குலின் பெர்னாண்டஸ் முன்னாள் இலங்கை அழகுராணி. 2006 ஆம் ஆண்டு இலங்கை அழகிப் போட்டியில் (மிஸ் ஸ்ரீலங்கா யுனிவேர்ஸ்) வெற்றி பெற்றார். 2009ம் ஆண்டு அலாதீன் என்ற இந்தித் திரைப்படத்தில் அறிமுகமானார்.இவரின் கவர்ச்சி போஸ் இந்தி திரையுலகில் பிரபலம்.

அதுமட்டுமல்ல, கவர்ச்சி கரமான அவரது யோகா செயல்முறை பிரசித்தம். அவரது கட்டழகு போஸ்களை கண்கொண்டு மேய்வதற்காகவே அவரது சமூக வலைத்தளத்தை மொய்க்கும் ரசிகர்கள் பல லட்சம் பேர்.

அதுமட்டுமல்ல, பார்ட்டி, ஷூட்டிகளிலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடு. கொரோனா ஊரடங்கு காலத்தில் சல்மான்கான் பண்ணையில் இவர் தங்கியது அப்போது பரபரப்பாக பேசப்பட்டது. ஜாக்குலினுடன் தனக்கிருந்த உறவை சல்மான்கான் பகிரங்கமாக அறிவித்துக் கொண்டதும் நடந்தது.

இப்படி தனது கவர்ச்சி மூலம் பேசுபொருளான ஜாக்குலின், கால ஓட்டத்தில் சுகேஷ் கும்பலுடன் இணைத்து பேசப்படும் நிலைக்கு தள்ளப்பட்டார். ஆனாலும் இதுகுறித்து அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இந்த வழக்கில் பாலிவுட் நடிகை நோரா ஃபதேஹிக்கும் சம்மன் அனுப்பப்பட்டது. நோரா ஃபதேஹி 'சத்யமேவ ஜயதே' படத்தில் இடம்பெற்ற 'தில்பார்', குத்து பாடல் மூலம் பிரபலமானவர். இந்தியில் நடிகர் சல்மான் கான் தொகுத்து வழங்கி வரும் பிக் பாஸ் நிகழ்ச்சியின் சீசன் 9ல் போட்டியாளராக கலந்து கொண்டதுடன் , ஏகப்பட்ட ரியாலிட்டி ஷோக்களிலும் பங்கேற்று ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர்.

இவர்கள் எல்லோரையும்

**சுகேஷ் மோசடி வழக்கு தொடர்பாக தன்னை சுற்றி சுழலும் வதந்திக்கு நடுவே எவ்வித சலனமும் இல்லாமல் ஜாக்குலின் பெர்னாண்டஸ் பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நதிக்கரையை தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளார். மும்பை மேற்கில் அரபிக் கடலை ஒட்டியுள்ள மிதி நதிக்கரை துப்புரவுப் பணியில் ஈடுபட்ட படங்களை அவரது இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார். 'இந்த அழகான நகரம், நாடு மற்றும் கிரகத்தை காப்பாற்ற அனைவரும் ஒன்றிணைவோம்' என்றும் அதில் தத்துவம் பதித்திருந்தார்.**

விட சுகேஷின் 'பெட்'டாக இருந்து மோசடி செயல்கள் அனைத்திலும் துணை நின்று சிறை சென்றவர் மலையாள நடிகை லீனா மரியம் பால்.

சுகேஷ் சந்திர சேகரின் அங்கீகாரம் இல்லாத மனைவியான லீனா மரியா பால், தமிழில் 'பிரியாணி' படத்தில் நடித்துள்ளார்.

சுகேஷ் சந்திரசேகரும் இவரும் இணைந்து கலக்கிய கலக்கல் சாதாரண கலக்கல் இல்லை.

தாம்பரம் சேலையூர் ஜவுளி நிறுவனஉரிமையாளர் சக்கரவர்த்தியிடம் செல்போனில் பேசிய லீனா, கர்நாடக அரசின் மருத்துவத்துறை, போக்குவரத்துறை ஊழியர்களுக்கு சீருடை துணிகளை வாங்குவதற்கு தனக்கு ஆர்டர் கிடைத்திருப்பதாகவும், அதை அவருக்கு வழங்க முன் பணமாக ரூ. 68 லட்சத்தை வங்கியில் செலுத்த வேண்டும் எனவும் கூறினார்.

அதற்கு இசைவாக, கர்நாடக அரசின் ஊரக வளர்ச்சித் திட்டத்துறை செயலர் ஜெயக்குமார் ஐ.ஏ.எஸ்., என சந்திரசேகர் பேசி, பணத்தை வங்கியில்


லீனா மரியா பால்


செலுத்தும்படி கூறியுள்ளார். அவர்கள் பேச்சை நம்பிய சக்கரவர்த்தி ரூ.68 லட்சத்தை வங்கியில் செலுத்தி ஏமாந்தார்.

இந்த புகார் காரணமாக லீனா மரியம் பாலையும், சந்திரசேகரையும் போலீஸார் தேடி வந்த நிலையில், 2010ஆம் ஆண்டு அழகு நிலையம் ஒன்றில் மோசடி செய்த வழக்கில் சென்னையில் சேத்துப்பட்டு போலீசில் சுகேஷ் சிக்கினார். பின்னர் ஜாமீனில்

விடுதலையாகி வங்கிகளில் கைவரிசை காட்டியுள்ளார்.

அப்போதுதான் தன்னை ஐ.ஏ.எஸ். அதிகாரி என்று அறிமுகப்படுத்திக் கொண்ட சுகேஷ், அம்பத்தூரில் உள்ள கனரா வங்கி கிளைக்கு லீனாவுடன் சென்று பெரிய திட்டம் ஒன்றை தொடங்குவதாக கூறி ரூ.19 கோடி கடன் பெற்றுள்ளார். விதிமுறைகளை மீறி கடன் கொடுத்ததாக வங்கியின் மேலாளர் ஜெகதீஸ் கைது செய்யப்பட்டார். ஆனால், சுகேஷ் - லீனா ஜோடி தப்பிவிட்டது. இதே போல சேலையூரில் உள்ள ஒரு வங்கியிலும் ரூ.72 லட்சம் கடன் வாங்கி சுகேஷ் மோசடி செய்துள்ளார்.

இந்த இரு வழக்குகளிலும் அவர்களை தேடியபோது டெல்லியில் அசோகா பகுதியில் ஆடம்பர பண்ணை பங்களாவில் பதுங்கி இருந்து ரகசிய சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தனர். சென்னை மத்திய குற்றப்பிரிவு தனிப்படை போலீசார் அங்கு அதிரடி சோதனை நடத்தி 9 சொகுசு கார்களை பறிமுதல் செய்தனர்.


சுகேஷ் சந்திரசேகர்

இந்நிலையில், ஐதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபரும் தெலுங்கு தேசம் கட்சியின் முன்னாள் எம்.பியுமான சாம்பசிவ ராவிடம் சிபிஐ அதிகாரிகள் என்று கூறி 2 பேர் பணம் பறிக்க முயன்றுள்ளனர். சிபிஐ அதிகாரிகளின் தீவிர விசாரணையில் மோசடியில் ஈடுபட்டவர்கள் ஐதராபாத்தைச் சேர்ந்த மணிவர்தன் ரெட்டி, மதுரையை சேர்ந்த செல்வம் ராமராஜன் என்பது தெரிய வந்தது. அவர்கள் இருவரும் நடிகை லீனா மரியம் பால் மற்றும் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தனர்.


ரவி பூஜாரி

எப்படியோ, அந்த வழக்கிலிருந்தும் ஜாமீனில் வெளிவந்தவர், மும்பையில் நிதி நிறுவனம் நடத்தி பண மோசடி செய்த வழக்கில் சுகேஷுடன் மீண்டும் கைது

செய்யப்பட்டார்.
இவ்வாறெல்லாம் கைது மேல் கைது என்றாலும் லீனா கலங்கவில்லை. ஜாமீனில் வெளிவந்தவர், சுகேஷ் திகார் சிறையில் இருந்து பிறப்பிக்கும் உத்தரவுகளை வெளியே இருந்து நிறைவேற்றியிருக்கிறார். அந்த வகையில் தான் 200 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இப்படி வல்லிய மோசடிப்பெண்ணாக வளைய வந்த லீனாவையும் பணத்துக்காக மிரட்டியுள்ளான் ஒரு வல்லவன். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டல்லவா? அவரது பியூட்டி பார்லரில் ஒருநாள் திடீரென நடந்த துப்பாக்கி சூடு பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த காலகட்டத்தில் தான் செனகல் நாட்டில் அந்தோணி பெர்னாண்டஸ் என்ற பெயரில் மறைந்திருந்த தாதா ரவிபூஜாரியை, போலீசார் கைது செய்து இந்தியாவுக்கு கொண்டு வந்தனர். பெங்களூரில் அவரிடம் விசாரணை நடத்தியபோது,



கேரளாவில் லீனா மரியம் பால் பார்லரில் துப்பாக்கிச்சூடு நடத்தியது தனது ஆட்கள்தாம் என்று வாக்கு மூலம் அளித்தார்.

லீனாவின் கூட்டாளியான சுகேஷ் சாமான்யர் அல்லர். பெங்களூருவை சேர்ந்த அவர், 2008ல் தன்னை கர்நாடகா முன்னாள் முதல்வர் குமாரசாமியின் மகன் என்று கூறி பெங்களூரில் பலரிடம் பணமோசடி செய்துவிட்டு ஆந்திர மாநிலத்துக்கு தப்பினார். குமாராசாமியின் மகன் நிகில் கௌடாவின் நெருங்கிய நண்பர் என கூறிக் கொண்டு பெங்களூரில் தொழிலதிபரை ஏமாற்றினார்.

கடந்த 2009ல் ஹைதராபாத் சென்ற


ஷிவீந்தர் சிங், மால்வீந்தர் சிங்

சுகேஷ், அங்கு அப்போது முதல்வராக இருந்த ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டியின் மருமகன் என்று அடையாளப்படுத்திக் கொண்டு பலரிடம் கைங்கர்யம் செய்தார். தொடர்ந்து 2011ல் தமிழ்நாட்டுக்கு வந்து தன்னை கருணாநிதியின் பேரன் என்று கூறிக் கொண்டு ஒரு தொழிலதிபரை ஏமாற்றினார்.

அப்போதுதான் கப்பன்பார்க் போலீசில் சிக்கினார். பின் ஜாமீனில் வெளியாகி, கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா மாநிலங்களில் செகண்ட் ரவுண்ட் வந்தார்.

அதன் பின்னர் டெல்லி சென்றவர், 2013ல் தொலைகாட்சி நிகழ்ச்சி தொகுப்பாளருடன் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வந்தார். பின்னர் அவர் பதுங்கியிருந்த இடம் குறித்து தகவலறிந்த போலீஸார் அவரை நூலிழையில் தவறவிட்டனர். ஆயினும் அந்த பெண்ணை மட்டும் கைது செய்தனர்.

கடந்த 2017ல் அ.தி.மு.க. பிளவுப்பட்டிருந்தபோது இரட்டை இலை சின்னத்தை மீட்பதற்காக டி.டி.வி. தினகரன் தரப்புக்காக தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக கூறி டெல்லி குற்றவியல் போலீசார் டி.டி.வி.தினகரன், அவருடைய நண்பர் மல்லிகார்ஜுன், தரகர் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோரை கைது செய்தனர். இந்த வழக்கில் டி.டி.வி. தினகரன் உள்பட பலர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். ஆனால் சுகேஷ் சந்திரசேகர் மட்டும் சிறையில் உள்ளார்.


சாம்பசிவராவ்

இது எல்லாம் பழங்கதை. கடைசியாக சிறையிலிருந்தே அவர் செய்த வேலை

தான் பிரமாதம். அங்கு பொருளாதார குற்றச்சாட்டில் சிறையிலிருந்த பிரபல தொழிலதிபர்கள் ஷிவிந்தர் சிங், மல்விந்தர் சிங் பற்றிய விவரங்களை அறிந்துகொண்டு, லீனா போன்றோரின் உதவியுடன் அவர்களை சிறையிலிருந்து விடுவிக்க உதவுவதாக அவர்களின் மனைவியரிடம் தனித்தனியாக பேரம் பேசினார்.

ஒருவருக்கு தெரியாமல் ஒருவரிடம் பணத்தை கறந்தார். மால்விந்தர் மோகன் சிங்கின் மனைவியிடம் ரூ.4 கோடி மோசடி செய்ததாக டெல்லி காவல்துறையின் பொருளாதார குற்றப்பிரிவு சுகேஷுக்கு எதிராக புதிய வழக்குப்பதிவு செய்ததையடுத்து அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னரும் சிறையில் இருந்தே அவர் மிரட்டி பலரிடம் பணம் பறித்துள்ளார். அவருக்கு உதவிய இரண்டு சிறை கண்காணிப்பாளர்கள் உட்பட 6 சிறை அதிகாரிகள் ஏற்கனவே சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

ஷிவீந்தர் சிங், மால்வீந்தர் சிங் சகோதரர்களை ஏமாற்றி 200 கோடி ரூபாய் வரை மோசடி செய்துள்ளதை அடுத்து மீண்டும் லீனா மரிய பாலை கைது செய்தனர். இந்த வழக்கு சம்பந்தமாகத்தான் ஜாக்குலின் பெர்னாண்டஸ் அமலாக்க துறையில் ஆஜராகியுள்ளார்.

**கைது செய்யும் போலீசாரையும் கண்ட்ரோலுக்கு கொண்டுவரும் கில்லாடி சுகேஷ். இரட்டை இலை சின்னத்தை பெற லஞ்சம் கொடுத்த வழக்கில் சுகேஷிடம் விசாரணை நடத்த அவரை பெங்களூருக்கு அழைத்து சென்றனர். அப்போது சுகேஷ் பெங்களூரில் ஷாப்பிங் செய்ய காவலர்கள் உதவியதாக புகார் எழுந்தது. அந்த புகாரில் காவல் துறையைச் சேர்ந்த 2 பேரை கைது செய்த டெல்லி போலீஸ் அவர்களை சிறையில் அடைத்தது. அதேபோல் மேலும் 5 காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.**


–நெல்லைபரிதி

# வலையில் வசீகரித்தது



நாகராஜசோழன். MA.MLA.@prabhu65290
ஏழைகளுக்கு மோடி செய்தது போல் வேறு யாரும் செய்யவில்லை - அண்ணாமலை.
#ஒரே ராத்திரில மொத்த பணமும் க்ளோஸ்....

ச ப் பா ணி@manipmp
ஒரு மணி நேரம் எவ்வளவு குறுகியதென்பது காலையில் ரெடியாகி அலுவலகம் செல்லும் போது தெரியும்




சரவணன். @saravankavi
பெட்ரோல் விலை லிட்டர் ரூ.200ஐ தொட்டால்,3 பேர் பைக்கில் செல்லலாம் ~அசாம் மாநில பாஜ தலைவர் பாபேஷ் கலிதா. # ஆனா பைக்கை வித்துட்டு நடந்து தான் போகணும்...

துயிலன்கேG911_twitz
என் மனதிலிருந்த பாரத்தையெல்லாம் அம்மாவிடம் இறக்கி வைத்துவிட்டேன்! - சசி கலா#சமாதி எவ்ளோ பாரம் தாங்கும்னு செக் பண்ணிட்டு தானே இறக்கி வெச்சிங்க.



insta @ athulyaofficial
மயிலே... மயிலே...
அதுல்யா ரவி



**கீரீஸ் டப்பாவை எப்படி உதைச்ச..?@GreeseDabba2**

இந்திய பாஸ்போர்ட்டை
பார்த்தவுடன் நீங்கள் மோடியின்
தேசத்திலிருந்தா வருகிறீர்கள்
என்று வியப்புடன் கேட்கின்றனர் -
அமித்ஷா # ஏன்.. தடுப்பூசி
சர்டிபிகேட்ல போட்டது
பத்தாதுன்னு பாஸ்போர்ட்லயும் கூட
மோடி போட்டோ பிரிண்ட் பண்ணி
தர ஆரம்பிச்சுட்டாங்களா..?

**ச ப் பா ணி@manipmp**

ஒரு ஊர் உயிர்ப்புடன் இருக்கிறதா
இல்லையா என்பதை
டீக்கடைகளை வைத்தே அறியலாம்



**சரவணன். @saravankavi**

சமைச்சுப் போடற உப்புமாவை
சாப்பிட்டுக்கிட்டு அவங்க
சொல்றதுக்கெல்லாம் தலையை
ஆட்டி கேட்டுக்கிட்டு திட்டினா
அதையும் மௌனமாவோ
சிரிச்சுக்கிட்டோ
ஏத்துக்கறவங்களை எல்லாம்
பார்த்து சகிப்புத்தன்மையே
இல்லைன்னு சொல்றீங்களேடா...!
#சோமோட்டோ

**ஷேக்பரித் @FareethS**

''சார் நாங்க நார்த் இந்தியா வந்தா
என்ன பண்ணனும்''
''எங்களோட பேச நீங்க ஹிந்தி
கத்துக்கணும் ''
சரி நீங்க இங்கவந்தா
''உங்களோட நாங்க பேச
நீங்க ஹிந்தி கத்துக்கணும்''
''அதெப்புடி சார் இங்க வந்தா
நீங்கதான சார்
தமிழ் கத்துக்கணும்''

**மாஸ்டர் பீஸ் @Kannan_Twitz**

அழகென்பது முகம்சம்பந்தப்பட்டது
மட்டுமல்ல கேமரா தரம்
சம்பந்தப்பட்டதும் கூட!!!

**மெந்நிலா @_SUMI_Twitz_**

இவ்வுலகில் நிரந்தரமானது
ஏதுமில்லை என தெரிந்தும்,
நிரந்தரமாய் ஒட்டிக்கொல்கிறது
ஆசை... அதில் ஆகச்சிறந்த விஷம்
அன்பு..!!





**PrabuG@HariprabuGuru**
பாமக தலைமையில்தான் இனிமேல் கூட்டணி. கடைசி நேரத்தில் முடிவு மாறும் நிலை இருக்காது - டாக்டர் ராமதாஸ்.#அன்னைக்கு காலைல ஆறு மணி இருக்கும். கோழி கொக்கரக்கோன்னு கூவுச்சு..

**ரஹீம் கஸ்ஸாலி@RahimGazzali**
கட்சியை விட்டு, கட்சி தாவுவோர் இப்போதே சென்றுவிடுங்கள்- மருத்துவர் ராமதாஸ். #ஆமாம். கூட்டணியை விட்டு, கூட்டணி தாவுவோர் மட்டும் அவரோடு இருங்கள்.




**சரவணன். @saravankavi**
இந்திய பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அமெரிக்கா வரவேற்பு..!!- மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.#எது அந்த ஒரு கிலோ கொண்டைக்கடலை தர்றதா சொன்னீங்களே, அதுவா..!?

**balebalu@balebalu**
ஸ்பெயினில் 'அழுகை அறை' அறிமுகம் - செய்தி #நம்ம ஊர்ல இதுக்கு ன்னு தனியா ரூம் கட்ட தேவைஇல்லை... டிவி சீரியல் இருக்குற ஹால் போதும்!

**பூதம்@angry_birdu**
எல்லா மாநிலங்களிலும் இந்தியை திணிப்பதில் வட இந்திய அரசியல்வாதிகளை விட அதிக மும்முரமாக இருப்பது பெரு நிறுவனங்களே. இந்திய ஒன்றியம் முழுக்க ஒரே மொழி இருந்தால்தான் அவர்களுக்கு சந்தைப்படுத்துதல் எளிதாக இருக்கும்.

**செங்காந்தள்@kumarfaculty**
ஸ்மார்ட் போன் இருக்கும் வீட்டின் ப்ளக் பாயிண்டில் கூடு கட்டும் வாய்ப்பை இழந்து விட்டன குளவிகள்...!!!



**இதயவன்@itz_idhayavan**
அருமையான தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து உழைப்போம் ~ மோடி #பொறுங்க ஜி ஓவர் டைம் பார்க்காதீங்க இப்ப தான கேஸ் விலைய ஏத்துனீங்க?!



**PrabuG@HariprabuGuru**

ஜெ சமாதியில் சசிகலா
ஆதரவாளர்கள் 20 பேரிடம்
பிக்பாக்கெட் அடிப்பு.
#பர்ஸ்ல இன்னமும் அம்மா
போட்டோ இருக்கான்னு
பாக்கதான் எடுத்தேன் ஜட்ஜய்யா..

**கிரீஸ் டப்பாவை எப்படி உதைச்ச..? @GreeseDabba2**

சனிக்கிழமைகளை
ரசித்துக் கொண்டிருத்திருக்கும்
அதே வேளையில்,
திங்கட்கிழமைகளுக்கு மனதை
தயார்படுத்திக் கொள்வதே,
ஜென்நிலை என்று அறியப்படும்.

**Naveen Kumar@navi_n**

ஹிந்தி தெரியாதவர்களை விட
'ஹிந்தி தேசிய மொழியில்லை'
என்பது தெரியாதவர்கள் தான்
நாட்டில் அதிகம் ~!

**சரவணன். @saravankavi**


'ஒரே ஒரு ஆள் வந்தார்,
மொத்தத்தையும் மாத்திட்டார்'
என்பது சிறப்பாக
செயல்பட்டவருக்கு பாராட்டாகவும்
செயல்படாதவருக்கு குறையாகவும்
அமைந்து விடுகிறது...!!!

**சிந்தனைவாதி@PARITHITAMIL**

'இந்தியாவில் சாதாரண
வாகனங்களுக்கு போடுகிற
பெட்ரோலை விட
விமானங்களுக்கு போடுகின்ற
பெட்ரோல் விலை குறைவு-
ஒன்றிய எரிசக்தி துறை அமைச்சர்
தர்மேந்திரா பிரதான்
# இது சாதாரண மக்களுக்கான
அரசு இல்லையாம் விமானத்தில
போறவங்க அரசாம். சாவுங்க
சாதாரணமானவர்களே..

**ச ப் பா ணி@manipmp**

மனசுக்கு பிடிச்சவங்க அறிவுரை
சொன்னாதான் ஆறுதல்..மற்றவர்
சொல்வதெல்லாம் advice
என்றறிக




தொகுப்பு: ஊர்க்காத்தான்



# நார்வே

# முதல் தமிழ் எம்.பி.!



ஸ்டோர்டிங் என்று அழைக்கப்படும் நார்வே நாடாளுமன்றத்திற்கு அண்மையில் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 169 ஆகும். அறுதிப் பெரும்பான்மைக்கு 85 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

இதனால் 48 இடங்களில் வெற்றி பெற்ற தொழிலாளர் கட்சி 28 இடங்களில் வெற்றி பெற்ற மையக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து மைனாரிட்டி அரசை அமைத்தது.




தொழிலாளர் கட்சித் தலைவர் ஜோனஸ் ககர் ஸ்டோர் பிரதமராக பதவியேற்றுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கையைச் சேர்ந்த தமிழச்சியான கம்சாயினி குணரத்தினம் வெற்றி பெற்றது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. நார்வே நாடாளுமன்றத்திற்கு தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஒருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

கம்சாயினி குணரத்தினம் 1988-ம் ஆண்டு மார்ச் 27-ம் தேதி யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தர்மடம் என்ற ஊரில் பிறந்தவர் ஆவார். தனது 3-வது வயதில் பெற்றோருடன் நார்வேக்கு அவர் புலம்பெயர்ந்தார்.

அவர் ஓசுலோ பல்கலைக் கழகத்தில் சமூகப் புவியியலில் பட்டம் பெற்றார். சுமார் 10 ஆண்டுளுக்கு முன்பு தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அவர் ஆளானார். ஆனால் தாக்குதல் நடைபெற்ற உத்தாயா தீவில் இருந்து கடலில் குதித்து நீந்தி அவர் தப்பிவிட்டார். இது அவரது சமயோஜிதத்தையும் துரித செயல்பாட்டையும் துல்லியமாகப் பிரதிபலிக்கிறது.

தொழிலாளர் கட்சியில் சேர்ந்த அவர் படிப்படியாக முன்னேறினார். ஓசுலோ மாநகரக் கட்சிக் கிளையின் துணைத் தலைவராகவும் இளைஞர் பிரிவுத் தலைவராகவும் அவர் செயல்பட்டு வருகிறார். ஓசுலோ மாநகர சபையின் உறுப்பினர் பதவிக்கான தேர்தலில் 2007-ல் போட்டியிட்ட அவர் வாகை சூடினார்.

தேர்தல் அரசியலில் அவர் பெற்ற முதல் வெற்றி இது தான். 2015-ம் ஆண்டு ஓசுலோ மாநகர சபையின் துணைத் தலைவராக அவர் பதவியேற்றார்.

- உழுவல் மொழி

தமிழ் (ஈழத்)

தலைவன் கதை -18



# சிங்களரின் இனவெறிக்கு எதிராக திரண்ட மாணவர்கள்....


யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் வெகுதூரமாக தலைநகர் கொழும்பிற்கு கொண்டுசெல்லப்பட்டதே... சிங்களரை உசுப்பிவிட்டு கலவரத்துக்கு தயார்படுத்தத்தான் என்பதை அடுத்து நடந்த சம்பவங்கள் நிரூபித்தன.

அதோடு ஜனாதிபதி ஜே .ஆர்.ஜெயவர்த்தனே கொழும்பில் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்தார். அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களுக்கும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது .

ஊடகங்கள் தணிக்கைக்குட் படுத்தப்பட்டன. இதனால் உண்மை நிலவரத்தை ஊரார் அறியமுடியவில்லை. கொழும்பில் இருந்த வெளிநாட்டு செய்தியாளர்கள் கூட கடுமையாகக் கண்காணிக்கப்பட்டனர். அவர்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து வெளிவரவும் அனுமதி மறுக்கப்பட்டது. மீறிச் செயற்பட்ட வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வெளியேற்றப்பட்டனர் .

கண்டி, நுவரேலியா, திருகோணமலை, குருநாகல், இரத்தினபுரி, பலாங்கொடை முதலான பிரதேசங்களில் கலவரம் உருவாக்கப்பட்டது. திருகோணமலை சந்தை தரைமட்டமானது.

தமிழர்களை தேடித் தேடி தாக்குதல் நடத்தினர். ஆயிரத்துக்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். கொழும்பு மற்றும் தென் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களுக்கு சொந்தமான வணிக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. வயோதிகர், பெண்கள், சிறுவர்கள் என்ற பேதமின்றி



ஜெயவர்த்தனே


சித்திரவதை செய்யப்பட்டனர். பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவினர்.

கோயில்கள், பள்ளிகள் எங்கும் தமிழர்கள் தஞ்சமடைந்தனர். ஆயிரக்கணக்கான தமிழர்களை அரசாங்கத்தாரே கப்பலேற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர்.

அதற்கு முன்புதான் தொடர்ச்சியான அரசாங்கத்தின் தேடலின் காரணமாக குட்டிமணியும் தங்க துரையும் இந்தியாவிற்கு தப்பி வர முயற்சிக்க, பருத்திதுறைக்கு அருகே உள்ள மணல்காடு என்ற இடத்தில் வைத்து ஆட்சியாளர்களால் கைது செய்யப் பட்டனர்.

அவர்கள் வைக்கப்பட்டிருந்த கொழும்பு - வெலிகடை சிறைச்சாலையில் சிங்கள கைதிககளுக்கு ஆயுதம் கொடுத்து தமிழ் கைதிகளை அடித்தும், வெட்டியும் கொன்றனர். குட்டிமணி உட்பட 53 பேர்களை கொன்றதோடு, ‘தனது மரணத்திற்கு பிறகு பார்வையற்ற ஒருவருக்கு தனது கண்கள் பொருத்தப்பட

வேண்டும். தன்னால் காண முடியாத சுதந்திர தமிழீழத்தை தனது கண்கள் காணட்டும்' எனக் கூறியிருந்த அவரது கண்களை கூரிய கம்பியால் தோண்டி எடுத்து கால்களில் போட்டு மிதித்து ஆரவாரமிட்டனர் .


லலித் அதுலத் முதலி

இந்த கலவரத்தின் பின்பு தமிழர்கள் இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டு பெரும்பாலான தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

பிரிட்டன் பத்திரிகைக்கு பேட்டியளித்த ஜெயவர்த்தனே, ''யாழ்ப்பாணக்காரர்களைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்க முடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியும் கவலையில்லை'' என பகிரங்கமாக வெறுப்பை வெளிப்படுத்தினார்.

கலவரத்தை கட்டுப்படுத்த போலீசாரோ, ராணுவத்தாரோ ஏன் முயலவில்லை என்றதற்கு, ''படையினரிடம் பெரிய அளவில் தமிழர்களுக்கு எதிரான உணர்வு ஏற்பட்டிருந்தது என நான் நினைக்கிறேன். கலகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினால், அது சிங்களவர்களுக்கு எதிரான நடவடிக்கையாகப் போய்விடும் என்றும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள்' என பட்டவர்த்தனமாக கூறினார்.

தமிழ்நாட்டிலும், உலகத் தமிழர் நடுவிலும் இந்த கலவரம் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது. இலங்கை அரசுக்கெதிரான பேரணி, ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டன.

இந்த இனவெறிக்கலவரத்தால் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தில் பெருவாரியான இளைஞர்கள் இணைந்தனர்.

பிறிதொன்றும் நிகழ்ந்தது. இந்த இனக்கலவரத்துக்கு எதிர்வினையாற்றிய புரட்சிப்பெண் ஒருவர் பின்னாளில் தலைவர் பிரபாகரனுக்கு துணைவியானார்.

ஜூலை இனக்கலவரத்தால் சிங்கள் பகுதிகளில் நடந்த இனக்கலவரத்தில் உயிர் உடமை இழந்தவர்கள்




ஈழத்துக்கு வந்திருந்தனர். மற்றவர்களை பற்றி பிரச்சினை இல்லை. ஆனால், சிங்கள பகுதிகளில் பயின்று கொண்டிருந்த தமிழ் மாணவர்கள் மீண்டும் சிங்கள பகுதிகளுக்கே செல்ல வேண்டிய நிலை உருவானது.

பாதுகாப்பில்லாத சூழலில் மாணவர்கள் கல்வியை எப்படி தொடர முடியும்? எனவே, அவர்களை வடக்கே உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் படிப்பை தொடர வாய்ப்பை ஏற்படுத்தி தரவேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஆனால், அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் பேராதனை கட்டுபத்து பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஒன்பது தமிழ் மாணவர்கள் 09-01-84 முதல் சாகும் வரை பட்டினி கிடக்க தீர்மானித்தனர். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் புங்குடுதீவு பள்ளி ஆசிரியர் ஏரம்புவின் மகளான மதிவதனி.

இந்த போராட்டத்துக்கு அனைத்துக்கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் அமோக ஆதரவளித்தனர். எனவே, போராட்டத்துக்கு ஆதரவாக யாழ் நகரம் முழுவதும் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது.

மதிவதனி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தாலும், தன்னுடன் இருந்த சக மாணவிகளுக்கு வேண்டிய உதவிகளை அவரே செய்தார். மூன்று வேளை உண்ணாமல் இருந்த நிலையில் , அந்த களைப்பை கடுகளவும் காட்டிக்கொள்ளாமல் புன்னகையுடன் சக போராட்டக்காரர்களுக்கு உதவினார். இது பிரபாகரனின் பாணி. மதிவதனியின் இந்த போராட்ட ஒருங்கிணைப்பால் போராடியவர்கள் மட்டுமின்றி, போராட்டத்துக்கு ஆதரவாக தினமும் கூடிய மாணவர்களுக்கும் அவர்

தலைவியாக காட்சியளித்தார்.

தொடக்கத்தில் போராட்டத்தை ஜெயவர்த்தனே அரசு கண்டு கொள்ளவில்லை. லலித் அதுலத் முதலி, 'அந்த மாணவர்கள் சாவதைப் பற்றி எந்த கவலையும் இல்லை' என்று அலட்சியமாக பேட்டியளித்தார்.

ஆனால், ஹர்த்தால், கல்லூரி புறக்கணிப்பு என மக்களும் மாணவர்களும் போராட்ட ஜோதியில் கலந்தனர். மாணவர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக துண்டுப்பிரசரம் விநியோகித்த ராஜ்மோகன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதையடுத்து யாழ் பல்கலைகழகத்தை மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் போராட்டம் தொடர்ந்தது.

உண்ணாவிரதத்தின் ஆறாம் நாள் மாலை மாணவர்களை பரிசோதித்த மருத்துவர், மாணவி ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்று தெரிந்ததும் பதற்றம் தொற்றிக்கொண்டது. வீணாக விமர்சனங்களை எதிர்கொள்ளவேண்டாம் என்று


மதிவதனி

அரசு முடிவெடுத்தது.

போராட்டம் ஏழாவது நாளை நெருங்கிய போது மாணவர்கள் ஒன்பதுபேரும் சோர்வாக இருந்தார்கள் . சிங்கள அரசு பல்கலை கழகத்துள் புகுந்து உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களை கைது செய்ய முயன்றது.

ஆனாலும், சுற்றிநின்ற மாணவர் சக்தி சூறாவளியாக சுழல, போலீசார் கரையொதுங்கினர்.

மறுநாள் எப்படியும் பல்கலைக் கழகத்துக்குள் ராணுவம் நுழைந்துவிடும். அது துப்பாக்கி சூடு நடத்தக்கூட துணியலாம் என்று பதற்றத்துடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் மாணவர்கள் அரணாக நின்று அவர்கள் கைதாவதை தடுக்க முடிவெடுக்கப்பட்டது.

அதற்குள் ராணுவம், போலீஸ், நிர்வாக அதிகாரிகள் அனைவரையும் கடந்து, அனைத்து கெடுபிடிகளையும் தாண்டிபல்கலைக்கழகத்துக்குள் புகுந்தனர் புலிகள். அன்றிரவே உண்ணாவிரதமிருந்த மாணவர்களை காணவில்லை.

**(தொடரும்)**

**-வரிப்பையூரான்**



# திட்டம் போட்டு வேலை பார்க்கிறது கஷ்டம்!

**- நடிகை ஷிவானி ராஜசேகர்**

தெலுங்கு நடிகர் ராஜசேகரின் மகளான ஷிவானி ராஜசேகர், தமிழில் அருண்ராஜா காமராஜ் இயக்கத்தில் உதயநிதி நடிக்கும் படத்தில் முக்கியமான ரோலில் நடிக்கிறார். இந்தியில் ஹிட் அடித்த ‘ஆர்டிகல் 15’ தமிழ் ரீமேக்குக்கு நெஞ்சுக்கு நீதி என்று டைட்டில் வைத்திருகிறார்கள். டாக்டருக்கு படித்துக் கொண்டே, அப்பாவின் பட வேலைகளையும் பார்த்துக் கொண்டு நடிப்பில் கவனம் செலுத்தி வரும் ஷிவானியுடன் ஒரு அழகான சிட்சாட்.

**ஒரே நேரத்தில் பல வேலைகளை எப்படி உங்களால செய்ய முடியுது?**

நான் முதல் வருஷம் மெடிசன் படிக்கும் போது ரொம்ப ப்ரீயா, ஜாலியா இருந்தேன். நினைச்சதை செய்ய முடிஞ்சது. ரெண்டாவது வருஷம் படிக்கும் போது தான் நடிக்க ஆரம்பிச்சேன். அதுக்குப்பிறகு ஒவ்வொரு நாளும் திட்டம் போட்டு வொர்க் பண்றது ரொம்ப கஷ்டமான விஷயமா மாறிடுச்சு. எதிர்காலம் இவ்வளவு சவாலானதா இருக்கும்'னு அப்போ எனக்கு புரியல.



**கொரோனா காலகட்டத்தை எப்படி கடந்து வந்தீங்க?**

போன வருஷம் நான் எம்.பி.பி.எஸ் 3வது இயர் படிக்கும் போது தான் ரொம்பவும் கஷ்டமான தருணத்தை கடந்து வந்தேன். அப்போ, நான், என் அப்பா, அம்மா, தங்கைன்னு குடும்பத்தில் எல்லாருக்கும் கொரோனா பாதிப்பு வந்தது. நாங்க மூணு பேரும் குணமாகிட்டாலும், அப்பா ஹெல்த் ரொம்ப கிரிட்டிகல் ஆகிடுச்சு. அந்த சமயத்தில் உடலளவிலும், மனதளவிலும் ஏற்பட்ட கஷ்டம் ரொம்பவே அதிகம். பல நாட்கள் ஹாஸ்பிடலில் இருந்து தான் படிச்சேன். கொரோனாவில் இருந்து குணமானதும் என கவனம் முழுக்க படிப்பில் தான் இருந்தது.

**அப்பாவோட பட வேலைகளை கவனிச்சிக்கிறது பத்தி?**

நானும் தங்கை ஷிவாத்மிகாவும் எங்களோட படங்களை விட, எங்க அப்பாவோட படங்கள்'னா ரொம்ப குஷியோட வொர்க் பண்ணுவோம். 2017-ம்

வருஷம் பி.எஸ்.வி. கருடா வேகா படம் எடுத்தப்போ, குடும்பமா ஒண்ணா சேர்ந்து வொர்க் பண்ணோம். அம்மா, அப்பாவோட ஹெல்த்தை கவனிச்சிக்கிட்டாங்க. நானும், தங்கையும் ஷூட்டிங், அப்புறம் போஸ்ட் - புரொடக்ஷன் வேலைகளை பார்த்துக்கிட்டோம். சின்ன வயசில் இருந்தே ஷூட்டிங் ஸ்பாட் பார்த்திருக்கோம், புரொடக்ஷன் ஹவுஸ் வச்சிருக்கோம். அதனால பட வேலைகளில் பயமில்லாம ஈடுபட முடிஞ்சது.

**தயாரிப்பு வேலைகளில் இறங்குறது எவ்வளவு சவாலானது?**

பல தரப்பட்ட கலைஞர்களையும், அவங்களோட ஐடியாலஜியும் ஒரே இடத்தில் சரியா கொண்டு போய் சேர்க்கணும். ஒரு இயக்குனரோட விஷன் என்னன்னு புரிஞ்சிகிட்டு அதுக்கு தேவையான சப்போர்ட் கொடுக்கணும். ஆக்டிங், கேமரா, எடிட்டிங், மியூசிக், டைரக்ஷன்'ன்னு எல்லா கலைஞர்கள்கிட்ட இருந்தும் சரியான அவுட் வாங்குறது அவ்வளவு ஈஸி இல்ல.

**நடிப்பு, தயாரிப்பு இரண்டில் எது இஷ்டம்?**

என் சினிமா கெரியரில்





நடிப்பு, தயாரிப்பு இரண்டும் ஒரு நாணயத்தோட இரண்டு பக்கங்கள் மாதிரி ஆகிடுச்சு. தயாரிப்பில் ஒரு படத்தோட அத்தனை செலவும் நம்ம தலையில் தான் விழும். எல்லாத்தையும் பார்த்து பார்த்து செய்ய வேண்டியிருக்கும். நடிப்பைப் பொறுத்த வரைக்கும் நம்ம திறமையை வெளிப்படுத்தினா போதுமானது. எனக்கு ரெண்டுமே பிடிச்சிருக்கு

**உங்க சினிமா கெரியருக்கு குடும்பத்தில் இருந்து எந்த அளவுக்கு சப்போர்ட் கிடைக்குது?**

எனக்கு எதுவா இருந்தாலும் குடும்பம் தான் பர்ஸ்ட். என்னோட அப்பா, அம்மா எனக்கு கொடுக்குற ஊக்கமும், அவங்க எனக்காக செஞ்ச தியாகமும் ரொம்ப பெரிசு. அதுக்காக நிறைய சாதிக்கணும், அவங்களை பெருமைப்படுத்தனும்'னு ஆசைப்படுறேன்.

**நீங்க நடிச்சிட்டிருக்குற படங்களைப் பத்தி?**

இப்போதைக்கு 'நெஞ்சுக்கு நீதி' உள்பட ரெண்டு தமிழ் படங்களில் நடிக்குறேன். அப்புறம் ஒரு தெலுங்கு படத்தோட ஷூட்டிங் சீக்கிரம் ஆரம்பிக்கப் போகுது.

–தவா.




# கிருஸ்துமஸ் ரிலீஸ்



நடிகர் நானி, நடிகைகள் சாய் பல்லவி, கீர்த்திஷெட்டி, மடோனா செபாஸ்டியன் என பலரும் நடித்துள்ள படம் ஷ்யாம் ஷிங்கா ராய். இந்தப் படம் தெலுங்கு மட்டுமல்லாது தமிழ், கன்னடம் மலையாள மொழிகளிலும் டப் செய்யப்பட உள்ளது.

கிருஸ்துமஸ் பண்டிகையையொட்டி டிச 24-ந்தேதி இந்த படம் ரிலீசாகும் என்று அதிகாரப்பூர்வமாக படக்குழு அறிவித்துள்ளது. கொல்கத்தாவை கதைக்களமாக கொண்டு எடுக்கப்பட்டுள்ள இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் பேருந்து மீது சாய்பல்லவி நடனம் ஆடும் டீசர் அண்மையில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. சூர்யாவின் எதற்கும் துணிந்தவன், ரன்வீர்சிங் நடிப்பில் கபில்தேவ் பயோபிக் படமான 83 வெளியாகும் அதே நாளில் நானி படம் ரிலீசாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

# அபர்ணாவின் கண்டாங்கி சேலை



சூரரைப் போற்று படத்தில் சூர்யாவின் நடிப்புக்கு இணையாக அபர்ணா பாலமுரளியின் பொம்மி கேரக்டர் பேசப்பட்டது. அடுத்து பிரித்திவிராஜின் ஆடுஜீவிதம் படத்தில் நடித்துள்ள அபர்ணா, அசோக் செல்வன் நடிக்கும் புதிய திரைப்படத்தின் மூன்று கதாநாயகிகளில் ஒருவராக நடிக்கிறார்.

நடிப்புக்கு மத்தியில் பல பாடல்களையும் பாடி யூடியூபில் பதிவிட்டு வரும் 'அபர்ணா' அவ்வப்போது மற்ற நடிகைகளைப் போல (கிளாமர், கவர்ச்சி இல்லாமல்) போட்டோஷூட்டும் நடத்துகிறார். இவர் தற்போது தலைநிறைய கனகாம்பரம் பூ வைத்துக் கொண்டு கண்டாங்கி சேலை உடுத்திக் கொண்டு போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்களுக்கு இன்ஸ்டாவில் லைக்ஸ் குவிந்து வருகிறது.

# உயிர் தொடும் அமுதம் நீ!



அந்த பூஞ்சோலை கிராமம் பெயருக்கேற்றாற் போல் பசுமை போர்த்தி காணப்பட்டது. கிராமத்தை ஒட்டிச் செல்லும் ஏரி. அந்த இடத்தை குளுமைப்படுத்தி அந்த கிராமத்திற்கே ஒரு அழகை தந்தது.

–பரிமளா ராஜேந்திரன்

சுற்றிலும் மரம், செடி, கொடிகளுடன் உள்ளடங்கி இருந்த பண்ணை வீட்டிற்கு சொந்தக்காரனான சண்முகம் வாசல் திண்ணையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

''இன்னைக்கு தேங்காய் பறிக்க டவுனிலிருந்து ஆள் வர்றாங்க இல்லையா ஏழுமலை''

தோட்டத்தை பெருக்கி கொண்டிருந்த ஏழுமலை வேலையில் ஈடுபட்டபடியே

''ஆமாங்க ஐயா. பதினொரு மணிக்கு வந்திடுவாங்க. இதோ பத்து நிமிஷம் முடிச்சுட்டு தோப்புக்கு கிளம்பிடறேன். நீங்க மெதுவா வாங்க''

''சாப்பிட்டியா ஏழுமலை''

''நேரத்துக்கு சாப்பிடலைன்னா... அம்மா கோபப்படுவாங்க. எதுக்காக உழைக்கிறோம். எல்லாம் இந்த வயித்துக்குத்தான்னு அம்மா சொல்வாங்க. மகாராசி அவங்க கையால இட்லி, சாம்பார் திவ்யமா சாப்பிட்டேன்''

சிரித்தபடி அவனை பார்க்கிறார். ரொம்ப வருஷமாக அவரிடம் வேலை பார்ப்பவன் விசுவாசமானவன்.

''ஐயா, நாளைக்கு ஊரிலிருந்து தம்பிங்க குடும்பத்தோட வர்றதாக அம்மா சொன்னாங்க. இளநீர் குலை நாலைஞ்சு பறிக்க சொல்லி வீட்டுக்கு கொண்டு வரணும்''

பேசியபடி பின்பக்கம் போக,

வாசலுக்கு வருகிறாள் வைதேகி.

''என்ன வைதேகி முகத்தில் ஒரு ஜொலிப்பு தெரியுது. உன் மகன்கள் வரப்போகிற சந்தோஷமா...''

''பின்னே இருக்காதா... இரண்டு பேரும் ஊர் பக்கம் வந்து ஆறு மாசமாச்சு. நம்ப கிரி மகனுக்கு ஒன்றரை வயசாயிருக்கும். குழந்தை பிடிச்சிட்டு நடப்பதாக சொன்னான். பேரனையும், பேத்தியையும் பார்க்கணும்னு மனசு தவிக்குது''

''ரகு பேசினானா வைதேகி''

''எப்படியும் மதியம் சாப்பாட்டிற்குள் வர்றதாக சொன்னான் இரண்டு பேரும் காரில் தானே வர்றாங்க. வந்திடுவாங்க''

அவள் குரலில் வருத்தம் தெரிகிறது

''ஏன்ம்மா பெரிய மகன் ரகுவை நினைச்சதும் மனசு வேதனை படுதா''

''ஆமாங்க மனசுக்கு கஷ்டமாக இருக்கு. இரண்டு பிள்ளைகளையும் அருமை, பெருமையாக வளர்த்தோம். பெரியவன் டாக்டராகவும், சின்னவன் என்ஜினீயராகவும் நம்மை பெருமைப்பட வச்சாங்க. குறை சொல்ல முடியாத தங்கமான பிள்ளைகள்.

நமக்கு வந்த மருமகள்களும் அப்படியே. அன்பும், பாசமுமாக பழகறாங்க. எல்லாம் இருந்தும் சின்னவனுக்கு இரண்டு குழந்தைகளை கொடுத்த கடவுள், பெரியவனுக்கு கல்யாணமாகி அஞ்சு வருஷம் ஆகியும், இன்னும் குழந்தை பாக்கியத்தை தரலையே அதை நினைக்கும்போது மனசு வேதனைப்படுதுங்க''

''வருத்தப்படாதே. கால தாமதமானாலும் கடவுள் நிச்சயம் நல்லதை செய்வாரு. இப்ப டிரீட் மெண்டில் இருப்பதாக ரகு சொன்னான் இல்லையா. இப்ப நேரில் வரும்போது நிச்சயம் நல்ல செய்தி சொல்வாங்க.''

''உங்க வாக்கு முகூர்த்தம் பலிக்கட்டும். நம்ப காத்தாயி அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்யறேன்''

சண்முகம், வைதேகிக்கு ரகுவரன், கிரிதரன் இரண்டு பிள்ளைகள். ரகுவரன் டாக்டருக்கு படித்து திருச்சியில் நர்சிங் ஹோம் வைத்து நடத்திக் கொண்டிருக்க கிரிதரன் கோயமுத்தூரில் ஐ.டி.கம்பெனியில் வேலை பார்த்தான்.

ரகுவரன் திருமணமானவுடன் அப்பா, அம்மவை தன்னுடன் வந்து இருக்கும்படி அழைத்தான்.

''இல்லப்பா. எங்களோட வாழ்க்கை இந்த கிராமத்திலேன்னு முடிவாகிடுச்சு. வயல்வரப்பு, தோட்டம்னு பராமரிக்கணும். நமக்கு சோறு போட்ட பூமி. நம்மை நம்பி நாலு குடும்பங்கள் பிழைக்குது. உடம்பில் தெம்பு இருக்கிற வரை. இப்படியே ஓட்டுறோம். உங்க காலத்தில் எப்படி பண்றதுன்னு யோசிங்க.

உங்க வாழ்க்கையில் முன்னேற்றத்தை பாருங்க. பிள்ளைகளை நல்ல முறையில் ஆளாக்கியிருக்கோம்ங்கற திருப்தி உங்களுக்கு இருக்கும்ப்பா''

ரகுவுக்கு திருமணமாகி இரண்டு வருடத்தில் நல்ல சம்பந்தம் வர, கிரிதரனின் திருமணத்தை சிறப்பாக முடித்தார்கள்.

கிரிதரனுக்கு திருமணமாகி மூன்று வருடத்தில் இரண்டு குழந்தைகள் ஆண் ஒன்றும், பெண் ஒன்றுமாக பிறக்க, ரகுவரனுக்கு ஐந்து வருடமாகியும் குழந்தை பிராப்தம் இல்லாதது, எல்லாருக்குமே பெரிய குறையாக இருந்தது.

★★★

கார் பூஞ்சோலை கிராமத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. டிரைவர் சீட்டில் உட்கார்ந்திருந்த ரகு யோசனையுடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அருகில் அமர்ந்திருக்கும் நந்தினி கணவனை கவனித்தாள். அழகில் குறை சொல்ல முடியாதவன். நல்ல உயரம். உயரத்திற்கேற்ற உடலமைப்பு. அடர்த்தியான மீசையும், குறுந்தாடியும் அவன் அழகை மிகைப்படுத்தி காட்டியது.

''நந்தினி என்ன என்னையே பார்க்கிற மாதிரி தெரியுது''

''ஆமாம் என் புருஷன் எவ்வளவு அழகுன்னு ரசிச்சேன்''

''என்ன பண்றது, என் அழகோடு ஒப்பிடும்போது நீ சுமார் தான் இருந்தாலும் பரவாயில்லை நீயும்பார்க்கிற மாதிரி இருக்கே''

குறும்பு சிரிப்போடு சொல்கிறான்.

திடீரென்று சிரிப்புடன் இருந்த நந்தினியின் முகபாவம் மாறுவதை கவனித்தவன்.

''நந்தினி... என்னாச்சு ஜாலியாக பேசிட்டு போயிட்டு இருக்கோம் மூட் அவுட் ஆகிறே''

''உங்க மனசில் மட்டும் வருத்தம் இல்லையா. அதை மறைக்க தானே இப்படி பேசறீங்க''

''ப்ளீஸ்... நந்தினி உன்கிட்டே இதோடு எத்தனையோ முறை சொல்லிட்டேன். குழந்தைங்கிறது நம் வாழ்க்கையின் ஒரு அங்கமே தவிர, அதுவே வாழ்க்கை ஆகிடாது.

''நமக்கு வாழ்க்கையில் கிடைச்சுருக்கிற மற்ற நல்ல விஷயங்களை நினைச்சு சந்தோஷமாக வாழலாம் நந்தினி''

''நீங்க என்ன தான் சமாதானம் சொன்னாலும் எனக்குள் ஒரு குற்ற உணர்வு தோணுதுங்க. எனக்குள் இப்படி ஒரு குறை இருக்கும்னு தெரியலை.''

எப்படியாவது குழந்தை பிறந்திடும்னு நம்பிக்கையோடு டீரிட்மெண்ட் ஆரம்பித்தோம். கடைசியில் கடவுள் கை விரிச்சுட்டாரு''

அவள் குரல் உடைந்து ஒலித்தது.

உன் வயிற்றில் உருவாகும் கருமுட்டைக்கு ஒரு குழந்தையை உருவாக்கும் திறன் இல்லைன்னு தெரிஞ்சப்ப நானும் தான் உடைஞ்சு போயிட்டேன். ஒரு டாக்டராக என்னை நானே சமாதானம் பண்ணிக்கிட்டேன்.

என் நந்தினியால் ஒரு குழந்தைக்கு தாயாக முடியலைன்னாலும் ஒரு நல்ல மனைவியாக என்னோடு கடைசி வரை வாழ்ந்தால் போதும்னு முடிவு பண்ணிட்டேன்.

நமக்கு குழந்தை வேண்டாம் நந்தினி. உனக்கு நானும் எனக்கு நீயுமாக வாழ்ந்துட்டு போவோம்''

''உங்ககிட்டே எந்த குறையும் இல்லையே ஒரு குழந்தைக்கு அப்பாவாகிற தகுதி உங்க கிட்டே இருக்கு. அதை நான் தட்டி பறிச்சுட்டேன்.

இப்பவும் சொல்றேன் நீங்க வேறு ஏதும் முடிவு எடுத்தாலும் அதற்கு முழு மனசோடு சம்மதிக்க தயாராக இருக்கேன்.''

அவள் சொல்லி முடிக்க நடுத்தெரு என்றும் பார்க்காமல் சட்டென்று காரை ப்ரேக் போட்டு நிறுத்தினான்.

''இப்ப கிராமத்துக்கு போகலாமா இல்லை திரும்ப ஊருக்கு திரும்பிடலாமா''

அவன் குரலில் கோபம் தெரிந்தது.

''ஐயோ என்ன சொல்லிட்டேன்னு இவ்வளவு கோபப்படறீங்க''

வேண்டாம் நந்தினி இனி இப்படியொரு முறை சொல்லாதே.

எனக்கு ஏதாவது குறை இருந்தா நீ இன்னொரு கல்யாணம் பண்ணிப்பியா அப்ப நாம் வாழ்ந்த இந்த ஐந்து வருட வாழ்க்கையின் அர்த்தம் என்ன நந்தினி

எனக்கு குழந்தையில்லைங்கிறது ஒரு பிரச்சனை இல்லை. நீயும் நானும் மனநிம்மதியோடு வாழ்ந்தால் போதும்.

அப்பா அம்மாவை பார்த்துட்டு தம்பி குடும்பத்தோடு ஒரு நாலு நாட்கள் சந்தோஷமாக இருந்துட்டு வரலாம்னு புறப்பட்டிருக்கோம்.

உனக்கு இஷ்டமில்லைன்னா திரும்ப ஊருக்கே போயிடலாம்''.

''ஸாரி ஸாரிங்க தப்பா தான் பேசிட்டேன். சத்தியமா இந்த நந்தினி இந்த அழகான புருஷனை ரசிச்சுக்கிட்டு காலமெல்லாம் கூட வருவா எனக்கு நீங்க மட்டும் போதுங்க''

மனம் விம்ம சொல்பவளை தோள் சேர்த்து அணைத்தவன்

''இப்ப தான் நீ என்னோட நந்தினி போகலாமா''

காரை ஸ்டார்ட் செய்ய நந்தினி கவலை மறந்து சிரிக்கிறாள்.

★★★

கார் வந்து நிற்க,

குழந்தையை தூக்கியபடி புவனா இறங்க சீட்டில் உட்கார்ந்திருந்த மூன்று வயது மகள் அதிதியை இறக்கி விட்ட கிரி

''ஓடு ஓடு தாத்தா, பாட்டி வீடு வந்தாச்சு'' சொல்ல தளிர் நடை பயின்று வரும் பேத்தியை எதிரில் வந்து வாரி அணைக்கிறார் சண்முகம்.

கார் சப்தம் கேட்டு வாசலுக்கு வந்த வைதேகி. புவனாவிடமிருந்து குழந்தையை வாங்குகிறாள்.

''வாங்க வாங்க பர்ஸ்ட் பர்த்டே இங்கே கொண்டாடும்போது பார்த்தது. குழந்தை பெரியவனாகிட்டானே. அஜய் என்னடா கண்ணா இந்த பாட்டியை அடையாளம் தெரியுதா

குழந்தையின் நெற்றியில் முத்தமிட்டவள்

பேத்தியை பார்த்து

''அதிதி குட்டி எப்படிடா இருக்கே செல்லம்''

''நான் நல்லா இருக்கேன் பாட்டி. நான் சமர்த்து ஆனால் தம்பி பாப்பா தான் விஷமம் பண்றான்.''

பெரிய மனுஷத்தனமாக பதில் சொல்ல

சண்முகம் பேத்தியின் கன்னத்தில் முத்தமிட

''அம்மா அப்பா வாங்க முதலில் எல்லாரும் உள்ளே போகலாம் பேரன், பேத்தியை பார்த்த சந்தோஷத்தில் எங்களை வாசலிலேயே நிக்க வச்சுட்டீங்க''

சிரிப்புடன் சொன்ன கிரி, பெட்டியுடன் உள்ளே போக அனைவரும் அவனை தொடர்கிறார்கள்.

★★★

''கோயமுத்தூரிலிருந்து நாங்க வந்துட்டோம். இன்னும் ரகு வர்றலையே எப்ப கிளம்பினான். போன் பண்ணினானா''

''மதியம் சாப்பாட்டிற்குள் வந்துடுவான் என்ன பண்றது அவன் தொழில் அப்படி''

சொன்ன சண்முகம் பேத்தி பேரனை கொஞ்சுவதில் மும்முரமாக வைதேகி, மருமகளுடன் சமையல் அறைக்கு போகிறாள்.

''எல்லோரும் ரகுவரனின் வரவை எதிர்பார்த்து. சாப்பிடாமல் காத்திருக்க இரண்டு மணிக்கு வீட்டிற்குள் வருகிறான்.

காரிலிருந்து இறங்குபவர்களை எல்லோரும் வரவேற்க நந்தினி முதலில் மாமியாரிடம் இருக்கும் குழந்தையை வாங்கி கன்னத்தில் மாறி மாறி முத்தமிடுகிறாள்.

என் செல்லம் பர்த்டே அப்ப பார்த்தது பாரேன் முகமெல்லாம் கூட மாறிப் போச்சு. புவனா அப்படியே உன்னை மாதிரியே இருக்கான்.''

நந்தினி சொல்ல

''அண்ணி பசி உயிர் போகுது. வாங்க முதல்ல சாப்பிடலாம் உங்களுக்காக தான் வெயிட்டிங். அம்மா செய்த மட்டன் பிரியாணி சாப்பிட வா வான்னு கூப்பிடுது.''

கிரி சிரித்தபடி சொல்ல,

தம்பியின் தோள் மீது கை போட்டு பேசியபடி உள்ளே போகிறான் ரகு.

வீடு கலகலப்பாகவும் சிரிப்புமாக நிறைந்திருக்க இரவு சாப்பாட்டிற்கு பிறகு வாசலில் நிலவொளியில் வந்து உட்காருகிறார்கள்.

''அப்பா நம்ப கிராமத்திற்கு வந்தாலே மனசுக்கு தனி நிறைவு கிடைக்குதுப்பா. ஜன சந்தடி இல்லாமல் மரங்கள் சூழ அமைஞ்ச நம் வீடு, சில்லென்ற காற்று குடும்பத்தோடு இருக்கிற மகிழ்ச்சி இதெல்லாமே அங்க என்னன்னு தெரியலை.

நாங்க எவ்வளவு தான் சம்பாதித்து வசதி வாய்ப்புகளோடு வாழ்ந்தாலும் இந்த நிறைவு கிடைக்கிறதில்லப்பா''

ரகு சொல்ல

''ஆமாம்பா ரகு சொல்றது ரொம்ப சரி இங்கே வந்தாலே பழைய நாட்கள் ஞாபகம் வருது. பம்ப் செட்டில் குளித்து தோப்பில் கிரிக்கெட் விளையாடியது, ஏரிக் கரையில் மணல் வீடு கட்டியதுன்னு எத்தனையோ மறக்க முடியாத நினைவுகள்''

''நாங்க மட்டும் என்ன பிள்ளைகள் பக்கத்தில் இல்லாட்டியும் உங்க நினைவுகளோடு இங்கே இருக்கோம். நீங்க இரண்டு பேரும் எங்களோடு இருக்கும் நாட்கள் எங்களுக்கு சொர்க்கம்''.

வைதேகி அன்போடு அவர்களை பார்த்து சொல்கிறாள்.

சமையல் ஆளிடம் இரவு சாப்பாட்டை வாங்கிக் கொண்டு வெளியே வந்த ஏழுமலை, அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து சிரித்து பேசியபடி இருப்பதை பார்த்தவன்.

''ஐயா என் கண்ணே பட்டுடும் தம்பிங்க ஊருக்கு போறதுக்கு முன்னால பூசணிக்காய் சுத்தி போடணும்''

''என்ன ஏழுமலை வீட்டுக்கு கிளம்பியாச்சா. ஒத்த ஆளாக இருக்கே. சாப்பிட்டு இங்கேயே படுக்க வேண்டியது தானே.''

கிரி கேட்க,

''பொழுதுக்கும் இங்கே தான் கிடக்கிறேன். ராத்திரி மட்டும் என் குடிசையில் போய் தலை சாய்ந்துட்டு வரேன். இதுவே பழக்கமாகிப் போச்சு. ஐயா இருப்பதாலே தனி மனுஷனாக

இருந்தாலும் எந்த கவலையும் இல்லாமல் இருக்கேன்

''சரி நீங்க இன்னும் கொஞ்ச நேரம் இருந்துட்டு உள்ளே போங்க. பனிகாத்து வந்தால் உடம்புக்கு ஆகாது''

''ஏழுமலை பக்கத்தில் டாக்டர் இருக்காரு. ஞாபகம் வச்சுக்க''

கிரி சிரிப்புடன் சொல்ல

''இருக்கட்டுமே ஊருக்கெல்லாம் தான் அவர் டாக்டர். எனக்கு என்னைக்குமே நான் தூக்கி வளர்த்த பெரிய தம்பி தான்.''

சொன்னவன் கிளம்பி போக

''ஏழுமலை ரொம்ப நல்ல மனுஷர் உங்களுக்கு ரொம்ப உதவியாக இருக்காரு இல்லையாப்பா''

''ஆமாம் ரகு. இந்த காலத்தில் இப்படிப்பட்ட விசுவாசமிக்க வேலையாள் கிடைப்பது கஷ்டம்''

''ரகு நந்தினி வந்ததிலிருந்து நானும் பொறுமையாக ஏதாவது நல்ல செய்தி சொல்வீங்கன்னு பார்க்கிறேன்.

ட்ரீட்மெண்ட் எடுப்பதாக சொன்னீங்களே ஏதாவது விசேஷம் உண்டாப்பா''

வைதேகி கேட்கவும் உள்ளே தொட்டிலில் தூங்கும் குழந்தை அழ

''புவனா அஜய் அழறான்'' பரபரப்புடன் நந்தினி எழுந்திருக்க

''நீங்க இருங்கக்கா நான் போய் பார்க்கிறேன்''

புவனா எழுந்து உள்ளே போக

உட்கார்ந்திருந்த வைதேகி நின்று கொண்டிருக்கும் நந்தினியின் கை பிடிக்கிறாள்.

''உட்காரும்மா டாக்டர் என்ன சொல்றாங்க. கூடிய சீக்கிரம் நல்ல பலன் கிடைக்கும் தானே.''

''அம்மா அவளை தொந்தரவு பண்ணாதீங்க நானே விபரமாக சொல்றேன் இந்த ஜென்மத்தில் எங்களுக்கு குழந்தை ப்ராப்தம் இல்லம்மா''

''என்னப்பா சொல்ற''

அனைவரது முகத்திலும் அதிர்ச்சி தெரிகிறது.

நந்தினி பொங்கி வரும் கண்ணீரை கஷ்டப்பட்டு அடக்கி

தலை குனிகிறாள்.

''ஆமாம்மா எல்லா விதத்திலும் முயற்சி பண்ணியாச்சு நந்தினியின் கருமுட்டை சரியான வளர்ச்சி இல்லாததால் குழந்தையை உருவாக்கும் திறன் இல்லைன்னு சொல்லிட்டாங்க.

இனிமேல் குழந்தையை பற்றி பேசறதை நிறுத்திடுங்க. நாங்க இரண்டு பேரும் சந்தோசமாக இருக்கோம் அவ்வளவு தான்''

அதிர்ச்சியிலிருந்து மீளாமல் அனைவரும் அமைதியாக இருக்க

''ரகு நீ சொன்னதை கேட்டதும் உண்மையில் மிகப் பெரிய அதிர்ச்சியாய் இருக்கு அண்ணியை சிங்கப்பூர் எங்காவது கூட்டிட்டு போய் பெரிய ஹாஸ்பிடலில் காட்டலாமா

''இல்லை கிரி நான் ஒரு டாக்டர் எனக்கு தெரியும் எந் தவாய்ப்பும் இல்லை விட்டுடுங்க இப்ப என்ன உன் குழந்தைகளும் எங்க குழந்தை மாதிரி தான்

நந்தினி சங்கடப்படுவா இந்த விஷயம் பேச வேண்டாமே''

நந்தினியை ஓரக்கண்ணால் பார்த்தபடி ரகு சொல்ல

''ரகு, நந்தினி கவலைப்படாதீங்க நமக்குன்னு கிடைப்பதை கடவுள் நிச்சயம் தட்டிப் பறிக்க மாட்டார். காலங்கள் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்தியிருக்கு. உங்க வாழ்க்கையிலும் அற்புதம் நடக்கும். உங்க இரண்டு பேரையும் அம்மா அப்பான்னு கூப்பிட நிச்சயம் ஒரு குழந்தை வரும். என்மனசு சொல்லுது.

சண்முகம் சொல்ல ரகுவின் இதழ்களில் விரக்தி சிரிப்பு படர அதற்கு மேல் தாங்கமாட்டாதவளாய் வைதேகியின் மடியில் படுத்து நந்தினி அழ, அவளை சமாதானம் பண்ண கூட தோன்றாமல் சிலையாக அமர்ந்திருக்கிறாள் வைதேகி.

## 2

**தோ**ட்டத்தில் பூத்த மல்லிகை மொட்டுகளை பறித்து வந்து சரமாக தொடுத்தாள் புவனா.

அருகில் குழந்தையை மடியில் படுக்க வைத்து நந்தினி தூங்க வைத்துக் கொண்டிருக்க

''அக்கா நான் ஒன்று சொன்னால் தப்பா நினைக்க மாட்டீங்களே''

பீடிகையுடன் புவனா ஆரம்பிக்க.

''அப்படியென்ன கேட்கப் போற கேளு புவனா''

''நேத்து ரகு அத்தான் விவரமாக சொன்னாரு. இருக்கட்டுமே இப்ப எவ்வளவோ ட்ரீட்மெண்ட் வந்தாச்சு டோனர் மூலம் கருமுட்டை வாங்கி ஏன் ட்ரை பண்ணக் கூடாது''

சிறிது நேர மவுனத்திற்கு பிறகு

''அதை பத்தியும்பேசியாச்சு புவனா. என் மூலமாக வர்ற குழந்தையை தான் அவர் எதிர்பார்த்தாரே தவிர அவருக்கு இதில் இஷ்டமில்லை புவனா. நானும் அதை தான் நினைக்கிறேன். இந்த பேச்சை விட்டுடுவோம். இதோ இந்த அஜய் செல்லம் என்னை பெரியம்மான்னு கூப்பிடுவானே அதுபோதும் எனக்கு''

தூங்கும் குழந்தையின் கன்னத்தில் முத்தமிடுகிறாள்.

''உங்களை நினைச்சா கஷ்டமா இருக்குக்கா உடம்பில் நல்ல ரத்தம் ஓடும்போது குழந்தையின் அருமை தெரியாது, நாளாக ஆக மனசுக்குள் ஒரு வெறுமை வந்து உட்கார்ந்துக்கும்.''

அவர்கள் பேசுவதை கேட்டபடி அங்கு வந்த கிரி

''புவனா என்ன பேச்சு இது அதான் அண்ணி இந்த பேச்சை விட சொல்றாங்கல்ல அப்புறம் திரும்பதிரும்ப அவங்க மனசு கஷ்டப்படறமாதிரி பேசற அவங்கவங்க வாழ்க்கையை எப்படி நடத்தணும்னு அவங்களுக்கு தெரியும்.

கல்யாணமாகி மூணு வருஷத்தில் இரண்டு குழந்தைக்கு தாயாகிட்டோம்னு கர்வத்தில் பேசற மாதிரி இருக்கு''

கிரி கோபமாக சொல்ல.

''நான் நல்லதை நினைச்சு சொன்னது உங்களுக்கு தப்பாக தெரியுது. இனி நான் வாயை திறக்க மாட்டேன் போதுமா''

ஆத்திரம் அடைக்க சொன்ன புவனா கட்டிய மல்லிகை சரத்தை அப்படியே போட்டுவிட்டு நந்தினியின் மடியில் தூங்கும் குழந்தையை எடுத்துக் கொண்டு வேகமாக உள்ளே போக

''என்ன தம்பி இது. ஏன் இப்படி கோபமாக பேசினீங்க. பாவம் புவனா மனசு கஷ்டப்பட்டிருக்கும்.''

''இல்லை அண்ணி அவங்கவங்க இடத்தில் இருந்து பார்த்தால் தான் அதோட வலி தெரியும்.நான் சரியாக தான் பேசினேன்.''

★★★

தோட்டத்தில் தனிமையில் ஏதோ யோசித்தபடி நின்று கொண்டிருக்கும் ரகுவிடம் வருகிறாள் வைதேகி.

''ரகு எங்களுக்கு குழந்தை இல்லாதது ஒரு பிரச்சனையில்லை நாங்க சந்தோஷமாக இருப்போம்னு சொல்லிட்டே... பார்த்தால் அப்படி தெரியலையேப்பா''

இதற்கு மாற்று வழி இல்லையாப்பா

''என்னம்மா வழி விஞ்ஞான பூர்வமாக நடக்காதுன்னு தெரிஞ்சாச்சு அப்பா சொன்ன மாதிரி ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால் தான் உண்டு. நீங்க ஏன் வருத்தப்படறீங்க பேரன் பேத்தின்னு கிரி மூலமாக பார்த்தாச்சு. அப்புறம் என்னம்மா''

''என்னப்பா இப்படி பேசற உன் குடும்ப வாரிசை நாங்க பார்க்க வேண்டாமா டாக்டருக்கு படிச்சு மக்கள் உயிரை காப்பாற்றும் புனிதமான தொழிலை செய்யற கடவுள் உன்னை போய் சோதிக்கிறாரே சரி பார்ப்போம். இதுக்கும் ஏதாவது வழி கிடைக்கும். நீயும் நந்தினியும் மனசு விட்டுவிடாமல் தைரியமாக இருங்க.''

மகனிடம் ஆறுதலாக பேசுகிறாள் வைதேகி.

★★★

காரில் திருச்சிக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

''நீ கவனிச்சியா நந்தினி வழக்கமாக கிராமத்துக்கு போனால் வர்ற உற்சாகம் குறைஞ்ச மாதிரி இருக்கு இல்லையா. நம்ம விஷயம் கேள்விப்பட்டபிறகு ஆளுக்கொரு யோசனையில் இருந்தாங்க. அம்மா ஆறுதல் சொன்னாங்களே தவிர அவங்க மனசில் ஆயிரம் யோசனை.

நம்மால அவங்க சந்தோஷம் குறைஞ்சிடுச்சு''

''அது மட்டுமில்லைங்க உங்க தம்பி தேவையில்லாமல் புவனாவை கோவிச்சுக்கிட்டாரு எனக்கு யோசனை சொல்ல போயி பட்டுனு சப்தம் போட்டு பேசிட்டாரு. எனக்கே சங்கடமாக போச்சு''

''எனக்குஒண்ணு மட்டும் தோணுது நந்தினி. இப்போதைக்கு கிராமத்து பக்கம் போக வேண்டாம். அவங்களாவது நிம்மதியாக இருக்கட்டும்.''

பதில் சொல்லாமல் மவுனமாகிறாள் நந்தினி.

★★★

''அதிதி வெளியே போய் விளையாடும்மா. அப்பாவுக்கு ஆபீசுக்கு லேட்டாகுது கிளம்பணும்''

''அப்பா... தம்பி பாப்பா கூட விளையாடவா''

''ஓகே அவன் பக்கத்தில் உட்கார்ந்து சமத்தா விளையாடணும்''

ரூம் கதவை திறந்து உள்ளே வருகிறாள் புவனா.

''அதிதி லட்சுமி அக்கா கூப்பிடறா போய் குளிச்சிட்டு வா'' குழந்தைகளை கவனிக்க ஒரு பெண்ணை வேலைக்கு வைத்திருந்தாள்.

அதிதி போக

''உங்களுக்கு டிபன் ரெடியா இருக்கு சாப்பிடலாம்''

''என்ன புவனா இன்னும் உன் கோபம் குறையலையா. கிராமத்திலிருந்து வந்ததிலிருந்து சரியா முகம் கொடுத்து பேச மாட்டேங்கிறே''

மனைவியின் அருகில் வருகிறான் கிரி.

''போதும் இனி உங்க குடும்ப விஷயத்தில் நான் தலையிட மாட்டேன். அப்படி என்ன தப்பா சொல்லிட்டேன். நல்லதை தானே சொன்னேன். உங்க அண்ணன் குடும்பத்தில் குழந்தை பிறந்தால் என்ன பிறக்காட்டி என்ன தேவையில்லாமல் என்னை டென்சன் பண்ணிட்டீங்க''

''சாரி புவனா கோபப்படாதே இது ரொம்ப சென்சிடிவ் வான விஷயம். அவங்க முடிவு பண்ண வேண்டியது. அண்ணன்

குடும்பமாக இருந்தாலும் நாம் தலையிடமுடியாது.''

''இருக்கட்டும் அதுக்காக கல்யாணமாகி மூணு வருஷத்தில் இரண்டு குழந்தைக்கு தாயாகிட்டோம்ங்கிற கர்வத்தில் பேசறேன்னு சொன்னீங்க. அதை எப்படி சொல்லலாம்''

''அதான் ஸாரி சொல்றேன் இல்லையா''

''அவள் முகவாய்கட்டையை பிடித்து கெஞ்ச''

''சரி சரி எங்க பரம்பரைல அப்படி யாருக்குமே குழந்தை இல்லாமல் இருந்ததில்லை எனக்கென்னவோ உங்க அண்ணனுக்கு வேறு நல்ல இடத்தில் பெண் பார்த்திருக்கலாம்னு தோணுது. அவர் இருக்கிற அழகுக்கும், படிப்புக்கும் இவங்க பொருத்தமே இல்லை அதுமட்டுமில்லாம ஒரு தடவை பேசும்போது நந்தினி அக்கா சொன்னாங்க அவங்க ரொம்ப வருஷமா பெரிய மனுஷி ஆகலையாம் சாமிக்கெல்லாம் வேண்டி பத்தொன்பது வயசில் தான் வயசுக்கு வந்தாங்களாம். ஆரம்பத்திலிருந்தே அவங்க கிட்டே குறை இருந்திருக்கு

அதை மறைச்சுகூட அவங்க வீட்டில் கல்யாணம் பண்ணியிருக்கலாம்.''

''எதுக்கு புவனா தேவையில்லாத பேச்சு. விட்டுடு''

''அப்படி சொல்ல முடியுமா அத்தை மாமா எவ்வளவு வேதனைப்படறாங்க தெரியுமா''

''இந்த பேச்சை இத்தோடு விடுவோம் என் புவனாவுக்கு கோபம் போயிடுச்சு இல்லையா அது போதும்''

அவளை தன்னோடு சேர்த்து அணைக்கிறான்.

★★★

கிரி ஆபீசுக்கு கிளம்பி போக அஜய் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்க அதிதி லட்சுமியுடன் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

குளித்துவிட்டு வந்த புவனா செல்போன் அழைப்பதை பார்த்து 'அம்மா தான் கூப்பிடுகிறார்கள்'. ஆவலாக ஆன் செய்கிறாள்.

''அம்மா எப்படிம்மா இருக்கே''

''நான் இருப்பது இருக்கட்டும். என்ன புவனா கையில் போன்வச்சுருக்கே. அப்பா இல்லாமல் அம்மா தனி மனுஷியாக இருக்காளேன்னு ஒரு போன் பண்ணி விசாரிக்கிறியா''

''என்னம்மா இது. இரண்டு பிள்ளைகளை வச்சுக்கிட்டு பொழுது விடியறது பொழுது போறதே தெரியலை. நேரம் சரியா போகுது. அப்பா இல்லாட்டி என்ன, சமையலுக்கு ஒரு ஆள், மேல் வேலைக்கு ஒரு ஆள், உன்னை கவனிக்க ஒரு ஆள்னு சவுகரியமாக தானே இருக்கே''

''அது நான் செய்த புண்ணியம் புவனா. உங்கப்பா பிசினஸில் நிறைய சம்பாதித்து நாளைக்கு வேணும்னு சேர்த்து வச்சதால் உன்னையும் நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்து சவுக்கியமாக இருக்கேன்.

உன் சித்தியை பாரு ரொம்பவே கஷ்டப்படறா உன் சித்தப்பா இரும்பு கடை வச்சு ஏகப்பட்ட நஷ்டம். கடன் அதிகமாக இருக்காம். அது மட்டுமில்லை உன்னோட இரண்டு வயசு பெரியவள் உன் சித்தி மகள் புஷ்பா. அவளுக்கு ஒரு நல்ல இடம் அமையலை. வயசாகிட்டே போகுது இரண்டாம் தாரமாக இருந்தாலும் கொடுக்கலாம்கற முடிவுக்கு வந்துட்டாங்க என்ன செய்யறது உன் சித்தியை நினைச்சால் தான் எனக்கு கஷ்டமா இருக்கு.''

''அதுக்கு நாம என்னம்மா பண்ண முடியும். அவங்கவங்க தலையெழுத்து நீ கண்டதையும் நினைச்சு உடம்பை கெடுத்துக்காதே. சரி... சரி குழந்தை அழற மாதிரி இருக்கு போய் பார்க்கிறேன். நீ இந்த பக்கம் வந்து நாளாச்சு, வந்து பத்து நாள் இருந்துட்டு போயேன்மா, பேரன், பேத்தியோடு இருந்த மாதிரி இருக்கும்.''

''நானும் அதை தான் நினைச்சேன். அடுத்த வாரம் புறப்பட்டு வரேன். நீ போய் குழந்தையை கவனி. நான் போனை வைக்கிறேன்.''

3

அது சிறிய நர்சிங் ஹோமாக இருந்தாலும் கூட்டம் அதிகமாக இருந்தது.

ரிசப்ஷனில் இருந்த பெண், டோக்கன் போட்டு வருபவர்களை உட்கார வைத்துக் கொண்டிருந்தாள்.

அங்கு வந்த நர்ஸ் சாந்தி

''வர்ற பேஷண்டோட போன் நம்பர், அட்ரஸ் நோட் பண்ணி வச்சுருக்கிறியா மாலதி.''

கேட்க

''ஆமாம் சிஸ்டர் நீங்க சொன்னபடி ரிஜிஸ்டரில் எழுதி வச்சுருருக்கேன்.''

''நீ வேலைக்கு சேர்ந்து இரண்டு நாள் தானே ஆகுது. அதான் விசாரிக்கிறேன். டாக்டருக்கு எல்லாம் பர்பெக்ட்டாக இருக்கணும்.''

''சிஸ்டர் அந்த பெரியவருக்கு டிரிப்ஸ் போடணும்னு சொன்னீங்களே எல்லாம் ரெடியா இருக்கு''

அட்டெண்டர் வந்து சொல்ல

''சரி சரி நான் வரேன். நீ போ டாக்டர் வர நேரமாச்சு. பேஷண்ட்களை டோக்கன்படி வரிசையாக அனுப்பு''

சொன்னவள் பரபரப்பாக உள்ளே போகிறாள்.

அங்கே சாந்தியுடன் சேர்த்து பத்து பேர் வேலை செய்கிறார்கள். எல்லா இன்சார்ஜூம் சாந்தி தான். வயது நாற்பதை நெருங்குகிறது. ரகுவரனுக்கு சாந்தியின் மேல் நல்ல அபிப்ராயம். அவள் ஹாஸ்பிடல் ஆரம்பித்ததிலிருந்து அங்கு வேலை பார்க்கிறாள். அனுபவம் மிக்கவள்.

வாட்ச்மேன் கேட்டை திறக்க ரகுவரன் காரை ஓரமாக நிறுத்தி உள்ளே வருகிறான்.

ரிசப்ஷனில் இருந்த மாலதி. டாக்டரை பார்த்ததும் எழுந்து

நின்று விஷ் பண்ண புன்னகையுடன் அதை ஏற்றபடி தன் ரூமிற்குள் நுழைகிறான்.

ஓ.பி. முடிய இரண்டு மணி ஆகிறது.

டாக்டர் ரூமிற்குள் வருகிறாள் சாந்தி.

''என்ன சாந்தி அந்த பெரியவர் நல்லா இருக்காரே இன்னைக்கு வீட்டுக்கு அனுப்பிடலாமா''

''ஆமாம் டாக்டர் ப்ரஷர் நார்மலுக்கு வந்தாச்சு. அனுப்பிடுவோம். நீங்க இன்பேஷன்ட் வச்சுருக்கிறதில்லை. இப்படி எமர்ஜென்ஸியாக ஒன்று இரண்டு பேரை மட்டும் தானே அட்மிஷன் பண்றீங்க''

சிரித்தபடி சொல்கிறாள்.

''அவுட் பேஷண்ட் பார்க்கவே நேரம் சரியா இருக்கு. அதுவுமில்லாமல் அப்புறம் இருபத்திநாலு மணி நேரமும் இங்கேயே இருக்கும்படி ஆகிடும்.''

நீங்க சொல்றது சரிதான் டாக்டர் . அப்புறம் வீட்டில் நேரம் செலவிட முடியாது. அப்புறம் உங்க வொய்ப் எப்படி இருக்காங்க. கிராமத்துக்கு போனீங்களே, அம்மா அப்பா நல்லா இருக்காங்களா குட்டி பையன் அஜய் எப்படி இருக்கான். பர்ஸ்ட் டே பர்த்டே உங்க கிராமத்தில் செலிபரேட் பண்ணியபோது நான் பக்கத்து ஊருக்கு ஒரு கல்யாணத்துக்காக வந்ததால் என்னை உங்க வீட்டுக்கு இன்வைட் பண்ணினீங்க. உங்க குடும்ப உறுப்பினர்களை பார்க்கிற சந்தர்ப்பம் கிடைச்சது. உங்கப்பா மேலே தனி மரியாதையே ஏற்பட்டுடுச்சு. ரொம்ப நல்ல மனிதர். அதுமட்டுமில்லை உங்க தம்பி பையன் என் கண்ணிலேயே நிக்கிறான்.''

சாந்தி சொல்ல

''எல்லாரும் நல்லா இருக்காங்க சாந்தி. குட்டி பையன் சூப்பரா வளர்ந்துட்டான். சரி ஓகே நான் கிளம்பறேன்.''

''வழக்கம்போல் ஈவினிங் பைவ் தேர்ட்டிக்கு வரேன். நீங்களும் லஞ்ச் சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க''

''ஓகே டாக்டர்''

ரகுவரன் எழுந்திருக்க

''அப்புறம் கேட்க மறந்துட்டேன் நான் வரும்போது ரிசப்ஷனில் இருந்த பெண் தான் புதுசா வேலைக்கு சேர்ந்தவங்களா சாந்தி''

''ஆமாம் டாக்டர் பழைய ஆள் டெலிவரின்னு போயாச்சு. இந்த பொண்ணும் டெம்பரவரி தான் ஆஸ்திரேலியா போக ட்ரை பண்ணிட்டு இருக்காளாம். அவ ஹஸ்பெண்ட் வெளிநாட்டில் இருக்காராம். நாலு வயசில் ஒரு பையன் இருக்கான். நர்சிங் படிச்சிருக்கா. ஹாஸ்பிடல் பக்கத்தில் வீடுங்கிறதாலே வேற நல்ல ஆள் கிடைக்கும் வரை இருக்கட்டும்னு சேர்த்திருக்கேன்''.

கதவை திறந்து விட்டவள்

''டாக்டர் குழந்தைக்காக ட்ரீட்மெண்ட் போயிட்டிருக்குன்னு சொன்னீங்க கேட்கக்கூடாது இருந்தாலும் ஒரு சகோதரியாக நினைச்சு உங்க மேல் உள்ள அக்கறையில் கேட்கிறேன்.''

''ஒண்ணும் பிரச்சனையில்லை சாந்தி. டாக்டரெல்லாம் பாஸிட்டிவ் ஆக தான் சொல்றாங்க பார்ப்போம்.''

''நிச்சயம் நடக்கும் டாக்டர்''

அன்புடன் சொல்கிறாள் சாந்தி.

★★★

''ஹலோ நான் ரகு பேசறேன்''

''சொல்லு ரகு நல்லாயிருக்கீங்களா. அண்ணி எப்படி இருக்காங்க.''

''ஊருக்கு வந்துட்டு போன பிறகு கூப்பிடவேயில்லை. நானும் கொஞ்சம் பிஸியாகிட்டேன். நீயாவது கூப்பிடக் கூடாதா. அப்புறம் உங்க அண்ணி சொன்னா ஏன் தேவையில்லாமல் புவனா மேலே கோபப்பட்டே நம் குடும்பத்து மேல உள்ள அக்கரையில அவ சொல்லியிருக்கா நீ அப்படி பேசினது தப்பு கிரி.''

''புரியுது ரகு. அண்ணி மனசு சங்கடப்படுமேன்னு

பேசிட்டேன். அது ஒண்ணும் பிரச்சனையில்லை. புவனா ஒண்ணும் பெரிசா எடுத்துக்கலை.''

''அம்மா அப்பா நம்ப இரண்டு பேர் மேலேயும் அளவு கடந்த பாசம் வச்சிருக்காங்க. என் விஷயத்தை நினைச்சு கவலைப்பட ஆரம்பிச்சிட்டாங்க அவங்க மனசு சங்கடப்படும்படி எதுவும் நடக்கக்கூடாது கிரி. கடைசி வரை நல்ல பிள்ளைகளை பெத்தோம், அவங்களால் பெருமைப்பட்டோங்கிற மனநிறைவோடு அவங்க வாழணும்.''

''எதுக்கு ரகு இப்படி மனசை போட்டு குழப்பிக்கிறே''

''இல்லை கிரி நம்ம குடும்ப ஒற்றுமை ரொம்ப முக்கியம் அதுவுமில்லாமல் புவனா பணக்கார வீட்டு பொண்ணு. அப்பா இல்லாமல் அம்மாவின் வளர்ப்பில் வளர்ந்தவள். நம்ப குடும்பத்தோடு எல்லா விதத்திலும் அனுசரிச்சு போறா நந்தினியும் புவனாவும் அக்கா, தங்கை போல பாசத்துடன் பழகணும்.

சொல்லப் போனா உன் குழந்தைகளை எங்க குழந்தைகளாக தான் நானும் நந்தினியும் நினைக்கிறோம்.''

''ஒண்ணும் பிரச்சனையில்லை. நீ கவலைப்படாதே உனக்கும் கடவுள் அருளால் நல்லது நடக்கும். நீ நினைக்கிற மாதிரி குற்றம் குறை சொல்ல முடியாத நல்ல பிள்ளைகளை பெத்தோங்கிற மன நிறைவோடு அவங்க வாழ்வாங்க போதுமா''

''ஓகே கிரி. இன்னும் பத்து நாளில் கோயம்புத்தூரில் ஒரு கான்ப்ரன்ஸ் இருக்கு அப்ப வரும்போது கட்டாயம் வந்து புவனாவைப் பார்த்து பேசறேன்.''

''வரும்போது அண்ணியையும் கூட்டிட்டு வா ரகு''

''பார்ப்போம். ஓகே வச்சுடறேன் பை''

★★★

தட்டில் சாதம் காய்கறிகளை வைத்து விட்டு ஏதோ யோசனையில் இருக்கும் மனைவியை பார்த்தார் சண்முகம்.

''என்ன யோசனை வைதேகி? குழம்பை ஊத்து சாதத்தில்.''

குழம்பை ஊற்றியவள்.

''பிள்ளைங்க வந்துட்டு போனதிலிருந்து ஒரு வாரமாக பெரியவன் நினைப்பு தாங்க. முகத்தில் இருந்த மலர்ச்சி தொலைஞ்சு போச்சு.

அவங்க சந்தோஷத்தை மீட்டெடுக்க என்ன தான் வழின்னு தெரியலை. கடவுள் அவனுக்கு இப்படியொரு கஷ்டத்தை கொடுத்திருக்கக் கூடாது. எந்த குறையுமில்லாத மருமகள்கள் கிடைச்சுருக்காங்கன்னு நினைச்சேன். ஒரு குழந்தைக்கு தாயாகிற தகுதிகூட இல்லாதவளாக வந்துட்டாளே. இதில் யாரை குற்றம் சொல்றது''

''நீ புலம்பி எந்த பிரயோசனமுமில்லை வைதேகி. உன் மகன் ஒண்ணும் விபரம் தெரியாதவன் இல்லை. அவன் ஒரு டாக்டர். நிச்சயம் அவன் வாழ்க்கை சுபிட்சமாக இருக்க வழிதேடத் தான் செய்வான். நாம் பொறுமையா இருப்போம்.

எத்தனையோ ஆதரவற்ற குழந்தைகள் இருக்கு இரண்டு பேரும் முழுமனசோடு தத்தெடுக்க முடிவு பண்ணினால் அவங்க குறை விலகவும் வாய்ப்பிருக்கு''

அவர் சொல்லி வாய் மூடுவதற்குள்.

''போதும் நிறுத்துங்க என்ன பேச்சு இது. யாரோ பெத்த குழந்தைக்கு என் மகன் அப்பாவாக இருப்பதா இந்த நினைப்பே எனக்கு பிடிக்கலை அதுக்கு குழந்தை இல்லாமலேயே இருந்திடலாம்.

நீங்க சொன்ன இந்த யோசனைக்கு பதிலாக ரகுவரனுக்கு இன்னொரு பெண்ண பார்த்து கட்டி வைப்போம்னு சொல்லியிருந்தால் கூட யோசிச்சிருப்பேன்.''

''வேண்டாம் வைதேகி பிள்ளைகளுக்கு நல்ல தாயாக இரு. நல்ல சிந்தனையோடு இருக்கிறவங்க மனசில் விஷயத்தை கலக்காதே. இப்ப நீ சொன்னது தப்பான யோசனை. அதுக்கு ரகுவரன் மட்டுமில்லை நானும் எந்த காலத்திலும் சம்மதம் சொல்ல மாட்டோம். கஷ்டமோ, நஷ்டமா அவன் வாழ்க்கை

நந்தினியுடன் தான்.''

தட்டிலிருந்து எழ

''என்னங்க மோர் போட்டுக்குங்க''

வேண்டாம் நீ பேசிய பேச்சிலேயே வயிறு நிறைஞ்சுருக்கு எழுந்து போகிறார் சண்முகம்.

## 4

மாலதி பூட்டியிருந்த கதவை திறக்க, பக்கத்து வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 'ஆதி' ஓடி வந்து மாலதியின் கால்களை கட்டிக் கொள்கிறான்.

அவளை தொடர்ந்து விஜயா வர,

''ஆதி எதுவும் தொந்தரவு பண்ணினானா விஜி,''

''அதெல்லாம் இல்லை, ஸ்கூல் பஸ்ஸில் வந்து இறங்கி நேராக வீட்டிற்கு வந்து, அரைமணிநேரம் ஹோம் ஒர்க் செய்து விட்டு, இப்பத்தான் விளையாட ஆரம்பிச்சான். பால் மட்டும் குடிச்சான்.''

''ரொம்ப தாங்க்ஸ் விஜி. உன்னையும் தொந்தரவு பண்றேன். கூட படிச்ச பாவத்துக்கு என் நிலைமை புரிஞ்சு பக்கத்திலேயே வீடும் பார்த்து தந்து... நிறைய உதவி பண்றே...''

''என்ன பேச்சு மாலதி. உன் நிலைமை எந்த பெண்ணுக்கும் வரக்கூடாது. சரி உள்ளே போகலாம். உன்கிட்டே சில விஷயம் பேசலாம்னு தான் வந்தேன்''

''பேக்கிலிருந்த பிஸ்கட் பாக்கெட்டை ஆதியிடம் மாலதி தர, அதை வாங்கிக் கொண்டு ஓரமாக உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

''சொல்லு விஜி. என்ன விஷயம்''

கேட்டபடி, மடக்கி வைத்திருந்த ஸ்டூல் சேரை விரித்து விஜியை உட்கார சொல்கிறாள்.

''நீயும் குழந்தை பிறந்ததிலிருந்து இந்த நாலு வருஷமாக ஒரு ஊரிலும் நிலையாக இருக்க முடியாமல் ஊர் ஊராக சுத்திட்டு வர்றே. இந்த ஊரில் எத்தனை மாசம் இருக்கப் போறியோ

தெரியலை. ஒரு இளம்பெண். கையில் நாலு வயது மகனுடன், தனியாக வாழறது எவ்வளவு கஷ்டம்னு எனக்கும் புரியுது மாலதி. இருந்தாலும் நீ எடுத்த முடிவு தப்புன்னு மனசுக்கு படுது''

மாலதியின் கண்களின் கண்ணீர் தளும்பி நிற்கிறது.

''இதுதான் சரியான முடிவு விஜி. அப்பா யாருன்னு அடையாளம் காட்ட முடியாமல் என் குழந்தையை நல்ல விதமாக எப்படி வளர்த்து ஆளாக்க முடியும்.

நல்லவன்னு நம்பி காதலிச்சவன் ஏமாத்திட்டு போயிட்டான். எனக்கு அடைக்கலம் தந்த அனாதை இல்லமும் நான் நடத்தை கெட்டவள்னு என்னை வெறுத்து ஒதுக்கிட்டாங்க.

வயிற்றில் சுமையோடு யாருடைய ஆதரவும் இல்லாமல் நான் பட்ட கஷ்டம் அப்பப்பா....

நல்லவங்க நாலு பேர் இருந்ததாலே படிச்ச படிப்பு உதவ குழந்தையுடன் பொழுதை ஓட்ட ஆரம்பிச்சேன்.

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு விதமான தொந்தரவு, கஷ்டங்கள் போதும் விஜி. ஓடி ஓடி களைச்சுட்டேன்.

என் மகனுக்கு ஒரு நல்ல அம்மா, அப்பா கிடைச்சால், அவனை தத்து கொடுத்துட்டு, எங்கேயாவது கண்காணாமல் போயிடறேன்''

''பெத்த பிள்ளையை மறந்து உன்னால் வாழ முடியுமா மாலதி... உன் வாழ்க்கையை கெடுத்தவனை கண்டுபிடிச்சு, செருப்பால் அடிக்கணும். பாவி அவன் மட்டும் நல்லா வாழ்ந்திடுவானா.''

''தப்பு என்னோடது. அன்புக்கு ஏங்கின நான், அவன் பேச்சில் மயங்கிட்டேன். அதன் பலனை இப்ப அனுபவிக்கிறேன்.

ஆஸ்திரேலியாவில் இருந்து நம்மோடு படிச்ச சுதா பேசினா அவ ஹாஸ்பிடலில் எனக்கு வேலை வாங்கி தர்றதாக சொல்லியிருக்கா அதற்கான முயற்சியில் தான் இப்ப இறங்கியிருக்கேன்.

நான் கிளம்புவதற்குள், என் பிள்ளைக்கு ஒரு நல்ல அம்மா,

அப்பாவை அடையாளம் காட்டணும். என் பிள்ளை என்னைப் போல அனாதையாக வளரக் கூடாது. அவன் வாழ்க்கை நல்லபடியாக அமையணும். எனக்கு நீ இந்த உதவியை செய்யணும் விஜி''

''சரி, எனக்கு தெரிஞ்ச லாயர் இருக்காரு. அவர் கிட்டே பேசிட்டு எப்படி செய்யலாம்னு முடிவு பண்ணுவோம்''

தன்னருகில் வரும் மகனை அணைத்து முத்தமிடுகிறாள் மாலதி..

★★★

ஊரிலிருந்து மகனை பார்க்க வந்திருந்தாள் ஜானகி. ''புவனா, அம்மா வந்தால் உனக்கும் வசதியாக இருக்கு ஊரில் தனியாக தானே இருக்காங்க. நம்மோடு இருக்கட்டுமே''

கிரிதரன் சொல்ல,

''அதெப்படி, மாப்பிள்ளை வீட்டில் இருக்கிறதுன்னு அம்மா நினைப்பாங்க. அதுமட்டுமில்லை கடல் மாதிரி சொத்து, சுகம் இருக்கு அனுபவிக்கட்டுமே...''

எனக்கும் தங்கமான அப்பழுக்கில்லாத மாப்பிள்ளையை கட்டி வச்சுட்டோம்ங்கிற நிம்மதியோடு இருக்காங்க''

''அப்படியா.. உன் புருஷன் தங்கம்னு உங்கம்மாவுக்கு தெரியுமா?''

குறும்பாக சிரித்தபடி மனைவியின் அருகில் வர,

''போதும், போதும் ரொமான்ஸ் பண்ற நேரம் இது இல்லை'' கணவனை செல்லமாக தள்ளி விட்டவள், ரூமை விட்டு வெளியே வருகிறாள்.

★★★

சோபாவில் உட்கார்ந்திருந்த ஜானகி, புன்னகையோடு மகளை பார்க்கிறாள்.

அருகில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்க, ''மனசெல்லாம் நிறைஞ்சுருக்கு புவனா. நீ இப்படி குழந்தைகள், கணவன்னு சந்தோஷமாக வாழறதை பார்க்கும் போது,

நாம் நிறைய புண்ணியம் பண்ணியிருக்கோம்னு தோணுது. உனக்கு மாப்பிள்ளை பார்க்க எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா. நம்ப கிட்டே இருக்கிற பணத்துக்கு ஆசைபட்டு, யார்கிட்டேயாவது ஏமாந்துடுவோமோன்னு பயந்தேன்.

நல்லவேளை கிராமத்தில் உங்க மாமனாருக்கு இருக்கும் மரியாதையையும், உங்க குடும்பத்துக்கு இருக்கும் கௌரவத்தையும் கேள்விப்பட்டு, தைரியமாக மாப்பிள்ளையை முடிவு பண்ணினேன்''

''அப்ப உன் மாப்பிள்ளையை பார்த்து முடிவு பண்ணலை. அவர் அப்பாவை நம்பி தான் பெண் கொடுத்தேன்னு சொல்றே அப்படித்தானே''

சிரித்தபடி அம்மாவின் அருகில் உட்காருகிறாள்.

''சரி கேட்கணும்னு நினைச்சேன். உன் கொழுந்தனாருக்கு டீரிட்மெண்ட் போயிட்டிருக்குன்னு சொன்னியே. ஏதாவது நல்ல தகவல் இருக்கா''

''இல்லம்மா... நந்தினி அக்கா கிட்டே ஏதோ குறை இருக்காம். குழந்தை பாக்கியம் கிடைக்க வாய்ப்பில்லைன்னு சொன்னாங்க. பாவம்தான். ஆனால் அதை பத்தி நாம் பேச முடியாது''

''என்னடி இப்படி சொல்ற. கல்யாணமாகி அஞ்சு வருஷமாச்சு. குழந்தை பிறக்காதுன்னு தெரிஞ்ச பிறகும்... அதை பத்தி பேசாமல் எப்படி இருக்க முடியும்..? உன் மாமனார் என்ன சொல்றாரு''

''இப்போதைக்கு இதை பத்தி பேசவே எல்லாரும் தயங்கறாங்க. அதுமட்டுமில்லை, எங்களுக்கு குழந்தை இல்லாட்டியும் பரவாயில்லை. நானும் நந்தினியும் சந்தோஷமாக எங்க வாழ்க்கையை தொடருவோம்னு அவர் அண்ணன் சொல்லிட்டாரு''

''இதெல்லாம் பேச நல்லா இருக்குமே தவிர, கதைக்கு ஆகாது. போகப் போக வாழ்க்கையே சலிச்சிடும். உங்க மாமனார் தோட்டம், துறவு, பண்ணை வீடுன்னு நிறைய சொத்து

சேர்த்து வச்சுருக்காரு. நாளைக்கு வாரிசு வேணும்னு நினைக்க மாட்டாரா... எனக்கு ஒரு யோசனை தோணுது புவனா''

''என்னம்மா சொல்ல வர்றே''

அருகில் வந்த மகனை எடுத்து மடியில் வைத்துக்கொள்கிறாள்.

''உன் சித்தி மகள் புஷ்பாவுக்கு இன்னும் நல்ல இடமா அமையலை. வயசும் ஏறிட்டே போகுது. அவள ஏன் உன் கொழுந்தனுக்கு இரண்டாம் தாரமாக கட்டி வைக்கக் கூடாது''

கண்களில் அதிர்ச்சி தெரிய அம்மாவை பார்க்கிறாள்.

''அம்மா நீ புரிஞ்சுதான் பேசுறியா. நந்தினி அக்கா இருக்கும் போது எப்படி... முதலில் ரகு அத்தான்... இதுக்கெல்லாம் ஒத்துக்க மாட்டாரு. ஒரு குழந்தைக்காக இன்னொரு கல்யாணமா...

''அடிமேல் அடி வச்சா அம்மியும் நகரும்னு சொல்வாங்க. வாழ்க்கையில் சலிப்பு வரும் போது அவரே ஏத்துப்பாரு. நந்தினிக்கு நிலைமையை புரிய வைப்போம். நல்ல சம்பாத்தியம் உள்ள டாக்டர், இரண்டு குடும்பத்தை நடத்த முடியாதா...''

நாளைக்கு குழந்தை பிறந்தால், தன்னால அவரே நந்தினி கிட்டேயிருந்து விலகிடுவாரு''

''எப்படிம்மா இப்படியெல்லாம் யோசிக்கிற. இந்த பேச்சை இதோட நிறுத்திக்க. உன் மாப்பிள்ளைக்கு தெரிஞ்சால் அவ்வளவுதான்''

''போடி.. நீதான் உலகம் புரியாதவளாக இருக்கே. நான் சொன்னதை நேரம் வரும் போது, உன் மாமியார் கிட்டே சொல்லிப் பார். அவங்க கட்டாயம் ஏத்துப்பாங்க. என்னவோபோ புஷ்பாவுக்கு அப்படியொரு பிராப்தம் இருந்தால் நடக்கும்''

பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறாள் ஜானகி.

★★★

கோயமுத்தூருக்கு மெடிக்கல் கான்பரன்சுக்காக வந்த ரகுவரன், இரவு டின்னருக்கு வீட்டிற்கு வருவதாக சொல்ல,

சமையல் ஆள் உதவியுடன் டின்னர் ரெடி பண்ணிக் கொண்டிருந்தாள் புவனா.

''அம்மா, பால் பணியாரம் செய்றியா. ரகு அத்தானுக்கு ரொம்ப பிடிக்கும்''

''செய்யறேன். பச்சரிசியும், உளுந்தும் ஊற வை. எப்ப வர்றாரு''

''நைட் எப்படியும் ஒன்பது மணிக்குள்ள வந்துடுவாரு. இங்கே தங்கிட்டு காலையில் கிளம்பறதா சொன்னாரு''

ரகுவரன் வந்திருக்க. அண்ணனும், தம்பியும் ஹாலில் உட்கார்ந்து பேசி கொண்டிருந்தார்கள்.

மரியாதை நிமித்தம் புவனாவின் அம்மாவிடம் இரண்டு வார்த்தை பேசியவன்,

''உன் மாமியார் ஊரிலிருந்து வந்திருப்பதாக சொல்லியிருந்தால், நான் அப்படியே கிளம்பியிருப்பேன். இப்ப பாரு அவங்களும் நான் வந்திருக்கேன்னு தடபுடலாக டிபன் பண்ணிட்டு இருக்காங்க''

தம்பியிடம் சொல்கிறான்.

''அதனாலென்ன உன்னை பார்த்து நாளாச்சு பார்க்கணும்னு அவங்களும் சொல்லிட்டு இருந்தாங்க..'' அதற்குள் சாப்பிட அழைப்பு வர, டைனிங்ஹாலுக்கு வருகிறார்கள்.

''பெரிய மாப்பிள்ளை. கூச்சப்படாமல் சாப்பிடுங்க. இன்னைக்கு என் கையால உங்களுக்காக நிறைய பலகாரம் செய்திருக்கேன். பால் பணியாரம் உங்களுக்கு பிடிக்கும்னு புவனா சொன்னா அதுவும் செய்திருக்கேன்''

''எதுக்கு அத்தை நீங்க சிரமப்பட்டுக்கிட்டு உங்களுக்கு சேவை செய்ய அத்தனை ஆட்கள் இருக்கும் போது... நீங்க எனக்காக சிரமப்படறீங்க.''

''அப்படி சொல்ல முடியுமா... எவ்வளவு பெரிய பணக்கார மாமியாராக இருந்தாலும், மாப்பிள்ளைன்னா, தனி மரியாதை தரணும் அது எங்க குடும்ப வழக்கம்''

இருவருக்கும் புவனாவுடன் சேர்ந்து பார்த்து, பார்த்து பரிமாறுகிறாள் ஜானகி.

''திருச்சியிலிருந்து வந்திருக்காங்கன்னதும் எனக்கு திருச்சியில்

கட்டி கொடுத்த கவிதா ஞாபகம் வருது. அவளும் தில்லை நகரில் தான் இருக்கா''

ஜானகி சொல்ல,

''நீங்க யாரை சொல்றீங்க. குமரேசன் மாமா பெண் இரண்டாம் தாரமாக கட்டி கொடுத்தாங்களே அவளை சொல்றீங்களா...

புவனா கேட்க,

''யார் புவனா அது... எதுக்கு இரண்டாம் தாரமாக கட்டி கொடுத்தாங்க...''

சாப்பிட்டபடி கிரிதரன் அவர்கள் பேச்சில் கலந்து கொள்கிறான்.

''அது ஒரு பெரிய கதை மாப்பிள்ளை. கல்யாணமாகி ஆறு வருஷமாச்சு. குழந்தை இல்லையாம். முதல் தாரத்திற்கு குழந்தை பிறக்காதுன்னு கல்யாணமான இரண்டு வருடத்திலேயே தெரிஞ்சு போச்சு. இருந்தாலும் இப்படியே காலத்தை ஓட்டுடுவோம்னு இருந்திருக்காங்க. ஒரு காலகட்டத்தில் கவிதாவுக்கு கட்டிக் கொடுத்த அந்த மாப்பிள்ளை வேலைக்கு போக விருப்பம் இல்லாமல் எதையோ பறி கொடுத்தது போல வாழ ஆரம்பிச்சுட்டாரு.

முதல் தாரத்திற்கும் மலடியாக வாழறதில் அர்த்தமில்லைன்னு அவளே தன் புருஷனுக்கு பெண் பார்க்க ஆரம்பிச்சுட்டா.

எங்க குடும்பம் வாழையடி வாழையாக தழைச்சு வாழற குடும்பம். அதனால அவங்க விருப்பப்பட்டு எங்க சொந்தக்கார பெண் கவிதாவை பெண் கேட்டு வந்தாங்க.

இவங்களும் சம்மதிக்க போன வருஷம் தான் கல்யாணம் நடந்துச்சு. இப்ப ஒரு வயதில் குழந்தை இருக்கு.

இப்ப கவிதா மாப்பிள்ளை என்ன சொல்றாரு தெரியுமா. நாலு வருஷத்தை இப்படி வெறுமையாக ஓட்டிட்டேன். முதலிலேயே இந்த முடிவுக்கு வந்திருந்தால், நாலு வயசில் பையன் இருந்திருப்பான்னு.

இப்ப மூத்த தாரம் தான் முழுக்க முழுக்க குழந்தையை

பார்த்துக்கிறாளாம். ரொம்ப சந்தோஷமா இருக்காங்க.''
சொன்னவள்,
ரகுவரனிடம் வந்து,
''மாப்பிள்ளை இன்னும் கொஞ்சம் பால் பணியாரம் வைக்கட்டுமா'' கேட்க,
ஏதோ யோசனையில் இருந்தவன், 'வேண்டாம்' என மறுக்க, புவனாவை ஓரக்கண்ணால் பார்க்கிறாள் ஜானகி.

★★

''அம்மா நீ பாட்டுக்கு இப்படி ஒரு கதை கட்டி சொல்லிட்டே... ரகு அத்தான் பாவம் முகமே மாறிப் போச்சு...''
''உலகத்தில் இதெல்லாம் சகஜம். இப்படியொரு முடிவெடுத்தால் வாழ்க்கை நல்லா இருக்கும்னு அவர் தெரிஞ்சுக்கட்டும்னு தான் அப்படி சொன்னேன். பாரேன், புஷ்பாவுக்கும், உன் கொழுந்தனுக்கும் நானே கல்யாணம் நடத்தி வைப்பேன். இது நடக்கும்''
''உன் போக்கே எனக்கு புரிபடலை, சரி வா. சாப்பிடலாம்'' அம்மாவுடன் கிச்சனுக்கு போகிறாள் புவனா.

## 5

**சா**மி விளக்கேற்றுகிறாள் நந்தினி.
ஜன்னல் திரையை விலக்கி, எதிர்வீட்டை பார்க்க, நாலைந்து சிறுவர்கள் சப்தமிட்டு விளையாடிக் கொண்டிருப்பது தெரிகிறது.
கண்களில் கண்ணீர் திரள்கிறது.
''எனக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு குறையை வைத்தாய் கடவுளே'' மனம் கசிகிறது.
திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்கு புறப்பட்ட போது, அண்ணன் சொன்னது, இன்றும் அவள் காதில் ஒலிக்கிறது.
''நந்தினி, அம்மா இறந்தப்ப உனக்கு பத்து வயசு. விபரம் புரியாத வயதில் இருக்கும் உன் தங்கச்சிக்கு நீதான் எல்லாமுமாக இருக்கணும் குமரா... அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை

ஏற்படுத்திக் கொடு. உன் அப்பா குடிகாரர் அவரை நம்ப முடியாது''

மரண படுக்கையில் அம்மா சொன்னாங்க நந்தினி.

இப்பதான் என் மனசுக்கு நிம்மதியும், திருப்தியும் கிடைச்சிருக்கு.

நானும் உன் அண்ணியும் எங்க குழந்தைகளின் எதிர்காலத்தை பற்றி கூட நினைக்கலை. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தி தரணும்ங்கிற குறிக்கோளோடு வாழ்ந்தோம்.

அது நிறைவேறிடுச்சி. தகுதிக்கு மீறி செலவு பண்ணி டாக்டர் மாப்பிள்ளைக்கு கட்டி கொடுத்திட்டேன்.

நீ சந்தோஷமாக உன் புகுந்த வீட்டை அனுசரிச்சு வாழணும் நந்தினி. இனிமேல் தான் நானும் உன் அண்ணியும் எங்களுக்காக வாழப் போறோம்.

உன் வாழ்க்கையை நரகமாக்கிக்கிறதும், சொர்க்கமாக்கிக்கிறதும் உன் கையில்தான் இருக்கு. விட்டுக் கொடுத்து உன் குடும்ப நலனை முன் வைத்து எந்த முடிவையும் எடுத்தால், உன் வாழ்க்கை நிச்சயம் சொர்க்கமாக அமையும் நந்தினி''

அண்ணன் அன்று சொன்னது... 'என் குடும்பத்திற்காக நான் ஒரு முக்கிய முடிவெடுக்கும் நிலையில் இருக்கிறேன். எங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்பது நிச்சயம் இன்னும் கொஞ்ச நாளில் பெரிய பிரச்சனையாக உருவெடுக்கும். இதை கேள்விபட்டதிலிருந்து அத்தையின் முகமே சரியில்லை. அதுமட்டுமில்லை இவரும் என்னிடம் தன் கவலையை மறைத்து சிரித்து பேசுகிறாரே தவிர, தனிமையில் எதையோ யோசித்தபடி இருக்கிறார். பழைய கலகலப்பு குறைந்து விட்டது.

வாழ்க்கையில் எல்லாம் கிடைத்த மனிதர். உயிரை காக்கும் கௌரவமான டாக்டர் தொழில். அன்பான பெற்றவர்கள், எந்தவித குறையுமில்லாமல் ஏகப்பட்ட சொத்து சுகம். நான் மட்டும் தான் அவருக்கு தப்பானவளாக அமைந்து விட்டேன்.

இதற்கு ஒரே வழி. அவர் வாழ்க்கையில் இருந்து நான் சற்று ஒதுங்கி, அவருக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைப்பது... இது என்னால் முடியுமா... அன்பும், பாசமும், காட்டும் என் கணவரை என்னால், விட்டுத் தர முடியுமா... அவரை இன்னொருத்தியோடு பங்கு போட என் மனம் இடம் தருமா...'

நினைக்க நினைக்க நந்தினியின் கண்களில் கண்ணீர் பெருகுகிறது.

★★★

''நந்தினி நாளைக்கு சன்டே வீட்டில் எதுவும் செய்ய வேண்டாம். காலையில் உச்சி பிள்ளையார் கோவிலுக்கு போயிட்டு அப்புறம் ஷாப்பிங் போயிட்டு லஞ்ச் வெளியே சாப்பிட்டு வரலாம்''

இரவு ரகுவரன் சொல்ல,

தலையாட்டினாள் நந்தினி.

''சொன்னது போல இருவரும் கோவிலுக்கு போய் விட்டு, கடைக்கு போக, '' உனக்கு பிடிச்ச மாதிரி, நாலைஞ்சு பட்டுப்புடவை எடுத்துக்க நந்தினி''

''எதுக்குங்க, ஒன்று போதும், இப்ப எதுவும் விசேஷம் வரலையே... ''

''அதனாலென்ன, என் வொய்புக்கு நான் வாங்கித் தரேன்'' சிரிப்புடன் சொல்கிறான்.

நந்தினி புடவை செலக்ஷனில் மூழ்கியிருக்க.

இரண்டு வயதுள்ள ஒரு குட்டி பையன்,

''அம்மா'', என்றழைத்தபடி நந்தினியை பின்னால் கட்டிப் பிடிக்க,

அதிர்ச்சியுடன் திரும்புகிறாள்.

மலங்க மலங்க விழித்தபடி அந்த சிறுவன் அவள் முகத்தையே பார்க்க அதற்குள் அங்கு வந்த பெண்,

''ஸாரிங்க நீங்களும் என்னை மாதிரி கலரில் புடவை கட்டி இருப்பதால், நான்தான்னு நினைச்சு உங்களை கட்டி

புடிச்சுட்டான்'' சொன்னவள்,

''ஏய்.. வாலு... வாக போகலாம். ஒரு இடத்தில் இருக்க மாட்டியா...''

சொன்னபடி சிறுவனை அழைத்து போக,

''அம்மா'' என்று அழைத்து பிஞ்சுகரங்களால் கட்டிப்பிடித்த அந்த நிமிடம். மெய் சிலிர்த்தாள் நந்தினி.

வாழ்க்கையில் எத்தனை சந்தோஷங்களை இழந்து கொண்டிருக்கிறேன். மனம் விம்மியது.

அருகில் நின்ற ரகுவரனை காணாமல் அங்கும் இங்கும் பார்க்க. சற்று தொலைவில் இளம் பெண்ணுடன் சிரித்து பேசியபடி நின்று கொண்டிருந்தான் ரகுவரன்.

''என்னங்க புடவை செலக்ட் பண்ணிட்டேன்''

பேசிக் கொண்டிருக்கும் அவனருகில் வருகிறாள் நந்தினி.

''மாலதி, இவங்க என் வொய்ப்... நந்தினி''

உடனே அந்த பெண், மரியாதையுடன் ,

''வணக்கம் மேடம்''

என்று புன்னகையுடன் சொல்ல,

புருவத்தை உயர்த்தி, இவள் யார் என்பது போல பார்க்க, ''நம்ம ஹாஸ்பிடலில் புதுசா ஜாயின் பண்ணியிருக்கா பேர் மாலதி''

ரகுவரன் சொல்ல, அவளை பார்க்கிறாள்.

நல்ல கோதுமை நிறம், திருத்தமான முகம், எளிமையான அலங்காரத்திலும் பளிச்சென்ற அழகுடன் தெரிந்தாள்.

''சரி... நந்தினி நீ போய் கவுண்டரில் பில் போடு இவளோட பையன் பிறந்த நாளாம். டிரஸ் எடுக்க வந்திருக்கா. நான் போய் என் சார்பில் ஒரு டிரஸ் வாங்கி பிரசெண்ட் பண்ணிட்டு வரேன்''

''ஐயோ... அதெல்லாம் வேண்டாம் டாக்டர். நீங்க அவங்கேளாடு போங்க. நான் கிளம்பறேன்''

''தெரிஞ்ச பிறகு அப்படியெல்லாம் விட முடியாது மாலதி. உன்னை பத்தி சாந்தி நிறையவே சொல்லியிருக்காங்க''

ஒரு சின்ன கிப்ட் தான் வா போகாலம்''. சொன்னவன்,

''ஓ.கே. நந்தினி... ஒரு அஞ்சு நிமிஷம் வந்திடறேன்''

அவளுடன் ஜோடியாக பேசியபடி போக,

மனதில் சின்ன உறுத்தல்,

'இவளைப் போல் ஒருத்தி இவருக்கு மனைவியாக வந்திருந்தால், இவருக்கும் ஒரு பையன் இருந்திருப்பான். அழகிலும் அவருக்கு பொருத்தமாக இருக்கிறாள்...

சை... என்ன நினைப்பு இது... அந்த பெண் இன்னொருவரின் மனைவி. '

நினைவை ஒதுக்கியவளாய் நடந்தாள்.

## 6

மாலதி பீரோவில் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருக்க, ஆதி அருகில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

'காலிங்பெல்' அடிக்க, கதவை திறந்தாள் மாலதி. விஜி நின்றிருந்தாள்.

''வா விஜி. இன்னைக்கு சன்டேங்கிறதாலே கொஞ்சம் சுத்தம் பண்ணிட்டிருந்தேன்.

நானே உன்னை தேடி வரணும்னு இருந்தேன் விஜி. இன்னும் நாலு மாசத்தில் ஆஸ்திரேலியா கிளம்ப வேண்டியிருக்கும்னு நினைக்கிறேன். அதுக்குள்ள ஆதியை நல்ல இடத்தில் சேர்க்கணும். நான்தான் அடையாளம் தெரியாமல் வாழ்ந்துட்டேன்.

என் மகனாவது பேர் சொல்லும்படி வாழணும்''. குரல் கரகரக்க சொல்கிறாள்.

''அது விஷயமாக விபரம் சொல்லத்தான் வந்தேன் மாலதி. நம்ப லாயருக்கு தெரிஞ்ச நண்பர் கனடாவில் இருக்காராம். அவருக்கு பத்து வருடமாக குழந்தைக்கு ட்ரை பண்ணி சக்ஸஸ் ஆகாமல் 'ஆடாப்ட்' பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்காராம். பெரிய

தொழிலதிபர். நம்ப ஊர்க்காரர். அதனால் இந்தியா வந்து ஒரு குழந்தையை தத்தெடுப்பதுன்னு முடிவு பண்ணி, அடுத்த மாதம் சென்னை வர்றாராம்.

லாயர் அவர்கிட்டே போனில் பேசி, உன்னை பத்தி சொல்லியிருக்காரு. பையனுக்கு நாலு வயது ஆகப்போகுதுன்னு சொன்னாராம். எந்த பிரச்சனையும் இல்லாமல் சுமூகமாக முடிந்தால் ஓ.கே.ன்னு சொல்லிட்டாராம்.''

மாலதியின் முகம் மலர்கிறது.

''அப்படியொரு அதிர்ஷ்டம் என் மகனுக்கு இருந்தால் ரொம்பவே சந்தோஷப்படுவேன் விஜி. எப்படியாவது இந்த இடத்தில் என் பிள்ளை போய் சேரும்படி ஏற்பாடு பண்ணு விஜி. காலமெல்லாம் உனக்கு நன்றிக்கடன் பட்டவளாக இருப்பேன்''

''என்ன மாலதி இது. உன் நிலைமை புரிஞ்சு உதவ நினைக்கிறேன் அவ்வளவுதான்.''

''கேட்கிறேன்னு தப்பா நினைக்காதே மாலதி. இந்த நாலு வருஷத்தில் உன்னை காதலிச்சு ஏமாத்திட்டு போனவனை கண்டுபிடிக்கணும்னு எந்த முயற்சியும் செய்யலையா?

அவன் போட்டோ இருந்திருந்தால் போலீஸ் மூலமாக கூட ஏதாவது செய்திருக்கலாமே. உன் வாழ்க்கையை இப்படி வீணடிச்சி, உன் பிள்ளையையும் பிரிஞ்சு வாழப்போற துர்ப்பாக்கிய நிலைக்கு வந்துட்டியே மாலதி''

தோழி மீது உள்ள உண்மையான அக்கரையில் கேட்கிறாள்.

''இல்லை விஜி. உண்மையான காதலாக இருந்திருந்தால் பரிபூரணமாக நம்பின என்னை ஏமாத்தியிருக்க மாட்டான். அவன் அன்பு போலியானது. அது தெரிஞ்ச பிறகு, அவனை கண்டுபிடிச்சு என்ன பிரயோசனம்.

இந்த ஜென்மத்தில் நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். என் மகனாவது சீரும், சிறப்புமாக வாழட்டும். அது போதும் எனக்கு''

மனம் நெகிழ சொல்கிறாள் மாலதி.

★★★

மாலதி வேலை பார்த்துக் கொண்டிருக்க, அங்கு வந்த சாந்தி, '' நேத்து டாக்டரையும், அவங்க மிஸஸையும் கடையில் பார்த்தியா மாலதி''

''ஆமாம். சிஸ்டர். என் மகனுக்கு அடுத்த வாரம் பார்த்டே வருது டிரஸ் எடுக்க போயிருந்தேன். அது தெரிஞ்சு டாக்டரே நல்ல விலை உயர்ந்த டிரஸ் வாங்கி ப்ரசென்ட் பண்ணினாரு. ரொம்ப நல்ல மனிதர்.''

''டாக்டர், இங்கே ஹாஸ்பிடலில் வேலை பார்க்கிறவங்களை அவர் குடும்ப உறுப்பினர் போலத்தான் பார்ப்பாரு. இங்கே வேலை பார்க்கிறவங்களுக்கு சம்பளத்தை தாண்டி நிறையவே செய்திருக்காரு. பாவம் கடவுள் இன்னும் அவருக்கு குழந்தை பிராப்தத்தை கொடுக்கலை''

''நானே கேட்கணும்னு இருந்தேன். டாக்டருக்கு குழந்தை இல்லையா''

வருத்தம் தெரிய கேட்கிறாள்.

''இரண்டு பேரும் ட்ரீட்மெண்டில் இருக்காங்க. அந்த கடவுள் தான் கருணை செய்யணும். சரி நீ வேலையை பாரு டாக்டர் வர்ற நேரமாச்சு''

சாந்தி உள்ளே போகிறாள்.

★★★

மதியம் லஞ்ச்-டயம் அரட்டையடித்தபடி அனைவரும் சாப்பிட, மாலதி அதில் கலந்து கொள்ளாமல் யோசனையுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''சாந்தி சிஸ்டர், நீங்க டாக்டர் வீட்டிற்கு போயிருக்கீங்களா''

''ம்.. இரண்டு முறை போயிருக்கேன். வீடு பெரிய வீடுதான். இருந்தாலும் கிராமத்தில் இருக்கிற அவங்க பண்ணை வீடு அட்டகாசமாக இருக்கும்''

''அப்படியா அங்கேயும் போயிருக்கீங்களா''

''ஆமாம். போன வருஷம் ஒரு கல்யாணத்துக்காக அந்த பக்கம் போயிருந்தேன். டாக்டர் அந்த சமயம் அவங்க கிராமத்தில் தம்பி பையன் பர்ஸ்ட் பர்த்டேன்னு வரச் சொல்லி கூப்பிட்டாரு. அப்ப

அவங்க குடும்பத்தில் இருப்பவர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைச்சது.

அப்பா, அம்மா, தம்பி, அவர் மனைவி குழந்தைங்கன்னு எல்லாரையும் பார்த்தேன்.

சுற்றிலும் மரம், செடிகள் சூழ, நடு நாயகமாக அமைந்திருந்த அந்த வீடு, ஒரு குட்டி பங்களா போல இருந்துச்சு.

ஊரில் அவரோட அப்பாவுக்கு ஏகப்பட்ட மரியாதை . ஊர் ஜனங்க மரியாதையோடு ''ஐயா''ன்னு தான் கூப்பிடுறாங்க. அன்னைக்கு ஊருக்கே தடபுடலாக விருந்து வச்சாங்க.

காலம் காலமாக அந்த கிராமத்தில் கௌரவமாக வாழற குடும்பம் அதான் டாக்டரும் பெருந்தன்மையோடு இருக்காரு''

''நீங்க சொல்றதை பார்த்தால், எங்களுக்கும் அவர் கிராமத்திற்கு போய், பார்க்கணும் போல இருக்கு''

''என் கிட்டே பர்த்டே சமயம் எடுத்த பிக்சர்ஸ் இருக்கு பார்க்கிறீங்களா...''

''காண்பீங்க சிஸ்டர்''

ஆவலுடன் அனைவரும் அவளை சூழ,

செல்போனில் இருந்த படங்களை ஒவ்வொன்றாக காண்பிக்கிறாள்.

''இது தான் அவங்க வீடு. முகப்பே எவ்வளவு பெரிசா இருக்கு பாருங்க.

இதுதான் டாக்டரின் அப்பா, அம்மா பார்க்கவே அவங்கப்பா கம்பீரமாக தெரியறாரு இல்லையா...

இது டாக்டரோட தம்பியின் குட்டி பையன் அஜய், எவ்வளவு கியூட்டா இருக்கான் பாருங்க. இது அவனோட அக்கா அதிதி...

இது அவங்க பேமிலி போட்டோ... எல்லாரும் இருக்காங்க''

எல்லோரும் பார்க்க மாலதி அமைதியாக சாப்பிட்டு கை கழுவி வர,

''என்ன மாலதி, டாக்டர் பேமிலி போட்டோவை நீ பார்க்கலையா... வந்து பாரு''

சாந்தி கூப்பிட..

பார்க்காவிட்டால் தப்பாக நினைப்பார்கள் என்று மேலோட்டமாக பார்க்க, டாக்டரின் அருகில், மனைவியுடன் கையில் மகனை தூக்கியபடி சிரித்த முகத்துடன் நிற்பவன்... 'இவன்... என்னை ஏமாற்றியவன்...' கண்கள் இருள மயங்கி விழுகிறாள்.

கண்மூடி படுத்திருக்கிறாள் மாலதி.

''ப்ரஷர் அதிகமாகி மயங்கி விழுந்துட்டா. ஊசி போட்டிருக்கேன். ஒரு இரண்டு மணி நேரம் ரெஸ்ட் எடுக்கட்டும். என்னாச்சு சாந்தி... மதியம் லஞ்ச் சாப்பிடலையா''

ரகுவரன் படுத்திருக்கும் மாலதியின் அருகில் நின்று கேட்க,

''இல்லை டாக்டர். சாப்பிட்டு முடிச்ச பிறகு தான் இப்படியாச்சு. அவள் மனதில் ஏகப்பட்ட கவலை. அவ ஹஸ்பெண்ட் வெளிநாடு போனவன் திரும்ப வரவே இல்லையாம். நான்கு வயது பையனுடன் தனிமையில் கஷ்டப்படறதாக கேள்விபட்டேன்''

சாந்தி சொல்ல,

''பாவம், இந்த சின்ன பொண்ணுக்கு இந்த வயதில் இப்படியொரு கஷ்டமா... சரி சாந்தி .... மாலதி ரெஸ்ட் எடுக்கட்டும். ஈவ்னிங் பஸ்ஸில் போக வேண்டாம். என் காரிலேயே ட்ராப் பண்றேன். கண் விழிச்சதும் சொல்லுங்க. நான் ஓ.பி. பார்க்க போறேன்.''

## 7

**சோ**ர்ந்த முகத்துடன் உட்கார்ந்திருக்கும் மாலதியை பார்க்க, ரகுவின் மனதில் பரிதாபம் தோன்றுகிறது.

''எனக்கு பரவாயில்லை டாக்டர். நான் ஆட்டோ வச்சுட்டு போயிடுவேன். உங்களுக்கு சிரமம் வேண்டாம்'' மெல்லிய குரலில் சொல்ல,

''இதில் ஒன்றும் சிரமமில்லை. போற வழியில் உன்னை ட்ராப் பண்ணப் போறேன். வீடு பக்கத்தில் தான்னு சொன்னாங்க.

இரண்டு நாளைக்கு வரவேண்டாம் மாலதி. வீட்டில் ரெஸ்ட் எடு கொடுத்திருக்க மாத்திரைகளை தவறாமல் சாப்பிடு.

டென்சன் தான் பிரஷர் அதிகமானதற்கு காரணம். இரண்டு நாள் ரெஸ்ட் எடுத்தால் சரியாயிடும்''

அவள் மறுக்க, கட்டாயப்படுத்தி காரில் அழைத்துச் செல்கிறான்.

மாலதியின் வீட்டருகில் கார் நிற்க,

''உள்ளே வந்துட்டு போங்க டாக்டர்''

மாலதியின் அழைப்பை ஏற்று காரிலிருந்து இறங்க, பக்கத்து வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த ஆதி ஓடி வர,

பூட்டியிருந்த கதவை திறக்கிறாள்.

''இவன் தான் உன் பையனா மாலதி''

அம்மாவின் புடவையில் ஒளிந்து கொண்டு அவனை பார்க்க,

''ஆம்பிளை பையன் வெட்கப்படலாமா... இங்கே வா உன் பெயர் என்ன''

அவனை அருகில் அழைத்து கேட்க,

''ஆதித்யா. ஆனா எல்லாரும் ஆதின்னு கூப்பிடுவாங்க''

மழலை மாறாத குரலில் சொல்கிறான்.

''குட்'' குட்டி பையன் இந்த வீட்டில் இருக்கான்றதை மறந்துட்டேன். நாளைக்கு வரும் போது, உனக்கு சாக்லெட்ஸ் வாங்கிட்டு வரேன். ஸாரி ஆதி''

''உட்காருங்க டாக்டர். காபி எடுத்துட்டு வரேன்''

''நீ சிரமப்பட வேண்டாம். இன்னொரு நாள் வந்து சாப்பாடே சாப்பிடறேன். நான் கிளம்பறேன்''

அவன் விடை பெற்று காரில் ஏற,

அவனை பார்த்தபடி உள்ளே வந்த விஜி,

''யாரு மாலதி இது. உன்னை வீட்டில் விட்டுட்டு போறாரு. தெரிஞ்சவரா...''

கேட்க,

அதுவரை மனதில் அடக்கி வைத்திருந்த துக்கம் தொண்டையடைக்க, விஜியின் தோளில் சாய்ந்து 'ஓ வென

வாய்விட்டு அழுகிறாள் மாலதி

★★★

''கடவுளே. என்ன சொல்ற. நீ சொல்றதெல்லாம் நிஜமா.

''ஆமாம் விஜி. டாக்டரின் தம்பி தான் என்னை நம்ப வைத்து ஏமாற்றிய பாவி.''

''அப்புறம் என்ன மாலதி. இன்னும் ஏன் பேசாமல் இருக்கே. அவன் யாருன்னு தெரிஞ்சாச்சு. நேராக அவங்க வீட்டிற்கே போய் நியாயம் கேளு. உன் வாழ்க்கையை விட்டுத் தராதே. நீ கையில் பிள்ளையோடு கஷ்டப்பட, உன்னை ஏமாற்றிய பாவி, குடும்பம், மனைவி, குழந்தைகள்னு சந்தோஷமா வாழ்ந்துட்டு இருக்கான்''

கோபம் கொப்பளிக்க சொல்கிறாள் விஜி.

''என்னை வேண்டாம்னு உதறிட்டு போனவரை தேடிப் போய் என்ன பிரயோஜனம் விஜி.''

என்னையும், என் மகனையும் ஏத்துப்பாரா... முதலில் இவர் அவர் மகன்னு நான் சொன்னாலும் நம்புவாரா.. இல்லை அவர் மனைவி தான் தன் வாழ்க்கையை என்னுடன் பங்கு போடுவாளா?''

வேண்டாம் விஜி. இவர் எங்கே இருக்கார்னு தெரியாமலேயே இருந்திருக்கலாம்.

இந்த நல்ல மனிதருக்கு தம்பியாக பிறந்து... என் வாழ்க்கையையே சூறையாடிட்டாரு.''

''முட்டாள் மாதிரி பேசாதே. தப்பு செய்தவன் அவன் தண்டனை அனுபவிப்பது நீ. இதென்ன நியாயம். நீ ஆஸ்திரேலியாவும் போக வேண்டாம். எங்கேயும் போக வேண்டாம். உன் பிள்ளையோடு இங்கேயே இரு பிள்ளைக்கு அப்பன் யாருன்னு தெரிஞ்சு போச்சு.

அவன் மறுத்தால், டி.என்.ஏ. டெஸ்ட் பண்ணி, அவனுக்கு பிறந்தவன் தான் இந்த ஆதின்னு நிரூபிப்போம். அவனோட அண்ணனே ஒரு டாக்டர். அவருக்கு நியாயம், அநியாயம் தெரியாதா''

''மனசு குழப்பமாக இருக்கு விஜி. இப்போதைக்கு என்னால் எதையும் யோசிக்க முடியலை''

''சரி, சரி நீ ரெஸ்ட் எடு. ஆதி எங்க வீட்டில் இருக்கட்டும். நிதானமாக யோசித்து நல்லமுடிவுக்கு வருவோம்''

சொன்னவள்,

''ஆதி, அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. ரெஸ்ட் எடுக்கட்டும். நீ வா எங்க வீட்டுக்கு போகலாம்''

கை பிடித்து அவனை அழைத்துச் செல்ல, கண்ணீருடன் படுக்கையில் சாய்கிறாள் மாலதி.

★★★

''என்ன இன்னைக்கு லேட்டா வர்றீங்க. ஹாஸ்பிடலில் லேட்டாயிடுச்சா... ''

போர்டிகோவில் காரை நிறுத்தி இறங்கும் ரகுவரனிடம் கேட்க,

''அன்னைக்கு ஷாப்பிங் போகும் போது பார்த்தோமே, மாலதி அவ வீட்டுக்கு போய்ட்டு வரேன்''

''என்னாச்சு, ஏதாவது விசேஷமா''

''உள்ளே வா... விபரமா சொல்றேன்''

சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தவன்.

''மாலதி இன்னைக்கு ஹாஸ்பிடலில் மயக்கம் போட்டு விழுந்துட்டா..''

''ஐயோ... அப்புறம்... ''

''பயப்படற மாதிரி எதுவுமில்லை. ப்ரஷர் அதிகமாகி விழுந்துட்டா. ஏதோ டென்சன் தான் காரணம். அப்புறம் விசாரித்ததில், அவ ஹஸ்பெண்ட் வெளிநாட்டிலிருந்து வரவே இல்லையாம். தனிமையில் மகனுடன் இருக்காளாம். வாழ வேண்டிய வயசு... பார்க்கவே பாவமாக இருந்துச்சு. அதான் இரண்டு நாள் லீவு கொடுத்து வீட்டில் ரெஸ்ட் எடுன்னு சொல்லி அவளை வீட்டில் விட்டுட்டு வந்தேன்''

சிறிது நேரம் மௌனமாக இருந்தவள்,

''பார்க்கவும் அழகாக இருக்கா... இந்த உலகில் தனியாக

வாழறது எவ்வளவு கஷ்டம்... அவளுக்கு அம்மா, அப்பா யாருமில்லையா... ''

''அவள் அனாதை இல்லத்தில் வளர்ந்தவளாம்...

இனிமேல் தான் அவள் கதையை கேட்கணும். நாளைக்கு போய் பார்த்துவிட்டு வரணும்.''

'' நானும் வரட்டுமா...''

'' நீ எதுக்கு நந்தினி. நான் ஹாஸ்பிடலில் இருந்து திரும்பும் போது அப்படியே போயிட்டு வந்துடுவேன். சரி எனக்கு தலை வலிக்கிற மாதிரி இருக்கு. உன் கையால ஒரு காபி போட்டுட்டு வா... பார்ப்போம்''

'' நந்தினி எழுந்து உள்ளே போகிறாள்.

## 8

''புவனா... மாப்பிள்ளை கிட்டே கேட்டியா?''

'' கிராமத்துக்கு போறதை பத்தி தானே...''

' ஆமாம் சம்பந்தியை போய் பாத்திட்டு வரலாம்னு பார்க்கிறேன், நீயும், மாப்பிள்ளையும் வந்தால் நல்லா இருக்கும்.''

'' சொன்னேம்மா... அவருக்கு வேலை இருக்காம். பிள்ளைகளை அழைச்சுட்டு உன்னையும், என்னையும் போயிட்டு வர சொல்றாரு.''

'' அப்ப சரி, என்னோட காரிலேயே போகலாம். ஒரு நாள் தங்கிட்டு உங்க குல தெய்வம் கோவிலுக்கு போயிட்டு வருவோம்.'' சொல்கிறாள் ஜானகி.

ஊரிலிருந்து வந்திருக்கும் சம்பந்தியை புன்னகையுடன் வரவேற்கிறார்கள்.

''எங்களை பார்க்கணும்னு இவ்வளவு தூரம் வந்ததுக்கு ரொம்ப சந்தோஷம்.''

பேரன், பேத்தியை அருகில் அழைத்து கொஞ்சுகிறார்கள் சண்முகமும், வைதேகியும்...

'' பிள்ளைங்க வந்தால் தான் வீடே நிறைஞ்சிருக்கும்,

''வைதேகி சொல்ல'', பின்னே இல்லையா சம்பந்தி குழந்தை இல்லாத வீடு பாலை வனத்துக்கு சமம். வெறுமை குடி கொண்டிருக்கும் அந்த இடத்தில் சந்தோஷம் எப்படி வரும். மழலை செல்வம் தான் பெரிய சொத்து.''

நீட்டி முழக்கி ஜானகி சொல்ல எதுவும் சொல்லாமல் குழந்தை அஜயை தூக்கியபடி எழுந்து வெளியே போகிறார் சண்முகம்.

மட்டன், முட்டை மீன் என்று சம்பந்தி விருந்து தடபுடலாக நடக்கிறது.

''கிராமத்து சுவையில் மட்டன் குழம்பு பிரமாதமாக இருக்கு''

உண்மையில் ருசித்து சாப்பிடுகிறார் ஜானகி.

''ஒரு பத்துநாள் புவனாவோடு இருந்துட்டு போகலாம்னு வந்தேன். ஒரு நாள் ஏதோ மீட்டிங் இருக்குன்னு பெரிய மாப்பிள்ளை வீட்டிற்கு வந்தாரு. அவரையும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அவர் முகத்தில் பழைய சந்தோஷம் இல்லை. எதையோ இழந்தது போல, சோர்வாகவே தெரிஞ்சாரு. மனசுக்குள் கவலை அதிகமாகிடுச்சு போலிருக்கு''

ஜானகி சொல்ல வைதேகியின் முகம் வாடுகிறது.

''என்ன பண்றது சம்பந்தி. அவன் விஷயம் தான் எங்களையும் தூங்க விடாமல் பண்ணுது.

''எல்லாத்துக்கும் ஒரு விடியல் இல்லாமல் போகாது. அப்புறம் காலையில் உங்க குலதெய்வம் கோவிலுக்கு போயிட்டு வரலாமா....''

'' தாரளாமாக போகலாம்... அந்த காத்தாயி அம்மனை பார்த்தால் மனதுக்கு கொஞ்சம் நிம்மதி கிடைக்கும்'' சொல்கிறாள் வைதேகி.

அபிஷேகம், ஆராதனை என தடபுடலாக சாமிகும்பிட்டு பிரகார மண்டபத்தில் வந்து உட்கார்கிறார்கள்.

சண்முகம் அங்கிருப்பவர்களுடன் பேசிக்கொண்டிருக்க, அஜய் அதிதி விளையாட ஆரம்பிக்க,

''புவனா குழந்தைகளை பாரு.. விழுந்துடப் போறாங்க'' வைதேகி சொல்ல, புவனா எழுந்து போகிறாள்.

''இதுதான் சரியான சந்தர்ப்பம். சம்பந்தியிடம் பேச்சை ஆரம்பிக்க வேண்டியது தான்.

''அம்மனை தரிசனம் பண்ணினது எனக்கும் மனசுக்கு நிறைவாக இருக்கு. என் தங்கை மகள் புஷ்பா... வயசாகிட்டே போது... கல்யாணம் கூடி வரலை. புவனாவுக்கு இரண்டு வயது மூத்தவள். காத்தாயி அம்மன் கிட்டே தான் அடுத்த வருஷத்துக்குள் மாலை எடுத்து கொடு. உனக்கு பொங்கல் வைக்கிறேன்னு வேண்டிக்கிட்டேன்.''

'' உங்க பிரார்த்தனையை அம்மன் கட்டாயம் நிறைவேத்துவாள்''

சொல்கிறாள் வைதேகி.

'' நீங்க உங்க பெரிய மகனுக்காக ஏதாவது பிரார்த்தனை வச்சிருக்கீங்களா...''

''ஊரில் கண்ணில் படற சாமிக்கெல்லாம் பிரார்த்தனை வச்சுருக்கேன். எந்த சாமியாவது கண் திறந்து பார்க்காதான்னு காத்திட்டிருக்கேன்....''

'' உங்க மருமகளால் குழந்தைக்கு தாயாக முடியாதுன்னு சொல்லிட்டாங்களாமே... புவனா சொன்னா...''

''ஆமாம்... அதுதான் இப்ப எந்த முடிவுக்கும் வரமுடியாமல் குழம்பிப் போயிருக்கோம்''

'' எனக்கு ஒரு யோசனை தோணுது. தப்பா நினைக்க மாட்டீங்களே...''

'' சொல்லுங்க சம்பந்தி. நல்ல விஷயமாக இருந்தால் யார் சொன்னால் கேட்டுக்க வேண்டியது தான்... ''

'' நீங்க ஏன் உங்க பிள்ளைக்கு இன்னொரு கல்யாணம் பண்ணக் கூடாது''. கண்களை அகல விரித்து ஜானகியை பார்க்கிறாள்.

'' உங்க பிள்ளைக்கு என்ன குறை சொல்லுங்க . ஆள் ராஜா வாட்டம் இருக்காரு. கை நிறைய சம்பாத்தியம் சொத்து சுகம் இருக்கு. எல்லாம் இருந்தும் குழந்தை இல்லைன்னா.... எதுவுமே பிரயோசனப்படாது.

உங்க மருமகள் நந்தினிகிட்டே பேசுங்க.. அவளை வேண்டாம்னு ஒதுக்க சொல்லலை. இரண்டாம் தாரம் வந்து குழந்தை பிறந்தால் அவளுக்கும் சந்தோஷம் தானே... அவக்கிட்டே குறை இருப்பதால் தானே இப்படி ஒரு முடிவு எடுக்கிறோம்னு அவளும் புரிஞ்சுப்பா.... உங்க பிள்ளைக்கிட்டேயும் பேசி சம்மதிக்க வைங்க. ஊர் உலகத்தில் நடக்காதது இல்லை. குழந்தைக்காக இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறது சகஜம் தான்''

''என் மனசிலும் அப்படியொரு எண்ணம் வரத்தான் செய்யும். ஆனாலும் இது சரி வருமான்னு பயமும் வருது''

''ஒன்றும் பிரச்சனையில்லை. உங்க எல்லாருக்கும், இரண்டாம் கல்யாணம் பண்ணுவதில் சம்மதம் இருந்தால் என் தங்கை கிட்டே பேசி அவ மகள் புஷ்பாவயே உங்க பெரிய புள்ளைக்கு கட்டி வைக்கிறேன்.. எங்க குடும்பத்தில் கல்யாணமான மறு வருஷமே எல்லாரும் இடுப்பில் குழந்தையோடு இருப்பாங்க.''

முகம் மலர சம்பந்தியை பார்க்கிறாள்.

''என்ன சொல்றீங்க சம்பந்தி இதெல்லாம் நடக்குமா''

'' நீங்களும் உங்க மருமகள் நந்தினியும் மனசு வச்சால் நடக்கும். நீங்க உங்க மருமகள் கிட்டே முதலில் பேசுங்க''

எப்படியோ விஷயத்தை சம்பந்தியின் காதில் போட்ட திருப்தியோடு எழுந்திருக்கிறாள் ஜானகி.

மறுநாள் மதியம் ஒ.பி. முடிந்ததும், மாலதியிடமிருந்து அவள் 'செல்லுக்கு அழைப்பு வர, 'இவள் ஏன் கூப்பிடுகிறாள். திரும்ப ஏதாவது உடம்பு முடியாமல் போய் விட்டதா...' யோசனையுடன் எடுக்கிறான்.

'' சொல்லு மாலதி... எப்படியிருக்க... உடம்பு பரவாயில்லையா...''

''டாக்டர். 'லஞ்ச்'க்கு வீட்டுக்கு போறதுக்கு முன்னால என் வீட்டிற்கு வந்துட்டு போக முடியுமா. கூப்பிடறேன்று தப்பா நினைக்காதீங்க. உங்க கிட்டே சில விஷயம் பேசணும்.''

''கட்டாயம் வரேன்.''

மனதில் குழப்பம். 'என்னிடம் பேச என்ன விஷயம் இருக்கிறது. என் ஹாஸ்பிடலில் வேலை பார்க்கிறாள். நல்ல பெண் என்பதால் எல்லோரிடமும் காட்டும் அக்கறையை அவளிடம் காட்டினேன்'. மனசுக்குள் சின்ன தயக்கம் எட்டி பார்க்கிறது.

இருந்தாலும் என்னதான் சொல்லப் போகிறாள் என்ற ஆவலில் புறப்படுகிறான்.

கார் சப்தம் கேட்டதும்... கதவை திறக்கிறாள் மாலதி.

''உடம்பு இப்ப எப்படியிருக்கு''

கேட்டவன் அவளை பார்க்க. கண்ணெல்லாம் சிவந்து முகம் வீங்கி இருக்கிறது.

'என்னாச்சு இவளுக்கு....'

''என்ன மாலதி அழுதியா... ஏன் இப்படி இருக்கே. உடம்புக்கு என்ன பண்ணுது''

அக்கரையுடன் கேட்க, பொங்கி வரும் கண்ணீரை அடக்கியவள்

''உட்காருங்க டாக்டர்...

தயவு செய்து என் கதையை கேளுங்க. உங்ககிட்ட சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கேன். ''ரகுவரனுக்கு குழப்பம் இன்னும் அதிகமாக அவளையே பார்க்கிறான்.

அந்த பெரிய பங்களா கேட்டை திறந்து உள்ளே போகிறாள் மாலதி.

மூடியிருந்த ரூம் கதவை திறக்க,

''மாலதி.. வந்துட்டியாம்மா... வா...வா காலையிலிருந்தே உன்னை எதிர்பார்த்துட்டு இருந்தேன்.''

படுக்கையில் ஸ்டோர்க் வந்து அசைய முடியாத நிலையில் இருக்கும் அந்த வீட்டு பெரியவள் அழைக்க ''பெரியம்மா கொஞ்சம் லேட்டாயிடுச்சு... ஸாரிம்மா'' சொன்னவள், விறுவிறுவென்று அவளுக்கு வேண்டிய உதவிகள் செய்கிறாள்.

''உங்க இல்லத்தில் எல்லாரும் நல்லாயிருக்காங்களா... உங்க மேடத்துக்கு அறுபது வயது பிறந்த நாள் சிறப்பாக

கொண்டாடினார்களா''

''ஆமாம்மா... அதற்காக தானே போனேன். வீட்டோடு உங்களுக்கு துணையாக இருக்க தான் அனுப்பியிருக்காங்க. இனிமேல் இப்படி போகமாட்டேன்''

''பரவாயில்லம்மா... உன்னை மாதிரி இந்த சின்ன வயசில் யார் இப்படி பரிவோடு, அனுசரனையோடு இருக்காங்க... என் மகன் கிட்டே சொல்லி... உன் கல்யாணத்துக்கு நிறைய செய்யச் சொல்றேன்.''

''இருக்கட்டும்மா...இந்த அனாதைக்கு கல்யாணம் ஆகும் போது பார்ப்போம்.. அனாதை இல்லத்தில் வளர்ந்த எனக்கு உங்களை மாதிரி பெரியவங்க ஆதரவு கிடைச்சதே பெரிய விஷயம்.''

சொல்கிறாள் மாலதி.

அருகில் இருக்கும் மேன்சனில் தங்கி வேலைக்கு போய் வந்து கொண்டிருந்த கிரிதரன். ஒரு மாதமாகவே மாலதியை கவனிக்கிறான்.

'பக்கத்து பங்களாவில் இருக்கும் பெண் என்ன ஒரு அழகு. சுடிதார், புடவை எது போட்டாலும் அழகாக இருக்கிறாள். வாசலில் எப்போதும் இரண்டு கார் நிற்கிறது. அவள் அண்ணன் போலிருக்கிறது' என நினைத்துக் கொண்டான் மேலும் ' அவன் கிரானைட் பாக்டரி வைத்திருப்பதாக கேள்விப்பட்டான். மாலதியை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிரிதரனுக்கு ஒரு நாள் கிடைத்தது. கோவிலுக்கு கிளம்பியிருப்பான் போலிருக்கிறது. கையில் அர்ச்சனை கூடையுடன் நடந்து வருபவனை பார்த்தாள்.

ஏதோ யோசனையில் எதிரில் வருபவனை கூட கவனிக்காமல் அவன் மேல் மோதுவது போல வர,

''ஹலோ மேடம் பார்த்துவாங்க... இவ்வளவு பெரிய உருவம் எதிரில் வருவது தெரியலையா... ''அப்போது தான் நிமிர்ந்து அவனை பார்க்கிறாள்.

''ஸாரி... பார்க்கலை...''

இமைகள் படபடக்க அவனை பார்ப்பவளை அள்ளி விழுங்குவது போல பார்க்கிறான்...

''இந்த பங்களாவில் தானே இருக்கீங்க....''

''ஆமாம்.. கோவிலுக்கு போறேன்.''

''பார்த்தாலே தெரியுது. ரொம்ப பயபக்தியாக இருப்பீங்க போலிருக்கு''. 'முன்பின் பழக்கமில்லாதவன் தெருவில் நிறுத்தி இவ்வளவு சகஜமாக பேசுகிறானே என்ற எண்ணம் வர தயக்கத்துடன்

''நான் வரேன்...'' அவனை தாண்டி நடக்க தொடங்க,

''ஒரு நிமிடம்... பயப்படாதீங்க.. நான் ரொம்ப நாளாகவே உங்களை கவனிக்கிறேன். இதோ இந்த மேன்சனில் தங்கியிருக்கேன். ஐ.டி. கம்பெனியில் வேலை பார்க்கிறேன். என் பெயர் கிரிதரன்.

'இவனை என்னிடம் அறிமுகப்படுத்தி கொள்ள அவசியம் என்ன..' மனதில் கேள்வி எழ,

''சரிங்க.. கோவிலுக்கு நேரமாச்சு....''

'' என் பேரை சொல்லி அறிமுகப்படுத்திக் கிட்டேன். உங்க பேரை நான் தெரிஞ்சுக்க கூடாதா...''

''மாலதி''

சொன்னவள் நெஞ்சம் படபடக்க நடக்கத் தொடங்கினாள்.

அதற்கு பிறகு அவனாக வலிய வந்து அவளை சந்திக்க ஆரம்பித்தான். அவள் தினமும் கோவிலுக்கு செல்வதை அறிந்து அவளுக்காக, அவனும் கோவிலுக்கு வர,

அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கும் இளவயது, உறவென்று சொல்ல யாருமில்லாத தனிமையில் வளர்ந்தவள், கிரிதரன் தன்னை காதலிக்கிறான் என்பது தெரிந்து அவளும் மனதை அவனிடம் பறி கொடுக்கிறாள்.

''உன்னை எனக்கு ரொம்பவே பிடிச்சு போச்சு மாலதி. என்னவே வா தெரியலை. உன்னை பார்த்ததும் உனக்கும் எனக்கும் பூர்வ

ஜென்ம தொடர்பு இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டேன்.

நான் இப்பதான் படிப்பு முடிஞ்சு வேலையில் சேர்ந்திருக்கேன். கூடிய சீக்கிரம் நல்ல வேலை கிடைச்சு கோயமுத்தூர் போயிடுவேன். அப்புறம் அப்பா, அம்மா, கிட்டே சொல்லி உன்னை என் மனைவியாக்கிடுவேன் மாலதி...''

அவள் கைபிடித்து அன்போடு சொல்கிறான்.

''கோயமுத்தூரில் பெரிய கம்பெனியில் நல்ல சம்பளத்தோடு வேலை கிடைச்சாச்சு!!''

''எப்ப கிளம்ப போறே கிரி''

அவனுடன் தங்கியிருக்கும் சக நண்பன் கேட்க

''அடுத்த வாரத்தில் கிளம்பணும்.''

'' பரவாயில்லை. உனக்கு அதிர்ஷ்டம் நிறையவே இருக்கு. அப்புறம் கேட்கணும்னு நினைச்சேன். பக்கத்து பங்களாவில் வேலைக்கு இருக்கும் பொண்ணுடன் உன்னை பார்த்தேன். உனக்கு தெரிஞ்சவளா...''

அதிர்ச்சியுடன் அவனை பார்க்கிறான்.

''அந்த பெண் அங்கே வேலை பார்ப்பவளா... எனக்கு தெரியாது. அடிக்கடி பார்ப்பதால் பேசினேன்.'' சமாளிக்கிறான்.

''ஆமாம்பாஅனாதை இல்லத்தில்வளர்ந்தவளாம். அந்த வீட்டு பெரியம்மா 'ஸ்டோர்க்' வந்து படுக்கையில் இருக்காங்க. நர்ஸிங் படிச்சதாலே இவள வீட்டோடு வேலைக்கு வச்சுருக்காங்க.

நல்ல டிரஸ் பணம் கொடுத்து வீட்டில் ஒரு ஆள் போல வச்சிருக்காங்க. அந்த வீட்டு டிரைவர் சொன்னான்.''

''மாலதி இது உன் வீடு இல்லையா...'' அவனை நிமிர்ந்து பார்க்கிறாள்.

''ஏன் நான் ஏழைன்னா... என்னை கைவிட்டுடுவீங்களா கிரி..''

''அப்படியில்லை. நாம் பழகி இரண்டு மாசமாகுது நீ உன்னை பத்தி எதுவும் சொல்லலை.''

'' எனக்குள்ளும் சின்ன தயக்கம் இருந்துச்சு கிரி. உங்க

அன்பு உண்மையானதாக இருந்தா அதற்கு பிறகு என்னை பற்றி சொல்லலாம்னு இருந்தேன். நான் இந்த பங்களாவில் இருப்பதால் இது என் வீடு இல்லை. நான் அனாதை இல்லத்தில் வளர்ந்தவள். அம்மா, அப்பா யாரென்று தெரியாதவள். அவங்க தயவில் நர்ஸில் படிச்சதால் அவங்க பெரியம்மாவுக்கு உதவியாக இருக்க அனுப்பி வச்சாங்க

என் வாழ்க்கையை நான் தான் தேடிக்கணும். எனக்குன்னு யாருமில்லை. உங்க பழக்கம். அன்பு.. என் மேல் காட்டிய அக்கறை சத்தியமா சொல்றேன் கிரி. உங்களை கைப்பிடிச்சு உங்களோடு வாழணும்ங்கிற ஆசை அதிகமாயிடுச்சு... இப்ப என்னை பத்தி சில விபரம் எல்லாம் சொல்லிட்டேன். இப்ப சொல்லுங்க கிரி. நம்ப காதல் உண்மையானது தானே''

கண்களில் அன்பை தேக்கி பார்க்கும் மாலதியிடம் தன் ஏமாற்றத்தை மறைந்தவனாய்,

''உனக்கு இதில் என்ன சந்தேகம் மாலதி, நான் சொன்ன மாதிரி கோயமுத்தூரில் புது வேலையில் ஜாயின் பண்ணினதும் அம்மா, அப்பாக்கிட்டே பேசி நம் கல்யாணத்தை நடத்துவேன் போதுமா''

சொல்ல மனம் நெகிழ்ந்தாள் மாலதி.

''மாலதி அடுத்த வாரம் ஊரை காலி பண்ணி கிளம்புறேன். கோயமுத்தூர் போய் செட்டில் ஆன பிறகு உன்னை பார்க்க வரேன். எனக்காக காத்திருப்பியா மாலதி''

'' காலமெல்லாம் இந்த மாலதி உங்களுக்காக காத்திருப்பா.. சீக்கிரம் வந்துடுங்க கிரி...''

''உன் ஞாபகமாக என் மனதில் எப்போதும் உன்னை வைச்சு இருக்கிற மாதிரி நீ ஏதாவது எனக்கு தரணும் மாலதி.''

''என்ன வேணும் கேளுங்க. உங்களுக்கு இல்லாததா எது கேட்டாலும் நிச்சயம் தருவேன்.'' கண்களில் காதலுடன் சொல்கிறாள். ஆனால் அவன் தன்னையே கேட்பான் என்று கனவிலும் நினைக்கவில்லை. ஹோட்டல் தனி அறையில்

அவளருகில் நெருக்கமாக அமர்ந்திருந்தவனிடம்,

'' கல்யாணத்துக்கு முன்னாள் இது தப்பில்லையா கிரி, நாம தப்பு செய்யப்போறாம்னு பயமாயிருக்கு..''

''அப்ப நீ என்னை முழு மனதாக நம்பலை அப்படித்தானே..''

''ஐயோ... அப்படியில்லை.. என் வாழ்க்கையே நீங்க தான்னு நினைச்சுட்டிருக்கேன்....''

''அப்புறம் என்ன மாலதி நமக்குள் ஏற்படப் போற இந்த பிணைப்பு நிச்சயம் நம்மை ஒன்று சேர்க்கும்''

தன்னோடு சேர்த்து தழுவுகிறான் கிரி..

''கோயமுத்தூர் வந்துட்டேன். மாலதி இங்கு வேலை பிஸியா இருக்கு. இன்னும் பத்து நாளில் அங்கு வரேன்.''

அவனிடமிருந்து போன் வர நம்பிக்கையுடன் காத்திருக்கிறாள் மாலதி. நாட்கள் நகர தலைசுற்றல், வாந்தி வர மனதில் பயம் துளிர்க்கிறது. கிரியை தொடர்பு கொண்டால் போன் ஸ்விட்ச் ஆப்பில் இருக்கிறது.

தவிக்கிறாள். மனதுக்குள் அழுது புலம்புகிறாள். விஷயம் வெளியே தெரிஞ்சு.. அவளுக்கு ஆதரவு தந்த பெரியம்மாவே, ஒழுக்கம் கெட்டவள் என்று வீட்டை விட்டு துரத்த, அவள் வளர்ந்த இல்லத்திலே... இனி நீ இங்கே இருக்க லாயக்கில்லை. உன் வழியை நீ பார்த்துக்கொள் என்று கைவிரிகிறார்கள்.

கிரிதரன் தன்னை ஏமாற்றி விட்டான் என்று முழுமையாக உணர்ந்த பிறகு வாழவே இஷ்டமில்லாமல் உயிர் விட துணியும் போது நல்லவர் ஒருவரால் காப்பாற்றப்பட்டு...

வாழ்க்கை எப்படி எப்படியோ சென்று ... ஒரு குழந்தைக்கு தாயாகி வாழ வழி தேடி... ஊர் ஊராக திரிந்து ... இப்போது இங்கே...

இதற்கெல்லாம் காரணம் உங்க தம்பி கிரி....

யாரு... எங்கே இருக்காரு எதுவுமே தெரியாமல்... என் வாழ்க்கையை பறிகொடுத்து... அப்பன் பேர் தெரியாதவனாய்

என் பிள்ளை வளர நான் செய்த பாவம் என்ன சொல்லுங்க டாக்டர்.... நான் தான் அடையாளம் இல்லாமல் அனாதை என்ற அடைமொழியோடு வாழ்ந்தேன்.... என் பிள்ளைக்கும் அதே நிலைமை வரணுமா....''

''அழுகையுடன் சொல்ல...

''திக்பிரமை பிடித்தவனாய் அப்படியே அமர்ந்திருக்கிறான் ரகு..

'கடவுளே... கிரி என்ன காரியம் செய்திருக்கிறான்...

ஒரு பெண்ணை நம்ப வைத்து ஏமாற்றும் குணம் இவனுக்கு எப்படி வந்தது. அப்பா அப்படியா எங்களை வளர்த்தார். கிராமத்தில் மரியாதை, கௌரவத்துடன் வாழும் குடும்பம் இது மட்டும் தெரிந்தால் அப்பா துடித்துப் போய் விடுவார். என் மகனா இப்படியொரு காரியம் செய்தான் என்று, கூனிக்குறுகி போய் விடுவாரே....

கடவுளே இவள் கதை தெரிந்து நான் இப்போது என்ன செய்யப் போகிறேன்.

'' மாலதி... ப்ளீஸ் அழாதே.. என் தம்பி எவ்வளவு பெரிய பாதகம் செய்திருக்கிறான்... அதுக்காக நான் வெட்கப்படறேன்.. வேதனைப் படறேன்.. உன்கிட்டே மன்னிப்பும் கேட்கிறேன்..

உன்கிட்டே நானும் எதையும் மறைக்கவும் விரும்பலை.. அவன் உன்னை காதலித்த விஷயம் எனக்கு தெரிந்திருந்தால் நிச்சயம் உன்னை அவனுக்கு கல்யாணம் செய்திருப்பேன். எங்ககிட்டே அவன் எதையும் சொல்லலை. இப்ப இரண்டு குழந்தைகளோடு மனதில் எந்த குற்ற உணர்வும் இல்லாமல் வாழ்ந்துட்டு இருக்கான். என் அப்பா அருமையாக இரண்டு பிள்ளைகளை பெத்தோம். நம் பெயர் சொல்லும்படி கௌரவமாக வாழ்ந்துட்டு இருக்காங்கன்னு மனதளவில் பெருமிதம் பொங்க வாழ்ந்துட்டு இருக்கார். ஆனா.

அருமையான மனைவி எனக்கு அமைச்சும், கடவுள் குழந்தை

பாக்கியத்தை தராமல் எங்களை தண்டிச்சுட்டானேன்னு மனக்கவலையை மறைச்சு நாங்க வாழ்ந்துட்டு இருக்கோம்.

இப்பமுடிவு உன்கையில் நீஎன்ன சொன்னாலும் செயல்படுத்த தயாராக இருக்கேன். என் தம்பியை உன் கண் முன்கொண்டு வந்து நிறுத்தணுமா சொல்லு கட்டாயம் செய்யறேன்.''

''கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதுக்கு இனிமேல் அவரை பார்த்து என்ன நியாயம் கேட்க முடியும். அவர் அன்பு உண்மையானது இல்லை. நான் பணக்காரி இல்லை. அனாதைன்னு தெரிஞ்ச பிறகு... அவர் மனசை மாத்திக்கிட்டாரு... இருந்தாலும் என்னை வேண்டாம்னு சொல்லியிருந்தால் ஏமாற்றத்துடன் விலகி இருப்பேன். உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லி நம்பவச்சு ஏமாத்திட்டாரு. இப்ப நான் அவர் சட்டையை பிடிச்சு நியாயம் கேட்டு என்ன பிரயோசனம்... அவர் குடும்ப வாழ்க்கை சிதறிப் போகும். கிராமத்தில் கெளரவமாக வாழற அந்த பெரிய மனிதருக்கு தலைகுனிவு ஏற்படும். ஒரு டாக்டராக, நல்ல மனிதராக மக்களுக்கு சேவை செய்யுற உங்களுக்கு பெரிய அவமானமாக இருக்கும்.

வேண்டாம் டாக்டர். போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தனோ தெரியலை. இப்ப அப்பா அம்மா யாருன்னு தெரியாத அனாதையா வாழறேன். ஒரு நல்ல குடும்பத்தை கெடுத்த பாவத்தை நான் செய்ய விரும்பலை.

ஆனால் உங்க கிட்டே ஒரே ஒரு உதவி மட்டும் கேட்க தோணுது செய்வீங்களா...''

தயக்கத்துடன் அவனை பார்க்கிறாள்.

'' என்ன செய்யணும் சொல்லு மாலதி. செய்ய கடமைப்பட்டவன் நான்... ''

'' நான் தான் அனாதையாக வாழ்ந்துட்டேன்.. என் மகனும் அதே போல வாழ்ந்திடக் கூடாது. நான் ஏற்கனவே எடுத்த முடிவு தான் இன்னும் இரண்டு மாசத்தில் வேலைக்கு

ஆஸ்திரேலியா போறேன். திரும்பி இங்கே வரமாட்டேன். என் மகனை ஒரு நல்லவங்களுக்கு தத்து கொடுப்பதுன்னு முடிவு பண்ணி அதற்கான ஏற்பாட்டையும் செய்துட்டு இருக்கேன். ஆனால் என் மகன் உங்க குடும்ப வாரிசுன்னு தெரிஞ்ச பிறகு அவன் உரிமையுள்ள இடத்தில் வளரணும்னு என் மனம் ஆசைப்படுது. என்னை பத்தின உண்மை யாருக்கும் தெரிய வேண்டாம். அது உங்க மனதோடு இருக்கட்டும். ஆனால் நீங்க என் மகனை உங்க மகனாக தத்தெடுப்பீங்களா டாக்டர்.

உங்க தம்பி மகன் உங்க மகனாக வளரட்டும் நீங்களும், உங்க மனைவியும் அப்பா அம்மாவாக இருந்து என் மகனை வளர்த்து அவனுக்கு ஒரு கவுரவத்தை ஒரு அடையாளத்தை தரணும். உரிமையுள்ள இடத்தில் சேர்த்துட்டேன்கிற திருப்தியோடு இந்த உலகத்தின் ஏதாவது ஒரு மூலையில் வாழ்ந்துட்டு போயிடுவேன். இந்த உதவியை மட்டும் செய்வீங்களா டாக்டர்.

சத்தியமா இந்த விபரத்தை யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன். உங்க மனைவிக்கும் தெரிய வேண்டாம். ஏதோ ஒரு அனாதை இல்லத்திலிருந்து தத்தெடுத்ததாக எல்லாருக்கும் சொல்லுங்க.. உங்க தம்பி வாழ்க்கையிலும் குறுக்கிட மாட்டேன் இதுசத்தியம்.''

தெளிவாக பேசுபவளை பிரமிப்போடு பார்க்கிறான்.

இரவு களைப்போடும் சோர்ந்த முகத்தோடும் வருபவனை பார்க்கிறாள் நந்தினி.

''என்னாச்சு, மதியம் சாப்பிட வரலை போன் பண்ணினாலும் எடுக்கலை.''

''கொஞ்சம் பிஸியாக இருந்தேன். அதான் வரமுடியலை...''

''இல்லையே.. நான் ஹாஸ்பிடலுக்கு போன் பண்ணினேன். சாந்தி சிஸ்டர்.. நீங்க லஞ்சுக்கு கிளம்பிட்டதாக சொன்னாங்க...

''அப்படியா... ஒரு ப்ரெண்டை பார்க்கப்போனேன்.. லேட்டாயிடுச்சு.. சரி விடு எனக்கு பசிக்குது. குளிச்சிட்டு வரேன். டிபன் எடுத்து வை''

உள்ளே போக தன்னிடம் எதையோ மறைக்கிறான் என்பது மட்டும் தெளிவாக புரிய, மௌனமாக உள்ளே போகிறாள் நந்தினி.

## 9

"முட்டாள் தனமான முடிவு மாலதி"

"இல்லை.. இதுதான் சரியான முடிவு. டாக்டரும் ஆதியை அவர் மகனாக ஏத்துக்க சம்மதம் சொல்லிட்டாரு.. எனக்கு இது போதும் விஜி. என் மகன் உரிய இடத்தில் சேரப் போறான்.. ஒரு குடும்பத்தை கெடுத்த பாவியாக விரும்பலை விஜி" தீர்மானமாக சொல்கிறாள் மாலதி...

"மாலதி வேலையை விட்டு நின்னுட்டா டாக்டர்... என்ன காரணம்னு தெரியலை ஒரு சமயம் ஆஸ்தியேலியா போக போறதாக சொல்லியிருந்தா... அதுவோ என்னவோ தெரியலை"

சாந்தி சொல்ல...

"இட்ஸ் ஓ.கே... நீங்க வேற ஆளை அப்பாயிண்ட் பண்ணிருங்க சாந்தி..."

அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் ரகுவரன் பதில் சொல்ல மாலதி நல்ல பெண் என்று அக்கறை காட்டியவர் ஒரு வார்த்தை கூட அது பற்றி பேசாமல் பதில் சொன்னது சாந்திக்கு உண்மையில் ஆச்சரியமாக இருந்தது.

"பை நிறைய சாக்லேட்.. பழங்களுடன் உள்ளே வருகிறான்.. ரகுவரன்

" எதுக்கு டாக்டர் இவ்வளவு பழங்கள்" மாலதி கேட்க... "எல்லாம் என் மகனுக்கு தான்... ஆதி எங்கே காணும்.." "பக்கத்து வீட்டில் இருக்கான் கூப்பிடறேன்". வாசலில் கார் நிற்பதை பார்த்து அவனாகவே ஓடி வருகிறான்.

" ஆதி... வா... வா இதெல்லாம் உனக்கு தான் இங்கே பாரு.. இந்த டாய்ஸ் உனக்கு பிடிச்சிருக்கா.."

" ரொம்ப நல்லா இருக்கு அங்கிள்"

ஆதி சொல்ல,

''ஆதி உன்கிட்டே நான் என்ன சொல்லியிருக்கேன்''

மாலதி அவன் கையை பிடித்து கேட்க

''ஸாரி.. நீங்க அங்கிள் இல்லையாம்.... எனக்கு நீங்க அப்பாவாம்.. அதனால உங்களை அம்மா, டாடின்னு கூப்பிட சொல்லியிருக்காங்க... அதே மாதிரி இவங்க என் அம்மா இல்லையாம்... என் அம்மா உங்க வீட்டில் இருக்காங்களாம்... கூடிய சீக்கிரமே என்னை நீங்க உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போயிடுவீங்களாம்..

அப்புறம் அங்கே நிறைய டாய்ஸ் இருக்குமாம்... தினமும் காரில் ஸ்கூலுக்கு போகலாமாம்... என்னோட அம்மா என்னை ரொம்ப நல்லா பார்த்துக்குவாங்களாம்.. அம்மா சொன்னாங்க.. எப்படாடி என்னை கூட்டிட்டு போவீங்க..''

புருவத்தை உயர்த்தி மாலதியை பார்க்கிறான்..

'' ஆமாம்.. டாக்டர் ஆதி சின்ன குழந்தை இல்லை.. சொன்னால் புரிஞ்சுக்கக் கூடிய வயசு தான். அவன் கிட்டே விபரமாக சொல்லியிருக்கேன்...

கொஞ்ச நாள் சாமி உன்னை என்கிட்டே கொடுத்தாரு, இப்ப உன்னோட அப்பா அம்மா வந்துட்டாங்க... நீ இந்த அம்மாவையே நினைச்சுட்டு இருக்கக் கூடாது சாமி வேற வேலை கொடுத்ததாலே அம்மா போயிடுவேன் என்னை தேடக் கூடாதுன்னு விபரமாக சொல்லியிருக்கேன்''

'' எனக்கென்னவோ மாலதி.. சின்ன தயக்கம் இருக்கு. உண்மையை மறைக்க முடியுமான்னு தெரியலை. நந்தினி ஆதியை நிச்சயமாக மகனாக ஏத்துப்பாள். அதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.இருந்தாலும்இவன் யார், எப்படி நமக்கு கிடைச்சான்னு அவ ஆயிரம் கேள்விகள் கேட்கும் போது ஆதியே உன்னை பற்றி சொல்வான் இதெல்லாம் எப்படி சாத்தியம் மாலதி.

தப்பு செய்தவன் என் தம்பி. ஆனால் தண்டனை அனுபவிப்பது நீ. மனசுக்கு கஷ்டமாக இருக்கு மாலதி''

''பயப்படாதீங்க டாக்டர்''

சொன்னவள்

''ஆதி இங்கே வாப்பா''

மகனை அருகில் அழைக்கிறாள்

''உன்னை டாடி வீட்டுக்கு கூட்டிட்டு போனதும் அங்கே உன் அம்மா இருப்பாங்க இல்லையா''

''ஆமாம்''

''அவங்க உன்கிட்டே இத்தனைநாள் எங்கே இருந்தேன்னு கேட்பாங்க அவங்களுக்கு நீ என்ன பதில் சொல்வே''

''நான் நிறைய பிள்ளைகளோடு ஒரு இடத்தில் இருந்தேன். டாடி வந்து என்னை இங்கே அழைச்சுட்டு வந்தாங்க. அங்கே ஒரு அம்மா என்னை நல்லா பார்த்துக்கிட்டாங்க அந்த அம்மா இப்ப வேற ஊருக்கு போயிட்டாங்க. இனி நீங்க தான் என் அம்மான்னு சொல்வேன்''

''ஆதி புத்திசாலி. நிச்சயம் நான் சொன்ன மாதிரி சொல்வான். எந்த பிரச்சனையும் வராது

நானும் இரண்டு மாசத்தில் கிளம்பறேன். பிள்ளையை பிரிந்து போறோங்கிற வருத்தம் எனக்கு துளியும் இல்லை டாக்டர்.

கடவுள் என் மகனை சேர வேண்டிய இடத்தில் சேர்த்துட்டாரு ஒரு நல்லவரின் மகனாக அவனுக்கு உரிமையுள்ள இடத்தில் சகல சவுபாக்கியத்தோடு வாழப் போறான்ங்கிறதை நினைக்கும்போது மனசுக்கு நிறைவாக இருக்கு டாக்டர்

எனக்கு இது போதும்''

கண் கலங்க சொல்கிறாள்.

★★★

''உன் அக்கவுண்ட்டில் அஞ்சு லட்சம் பணம் போட்டிருக்கேன் மாலதி. ஊருக்கு போக உனக்கு தேவையானதை வாங்கிக்க. அங்கே போனதும் எது தேவைன்னாலும் எனக்கு போன் பண்ணு. எந்த உதவியாக இருந்தாலும் கட்டாயம் செய்வேன்''

மனம் கசிய சொல்கிறான் ரகுவரன்.

''நீங்க நான் இங்கே இருக்கும் வரை செய்யும் உதவிகள் மட்டும் போதும் டாக்டர்.

நான் ஆஸ்திரேலியா போனதும் தயவு செய்து நமக்குள் எந்த தொடர்பும் வேண்டாம். தேவையில்லாமல் அது என் மகன் வாழ்க்கையில் பிரச்சனைகளை ஏற்படுத்தும். அவன் உங்க மகன். நந்தினி அக்காவும் நீங்களும் தான் அவனுடைய அம்மா, அப்பா. தயவு செய்து அதற்கு பிறகு நீங்களும் என்னை மறந்துடுங்க''

குரல் தழுதழுக்க மாலதி சொல்ல

பதில் சொல்ல முடியாமல் மனம் கனக்க அப்படியே உட்கார்ந்திருக்கிறான் ரகுவரன்.

## 10

**ஹா**ஸ்பிடல் உள்ளே வருகிறான் ரகுவரன்.

அவனை பின் தொடர்ந்து அவன் ரூமிற்கு வந்த சாந்தி ''டாக்டர் மதியம் நீங்க பனிரெண்டு மணிக்கு போயிட்டு அப்புறம் வர்றதாக சொன்னதால் பத்து பேஷண்டுக்கு மேலே வெயிட் பண்ணி பார்த்துட்டு மூணு மணிக்கு தான் போனாங்க டாக்டர்''.

''பரவாயில்லை என்ன செய்யறது டாக்டர்னா தொழிலை மட்டும் பார்க்க முடியுமா வேற வேலையும் இருக்கத் தான் செய்யும். நீங்க தான் எதையாவது சொல்லிசமாளிக்கணும். இப்பவும் ஓ.பி. முடிச்சுட்டு சீக்கிரம் கிளம்பணும். எட்டு மணிக்கு மேல் டோக்கன் தராதீங்க. எனக்கு வேலையிருக்கு''

ரகுவரன் சொல்ல

''ஓகே டாக்டர்''

சொன்ன சாந்தி வெளியே வருகிறாள்

''என்னாச்சு டாக்டருக்கு ஒரு மாதமாகவே வித்தியாசமாக நடக்கிறார். எப்போதும் ஏதாவது யோசனையுடன்

இருப்பதாகவே தோன்றுகிறது''

ஒருசமயம் குழந்தைக்காக ட்ரை பண்ணுவதில் ஏதாவது பிரச்சனையா. எதுவும் புரியவில்லை சாந்திக்கு.

செல்போன் அழைக்க

''சொல்லுங்க சித்தி நான் டியூட்டியில் இருக்கேன். அப்புறம் பேசட்டுமா''

''ஒண்ணும் விஷயமில்லை சாந்தி. சித்தப்பாவுக்கு உங்க டாக்டர்கிட்டே காண்பிக்கணும் கிளம்பி வரலாமான்னு கேட்க தான் போன் பண்ணினேன்.''

''தாராளமா வாங்க ஏழு மணிக்குள்ள வந்துடுங்க டாக்டர் சீக்கிரமே கிளம்பிடுவாரு''

''நானே கேட்கணும்னு இருந்தேன். நம்ப வீட்டுக்கு அடுத்த தெருவில் இருக்கும் சூப்பர் மார்க்கெட்டுக்கு அடிக்கடி போவேன், அந்த தெருவில் உங்க ஹாஸ்பிடலில் வேலைக்கு சேர்ந்தாளே மாலதி அவள் வீட்டு முன் உங்க டாக்டரின் கார் அடிக்கடி நிக்குது.

அந்த பொண்ணு புருஷன் இல்லாமல் பிள்ளையோடு தனியா இருக்குது. உங்க டாக்டருக்குஅங்கே என்ன வேலை. நல்ல மனுஷன்னு சொல்வே... எப்படியோ அந்த பொண்ணு அங்கே தானே வேலை பார்க்குது.''

''இல்ல சித்தி... அவ வேலையிலிருந்து நின்னு ஒரு மாசத்துக்கு மேலாச்சு... நீங்க நேரில் வாங்க பேசுவோம்...''

போனை வைத்தவளின் மனதில் பல குழப்பங்கள் உண்டானது.

காலையில் எழுந்ததிலிருந்து மனது சரியில்லை நந்தினிக்கு. இரவு ஏதோ கெட்ட கனவு. அதனாலோ என்னவோ... தலை வலிக்கிற மாதிரி இருக்க ரகுவரன் ஹாஸ்பிடல் கிளம்பியபிறகு மாத்திரை போட்டு சோபாவில் சாய்கிறாள்.

ரகுவரனும் ஒரு மாதமாக சரியாக பேசாமல் பித்து பிடித்துவிட்

டது போல இருக்கிறார். அடிக்கடி ஹாஸ்பிடலிலிருந்து வெளியே போகிறார் நேரத்திற்கு சாப்பிட வருவதில்லை.

ஒவ்வொரு நாள் சாப்பாடே வேண்டாம் என்கிறார் என்னாயிற்று இருவருக்கு.'

வெளியே, குழந்தை இல்லை என்பதுபெரிய விஷயமில்லை என்று சொன்னாலும் மனதளவில் பாதித்திருக்கிறார் என்பது நன்றாக தெரிகிறது. இந்த விஷயத்தில் நான்என்ன செய்ய போகிறேன்.'

நினைக்க நினைக்க தலைவலி அதிகமாகியது.

செல்போன் அழைக்க யார் என்று பார்க்கிறாள். கிராமத்திலிருந்து போன்,

''ஹலோ மாமா எப்படி இருக்கீங்க...''

''நான் மாமா இல்லை அத்தை பேசறேன் நந்தினி.''

''சொல்லுங்க அத்தை... நல்ல இருக்கீங்களா.... எப்பவும் மாமா தான் கூப்பிடுவாங்க... அப்புறம் தான் உங்க கிட்டே தருவாங்க அதனால மாமாதான்னு நினைச்சேன்.''

''மாமா தோட்டத்திற்கு போயிருக்காங்க. அவங்களுக்கு தெரியாமல் உன்கிட்டே சில விஷயங்கள் பேசணும்னு தான் கூப்பிட்டேன்.''

மனதில் சின்ன நெருடல்

'என்ன பேசப் போகிறார்.'

''ரகுவரன் எப்படியிருக்கான். குழந்தை விஷயத்தில் என்ன முடிவுக்கு வந்திருக்கீங்க...''

''அதைபத்தி நாங்க அதிகம் பேசறதில்லை அத்தை. டாக்டர் நம்பிக்கையாக எதுவும் சொல்லலை. இருந்தாலும் தொடர்ந்து மருந்து மாத்திரை சாப்பிடச் சொல்லியிருக்காரு.''

''என்னபிரயோசனம்அதான்உன்கருமுட்டைக்குகுழந்தையை உருவாக்கும் திறன்இல்லைன்னு கைவிரிச்சுட்டாங்களே...''

சிறிதுநேரம் எதுவும் பேசாமல் மௌனமாக இருக்கிறாள்

நந்தினி.

''அத்தை இப்படி சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இந்த விஷயத்தில் பெண்களாகிய நாம்தான் பேசி நல்ல முடிவெடுக்கணும். என் மகனுக்கு வாரிசு இல்லாமல் அவன் வாழ்க்கை முடியக்கூடாது. நீ மனசு வச்சால் மட்டும்தான் அவன் வாழ்க்கையில் நல்லது நடக்கும்.''

''நான்என்ன செய்யணும். சொல்லுங்க அத்தை''

''பெரிசா ஒண்ணுமில்லை. உன் வாழ்க்கையை நீ இன்னொருத்தியுடன் பகிர்ந்துக்க தயாராக இருந்தால் மட்டும் போதும்.

ரகுவரனுக்கும் ஒன்றும் வயசாகலை. குழந்தை பெத்துக்கிற தகுதி அவனுக்கு இருக்கு.

ஒரு நல்ல பெண்ணாக பார்த்து இரண்டாம் தாரமாக கட்டிவச்சால், அடுத்தவருஷமே குழந்தை பிறக்கப் போகுது.

இது ஒன்றும் உலகத்தில் நடக்காத விஷயமில்லை. என்ன, இது நடைமுறைப்படுத்தறது உன் கையில் தான் இருக்கு. நீதான் ரகுவரன் கிட்டே பக்குவமாக இதைபத்தி பேசணும்.''

மனம் கனக்க நந்தினியின் கண்களில் கண்ணீர் பெருகுகிறது.

''என்ன நந்தினி நான் சொல்றது சரிதானே. யோசிச்சு பாரு. உனக்கும் சரின்னு படும்.

வாழ்க்கையை இப்படியே வெறுமையாக கழிக்க முடியாது நந்தினி.

உன்னை விட்டுட்டு வரச்சொல்லலை. உன்னோடு சேர்த்து இன்னொரு பெண்ணுடனும் வாழச் சொல்றேன். அதுவும் குழந்தைக்காக நான் சொல்றதை நல்லவிதமாக புரிஞ்சுக்கிட்டு, ரகுவரன் கிட்டே இதை பத்தி பேசு''

★★★

'இனியும் தள்ளிப்போட வேண்டாம். இன்று நந்தினியிடம் ஆதியை தத்தெடுப்பது பற்றி பேச வேண்டும்.

மாலதியும் இன்னும் இரண்டு வாரத்தில்கிளம்பப் போகிறாள். வக்கீல் மூலம் பேசி தத்தெடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தாகிவிட்டது.

இன்னும் இரண்டு நாளில் ஆதியை வீட்டுக்கு அழைத்து வரவேண்டும்.'

ரகுவரன் உள்ளே வர, நந்தினியும் எதுவும் கேட்காமல் இரவு டிபன் வேலைகளை கவனிக்கிறாள்.

இரவு பால்டம்ளருடன் பெட்ரூமிற்குள் வர, கட்டிலில் உட்கார்ந்திருந்த ரகுவரன்

''பால் டம்ளரை அப்படி வச்சிட்டு இங்கே வந்து உட்காரு நந்தினி. உன்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும்.''

''நானும் இன்னைக்கு உங்ககிட்டே சில விஷயங்கள் பேசி தெளிவு படுத்திக்கலாம்னு இருக்கேன்.''

''நந்தினியின் சோர்ந்த முகத்தை அப்போது தான் கவனிக்கிறான்.

''சரி நீயே சொல்லு என்ன விஷயும்.

''இன்னைக்கு அத்தை என்கிட்டே போனில் பேசினாங்க.''

''அப்படியா என்ன விஷயம்''

''குழந்தையை பத்தி''

''குழந்தையை பத்தி பேச அவங்க கிட்ட என்ன இருக்கு''

''அவங்க உங்களை பெத்தவங்க. இல்லையா... மகன் வாழ்க்கை நல்லா இருக்கணும்னு நினைப்பாங்க தானே.''

ஏதோ விஷயம் பேசியிருக்கிறார்கள் என்பது மட்டும்புரிய, அவளே சொல்லட்டும் என மௌனமாக இருக்கிறான்.

''நம்ம குடும்பம் வாரிசு இல்லாமல் முடியக் கூடாது. உங்களுக்கு குழந்தை பெத்துக்கிற தகுதி இருக்கு.

நான்தான் அந்த தகுதியை இழந்து நிற்கிறேன்.

அதுக்காக இப்படியே வெறுமையாக வாழ்க்கையை கழிக்க முடியாது.

நமக்கு கட்டாயம் குழந்தை வேணும்னு சொல்றாங்க.''

''அதுக்கு...''

கோபப்படாதீங்க... அவங்க சொன்ன விஷயத்தில் எனக்கும் உடன்பாடு தான். உங்களுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணினால் நிச்சயம் குழந்தை பிறக்கும். நான் சந்தோஷமாக என் வாழ்க்கையை வருபவளுடன் பங்கு போட்டு வாழத் தயாராக இருக்கேன். தயவு செய்து யோசனை பண்ணுங்க..''

''போதும் நிறுத்தறியா... அம்மாவுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை... சரி... இப்ப நமக்கு குழந்தை வேணும். உன்னையும்என்னையும் அப்பா, அம்மாவாக நினைச்சு நம்மோடு இருக்கணும் அவ்வளவு தானே...''

'என்ன சொல்ல வருகிறான்.' புரியாமல் அவன் முகத்தை பார்க்கிறாள்.

''அதற்கான ஏற்பாடு பண்ணிட்டேன் நந்தினி. ஒரு மாசமாக இது விஷயமாக தான் அலைந்தேன்.

ஒரு ஹோமிலிருந்து நாலு வயது பையனை நம் மகனாக தேர்ந்தெடுத்து முறைப்படி தத்தெடுக்க எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன். எல்லாம் நல்லபடியாக முடிஞ்சதும் உன்கிட்டே சொல்லலாம்னு இருந்தேன்.

ஆதி, ஆதித்தியா.. .அம்மாவை பார்க்கணும்னு எவ்வளவு ஆவலாக இருக்கான் தெரியுமா.''

வெள்ளிக்கிழமை உன் மகன் வரப் போறான் நந்தினி. இனி நம் வாழ்க்கையில் எந்தக் குறையுமில்லை''

கண்களில்கண்ணீர் தளும்பி நிற்க ரகுவரனை பார்க்கிறாள்.

''நிஜமாகவா...''

''ஆமாம் நந்தினி... குழந்தைக்காக இன்னொரு வாழ்க்கை வேண்டாம். நம் மகன் நம்மை தேடி வரப்போகிறான்.

இதுதான் என் முடிவு. உனக்கு சம்மதம் தானே நந்தினி''. அவன் மார்பில் சாய்ந்து வாய்விட்டு அழுகிறாள் நந்தினி.

அம்மாவின் கன்னத்தில் மாறி, மாறி முத்தமிடுகிறான் ஆதி..

''அம்மா... ப்ளீஸ் நீயும் வரயேன்மா...''

''இல்லடா கண்ணா... அம்மாவுக்கு சாமி இவ்வளவு நாள் உன்னை பார்த்துக்க சொன்ன மாதிரி இப்ப வேற வேலை கொடுத்திருக்காரு. அதை நான் பார்க்கணும்.

உன்னோட அப்பா, அம்மா உனக்கு கிடைச்சாச்சு... நீ உன் அம்மா சொன்னதை கேட்கணும். நல்லா படிக்கணும். உன் அப்பா மாதிரி பெரிய டாக்டரா வரணும். எல்லாமே சத்தியமாக நடக்கும்.

அம்மா உன்னை சந்தோஷமாக வழியனுப்பி வைக்கிறேன்.

போயிட்டு வா ஆதி..

டாடி உன்னை கூட்டிட்டு போக வெயிட் பண்றாரு பாரு''

மாலதியை மனம் நெகிழ பார்க்கிறான் ரகுரவன்.

''இப்பவும் ஒன்றும் பெரிய விஷயமில்லை மாலதி. உண்மையை நந்தனிகிட்டே மட்டும் சொல்வோம் நீ எங்கேயும் போக வேண்டாம். ஆதி எங்க மகனாக இருந்தாலும் நீயும் உன் மகனின் வளர்ச்சியை எங்களோடு இருந்து பார்த்து சந்தோஷப்படலாம்.''

கிரிதரன் குடும்பத்திற்கு தெரியாமல், நீ தனியாக இருக்கலாம். உன் மகனை பிரிய வேண்டிய அவசியமில்லை மாலதி.''

''வேண்டாம் டாக்டர் இது என்னைக்கும் சரிவராது.

நான் எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. நான் சந்தோஷமாக கிளம்பறேன். என் மகனை அவனுக்குரிய இடத்தில் சேர்த்துவிட்டேன். கடவுள் அந்த சந்தோஷத்தை எனக்கு கொடுத்திருக்கார். தயவு செய்து நிம்மதியாக கிளம்புங்க.''

''என்னைக்கு உனக்கு ப்ளைட் மாலதி...''

''பத்தாம் தேதி...''

''வேறு எதுவும் வேலை இருக்கா...''

''எல்லாம் முடிஞ்சாச்சு... நான் சொன்ன மாதிரி நிம்மதியாக கிளம்பறேன். கிளம்பறஅன்னைக்கு என்னோடுபெங்களூரு. வந்து ப்ளைட் ஏற்றிவிட்டால் மட்டும் போதும்.

அதுவும் நானே போயிடுவேன்னு சொல்றேன். நீங்க தான் கேட்கமாட்டேங்கிறீங்க...''

''ஓ.கே.மாலதி. ஆதி அம்மாவுக்கு பை சொல்லு...'' கலங்கும் கண்களைமறைத்தவளாய்கை அசைக்கிறாள் மாலதி.

''உன்னைப் போல தியாகி யாருமே இருக்கமாட்டாங்க... மாலதி... எனக்கே மனசுதாங்கலை.. ஆதி இல்லாமல் வீடே வெறிச்சுன்னு இருக்கு. சரி வா சாப்பிடலாம்.''

''எனக்கு உண்மையில் மனசுக்கு நிறைவா இருக்கு விஜி... என் மகனை பிரிந்தேன்கிற வருத்தம் இல்லை. அவனுக்குரிய இடத்தில் அந்த குடும்பத்தில் வாரிசாக வளரப் போறான்ங்கிற நிம்மதி இருக்கு.''

சொல்லும் சிநேகிதியை பரிதாபத்துடன் பார்க்கிறாள் விஜி

கார் ஹார்ன் சப்தம் கேட்டு, கையில் ஆரத்தி தட்டுடன் வேகமாக வெளியே வருகிறாள் நந்தனி.

காரிலிருந்து இறங்குகிறான் ஆதி...

துருதுருவென்ற அந்த திராட்சை விழிகள் நந்தனியை பார்க்கிறது.

''டாடி இவங்க தான் என் அம்மாவா..''

''ஆமாம் ஆதி''

அம்மா ஓடிவந்து அவள் கால்களை கட்டிக்கொள்ள, மெய்மறந்தவளாய் ஆரத்திதட்டை கீழே வைத்து அவனை அள்ளி அணைக்கிறாள்.

''என் செல்லமே... இவ்வளவு நாள்எங்கேடா போனே... இந்த அம்மாவை உனக்கு பிடிக்குதா...''

அவன் கன்னத்தில் முத்தமிடுகிறாள்.

''உங்களை மட்டுமில்லை, டாடியையும் எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு.''

சொன்னவன், அவள் எதிர்பாராமல் அவள் கன்னத்தில் முத்தமிட,

''என்னங்க... ஆதி நம் மகன். இனி நமக்கு எந்த குறையும்

இல்லை.''

சந்தோஷம் பிடிபடாமல் வார்த்தைகள் தடுமாற,

''சரி, நந்தனி முதலில் உன் மகனுக்கு ஆரத்தி சுற்று. உள்ளே போகலாம்.

புன்னகையுடன் சொல்கிறான் ரகுவரன்.

இவ்வளவு சந்தோஷமும் இவ்வளவு நாள் இந்த வீட்டுக்குள்தான் இருந்ததா என்று வியக்கும்படி பொழுதுகள் உற்சாகத்துடன் போகிறது.

வந்து நான்கு நாட்களிலேயே ஆதியும், நந்தினியும் மிகவும் நெருங்கி விட்டார்கள்.

அம்மா அம்மா என்று ஆதி நொடிக்கு நாலுமுறை அழைப்பதும், ஆதி இதை சாப்பிடு, இங்கே வா குளிக்கலாம் மொட்டைமாடிக்குபோகலாம் என்று அவன் தான்உலகம் என்பதுபோல தன்னையே மறந்திருக்கிறாள் நந்தினி.

''என்னங்க... நமக்கு குழந்தை இல்லை வாழ்க்கை வெறுமையாக போகுதுன்னு அத்தை ரொம்பவும் கவலைப்பட்டாங்க... நமக்கான சந்தோஷம் கிடைச்சிருச்சு. நம்ம மகன் நம்மகிட்டே வந்துட்டான்னு' அவங்களுக்கு தெரிவிக்க வேண்டாமா...''

''போனில் வேண்டாம் நந்தினி நேரில் போய் சந்தோஷப் படுத்துவோம்''

''ஆமாங்க அதுதான் சரி அப்படியே உங்க தம்பியையும் புனவாவையும் வரச் சொல்லுவோம் அவங்களும் நம் மகனை பார்க்கட்டும்.''

நந்தனி சொல்ல ரகுவரன் பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கிறான்.

''நானே இந்த அளவு எதிர்பார்க்கலை மாலதி. நந்தினியும் ஆதியும் ஒருத்தரையொருத்தர் பிரியாமல் அவ்வளவு க்ளோஸ் ஆக இருக்காங்க...

ஆதியுடன் இரண்டுமாசம் இருந்துட்டு அப்புறம்தான்

ஸ்கூலுக்கு அனுப்புவேன்னு நந்தனி கண்டிச்சு சொல்லிட்டா...''
மாலதியின் மனம் பூரிக்கிறது.

''ஆதிக்கு ஒரு நல்ல அம்மா, அப்பா கிடைச்சுட்டாங்க...''

''நாளைக்கு ஆதியோட எங்க கிராமத்துக்கு போறோம். மாலதி கிரிதரனையும் வரச் சொல்லியிருக்கேன். எங்க மகனை எல்லாருக்கும் அறிமுகப்படுத்த போறேன்''.ரகுரவன் சொல்ல,,

''எந்த காரணம் கொண்டும் ஆதி...''

''புரியுது மாலதி.. யாருக்கும் எதுவும் தெரியவராது.

முறைப்படி அவனை என் மகனாக தத்தெடுத்ததாக சொல்வேன்.

உன் வாழ்க்கையை தியாகம் பண்ணி, எங்க குடும்பத்தை வாழவச்சுருக்கே மாலதி. அதை எந்த நாளும் மறக்கமாட்டேன்''

அன்போடு சொல்கிறான் ரகுரவன்.

சூப்பர் மார்க்கெட்டில் சாந்தி, சித்தியுடன் வந்திருக்க, சாமான்கள் வாங்கிக் கொண்டு வாசலுக்கு வந்ததும்

''நான் சொன்னேன் இல்லையா.. உங்க டாக்டர் அடிக்கடி அந்த பெண் மாலதியை தேடி வர்றார்ன்னு அதோபார், அவரோட கார் அவங்க வீட்டு வாசலில் நிக்குது.''

சித்தி சுட்டிக் காட்ட,

சாந்தியும் கவனிக்கிறாள்.

மாலதி வேலையை விட்டு நின்ற பிறகும், டாக்டர் அவளுடன் தொடர்பில் இருக்கிறார்.

அவளுக்கு நாலுவயதில் மகன் இருப்பதா சொன்னாளே...

அப்படியிருந்தும் அவளுடன்...

வேண்டாம் டாக்டர் நல்லவர் இப்படியெல்லாம் யோசிப்பது தப்பு.'

''எனக்கொன்னவோ, அந்த டாக்டர் தான் அந்த பெண்ணை இங்கே வரவழைச்சு குடிவச்சிருப்பாருன்னு தோணுது.

எத்தனை வருட பழக்கமோ? இதுக்கு முன்னால பெங்களூரில் இருந்தாளாம்.

அந்த பிள்ளை கூட டாக்டருடையதாக இருக்கலாம்.யாருக்கு தெரியும் புருஷன் வெளிநாட்டில் இருப்பதாக பொய் சொல்லி இவர் இன்னொரு குடும்பம் நடத்தராரோ என்னமோ...

அதனால தான் தனக்கும் குழந்தை பிறக்கவில்லை என்பதை கூட பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதான் பேர் சொல்ல இங்கே ஒரு மகன்... பேர் கூட ஆதி ஆதித்தியா... இருக்கானே''

''சித்தி.. விஷயம் தெரியாமல் பேசக்கூடாது.''

''கண்ணுக்கு நேராக வெட்டவெளிச்சமாக தெரியும்போது நம்பாமல் எப்படி இருக்க முடியும். அது சரி, பெரிய இடத்து விவகாரம் நமக்கெதுக்கு கை நிறைய சம்பாத்தியம் அவரால் சமாளிக்க முடியும் வா... நாம் போகலாம்..

அபூர்வமாக இன்னைக்குவீட்டுக்கு வந்திருக்கே, உனக்கு பிடிச்சதை செய்துதரேன்.

மனம் குழம்ப தூரத்தில் நிற்கும் டாக்டரின் காரை திரும்பி, திரும்பி பார்த்தபடி நடக்கிறாள் சாந்தி.

## 11

**கா**ர் கிராமத்தை நோக்கி செல்ல,

''என்னங்க, உங்க அண்ணன் என்ன விஷயம்னு சொல்லாமல் கிராமத்துக்கு வாங்க முக்கியமான செய்தி சொல்லணும் நம்ம குடும்பம்ஒரே இடத்தில்இருந்தா நல்லது .நீயும், புவனாவும் புறப்பட்டு வாங்கன்னு சொன்னாரு. என்னவா இருக்கும்.''

புனவா கேட்க,

''எதுக்கு இப்படி பரபரக்கிற நேரில் போனதும் தெரியப் போகுது.''

கிரிதரன் அவளுக்கு பதில் சொல்ல,

''எனக்கென்னவோ, அத்தை பேசியதில் மனசுமாறி, நந்தனி

அக்கா உங்க அண்ணனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்க முடிவு பண்ணிட்டாங்கன்னு நினைக்கிறேன்.''

''என்ன உளர்றே...''

''நான் ஒன்றும் உளரலை... எங்கம்மாவும் உங்கம்மாவும் இது விஷயமா பேசியிருக்காங்க. உங்க அண்ணன் சம்மதம் சொன்னால், என் சித்தி மகள் புஷ்பாவை கல்யாணம் பண்ணி வைக்கப்போவதாக இருக்காங்க.''

''அப்படியெல்லாம் இருக்காது. அண்ணன் ஒரு பொழுதும் அண்ணியை விட்டுத் தரமாட்டாரு.

குழந்தை இல்லைன்னு இன்னொரு கல்யாணமா நீயாக கற்பனை பண்ணாமல் பேசாமவா.''

பின்சீட்டில் தூங்கும் குழந்தைகளை திரும்பி பார்த்தவள், ''குழந்தை இல்லைன்னா வாழ்க்கையே நரகமாயிடும் நீங்க புரியாமல் பேசாதீங்க...''

பேச்சை அத்துடன் முடிக்கிறாள்.

கார் வந்து நிற்க,

ஆவல் தாங்காமல் அத்தை, மாமா, கணவனுடன் வெளியே வருகிறாள்.

நந்தினி அக்காவும், அத்தானும் வந்துவிட்டார்கள்.

''வா ரகு வாம்மா..''

வரவேற்றபடி வந்த வைதேகி, அவர்களுடன் நான்கு வயது மதிக்கத் தக்க சிறுவன் இறங்குவதை பார்த்து கேள்விக்குறி முகத்தில் தெரிய,

''யாருப்பா இது''

கேட்க,

''உள்ளே வாங்க விபரமாக சொல்றேன்...''

ரகுவரன் நந்தினி ஆதியோருடன் உள்ளே வருகிறான்.

''இப்ப சொல்றேன் எல்லாரும் கேளுங்க...

இவன் நம் குடும்பத்தில் ஒருவன்

என்னுடைய உறவுகள் எல்லாம் இனி இவனுக்கும் உறவகள்''

சொன்னவன்,

''ஆதி இங்கே வா, தாத்தா பாட்டிக்கு சித்தி, சித்தப்பாவுக்கு வணக்கம் சொல்லு,''

பிஞ்சுவிரல்களை குவித்து வணக்கம் சொல்லும் அந்த சிறுவனை மனம் நெகிழ பார்க்கிறார் சண்முகம்.

'யார் பெற்ற பிள்ளையோ இன்று என் மகனுக்கு அப்பா என்ற அடையாளத்தை தந்து அவன் குடும்பத்தில் ஒருவனாகி விட்டான் எப்படியோ குழந்தை இல்லை என்ற குறை மறைந்து அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும்.'

அவர் மனம் நினைக்க,

''இங்கே தாத்தா கிட்டே வாப்பா ராஜா''

அன்போடு அழைக்க

வைதேகி கோபத்தின் உச்சிக்கு போகிறாள்.

''என்னங்க, உங்களுக்கென்ன பைத்தியமா, யாரோ ஒரு சிறுவனை அழைச்சுட்டு வந்து, இனிமேல் இவன்என் மகன்னு சொல்வானாம் நாம் உடனேவாப்பா பேரான்னு கொஞ்சணுமாம். என்னங்க இது.. எதுக்கு இப்படியொரு முட்டாள்தனமான காரியம்.''

சொன்னவள்,

மகனருகில் வருகிறாள்.

''இங்கே பாரு ரகு குறை உன் கிட்டே இல்லை இப்ப உனக்கு கல்யாணம் பண்ணிவச்சாலும் உன்குழந்தைக்கு தந்தையாக முடியும் .அப்படியிருக்கும்போது யாரோ பெத்த பிள்ளைக்கு அப்பான்னு சொல்றே...

இதை என்னால் ஒத்துக்க முடியாது.''

புவனா வாயடைந்து போய்நிற்க, கிரிதரன் துருதுருவென்ற விழிகளுடன் அங்குமிங்கும் மிளர பார்த்தபடி நிற்கும் சிறுவனை பார்க்கிறான்.

இப்படியொரு எதிர்ப்பு வரும் என்பதை எதிர்பார்க்காத நந்தினி தலை குனிந்து நிற்கிறாள்.

''அம்மா தயவு செய்து கோபப்படாதே உன் எண்ணம் என்ன, நானும் நந்தினியும் குழந்தையுடன்சந்தோஷமாக இருக்கணும் அதுதானே... இப்ப அதுதானே நடக்குது.

இவன் எங்களுக்கு பிறக்காட்டியும் இவன் எங்க பிள்ளை தான்மா... முறைப்படி இவனுக்கு நாங்க அப்பா, அம்மான்னு ஆகிட்டோம்...

ரத்தபந்தத்தால் உருவாகாட்டியும், அன்பால் உருவான இவர்கள் உறவுதொடரும்மா..ப்ளீஸ் எங்க மனசை புரிஞ்சுக்கோங்க...

''வைதேகி இது அவங்க வாழ்க்கை. இந்த பிள்ளையோடு இவர்களால் நிறைவாக வாழமுடியும்னா வாழட்டுமே இதை நாம் ஏன் தடுக்கணும். அவங்க சந்தோஷம் தானே நமக்கு முக்கியம். கள்ளம் கபடமில்லாத அந்த குழந்தையின் முகத்தை பார்த்துட்டு பேசு வைதேகி''. அவள் கோபம் இப்போது நந்தினியின் பக்கம் திரும்புகிறது.

''எல்லாம் உன்னால்தான் உன் வாழ்க்கையை விட்டு கொடுக்க உனக்கு இஷ்டமில்லை அப்படித்தானே... நாங்க என்ன பாவம் செய்தோம்.. யாரோ பெத்தபிள்ளையை எங்க குடும்ப வாரிசுன்னு சொல்றதுக்கு..

அவன்தான் இப்படி ஒருகாரியம் செய்தால், உனக்கு எங்கே போச்சு புத்தி.

இன்னொரு கல்யாணம் பண்ணி குழந்தை பெத்துக்கலாம்னு சொல்லஉனக்கு மனசு வரலை.

இவ்வளவு சுயநலவாதியா இருக்கக் கூடாது.

என்ன பெண் ஜென்மம் நீ. சை! உன் பிறப்பே தேவையில்லாதது.''

கோபத்தில் வார்த்தைகள் வரம்பு மீறி வர,

அதற்கு மேல தாங்காதவனாய்

''போதும் நிறுத்துங்க இவனை எங்க மகனாக நாங்க ஏத்துக்கிட்டோம். உங்களுக்கு இஷ்டமில்லை பரவாயில்லை. நாங்க கிளம்பறோம். எப்ப உங்க மனசு மாறுதோ அப்ப வர்றோம்.

அதுவரைக்கும் நாங்களும் இனி வரமோட்டோம்.

நந்தினி நீ ஏன் கண்கலங்கறே, பெரிய மனுஷங்க நம்ப மனசை புரிஞ்சுப்பாங்கன்னு நினைச்சோம் அது இல்லைன்னு ஆயிடுச்சு கிளம்பலாம்.''

வந்த ஒரு மணி நேரத்தில்புறப்பட,

''ரகு அவசரப்படாதே இருப்பா பேசுவோம்'' சண்முகம் தடுக்க,

''இல்லப்பா எங்களுக்கு இங்கே வரவேற்பில்லை தயவு செய்து தடுக்காதீங்க...''

சொன்னவன்,

''ஏழுமலை பெட்டியை எடுத்து காரில் வை''

சொல்ல, 'கடவுளே ஒற்றுமையாக இருந்த குடும்பத்தில் விரிசல் வந்துவிட்டதே, என்ன கண்ணே பட்டுவிட்டது.'

வருத்தத்துடன் பெட்டியை காரில் ஏற்ற,

''என்னங்க இது அவர் செய்த காரியத்தின் தப்பு அவருக்கு தெரியலை. நம்ம கிட்டே கோபப்பட்டுட்டு போறாரு. அத்தை அப்படி என்ன தப்பா சொல்லிட்டாங்க...''

''தேவையில்லாமல் இந்த விஷயத்தில் நாம தலையிடக் கூடாது புவனா பேசாமல் இரு.''

''அப்படிவிட முடியாதுங்க... அத்தையும் மாமாவும் எவ்வளவு வருத்தப்படறாங்க பாருங்க''

இந்த விஷயத்தில் யார் பக்கம் பேசுவது என்று தெரியாமல் ''நான் போய் குழந்தைகளுக்குசாப்பாடு கொடுத்து தூங்க வைக்கறேன் காலையில் நாமும் கிளம்பலாம்.''

கிரிதரன் உள்ளே போக,

அமைதியாக உட்கார்ந்திருக்கும் அத்தை, மாமாவிடம் வருகிறாள் புவனா.

''கவலைப்படாதீங்க அத்தை. அத்தான் இப்படியொரு முடிவுக்கு வந்திருக்க வேண்டாம். இதுக்கெல்லாம் காரணம் நந்தினி அக்காதான். அவருக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி

வைப்பதில் இவங்களுக்கு என்ன கஷ்டம்''

எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல புவனா பேசுவது சண்முகத்திற்கு கோபத்தை வரவழைக்க,

''என்ன பேசற புவனா., இதே நிலைமை உனக்கு வந்தால் ஏதோ ஒரு காரணத்திற்காக நாங்க இப்ப கிரிதரனுக்கு இரண்டாம் கல்யாணம் பண்ண முடிவு பண்ணி உன் வாழ்க்கையை அவளுடன் பகிர்ந்துக்கன்னு சொன்னால் நீ ஏத்துப்பியா''

''என்ன பேசறீங்க... மாமா... நான் என்ன மலடியா.. இரண்டு பிள்ளைகளுக்கு தாய் ஞாபகம் வச்சுக்குங்க.. என் வாழ்க்கையில் ஏன் இன்னொருத்தி வரணும்.

நான் இருக்கும்போது இன்னொருத்திய தேடிப்போக என் புருஷன் கேடுகெட்டவன் இல்லை'' ஆத்திரத்துடன் பதில் சொல்ல

''போதும் புவனா நீயும் பதிலுக்கு பதில் பேசி எங்க மனசை கஷ்டப்படுத்தாதே. உள்ளே போய் குழந்தையை கவனி...''

கோபமாக சொன்ன வைதேகி, அந்த இடத்தை விட்டு எழுந்து போகிறாள்.

ஊருக்கு வந்தபிறகும் புவனாவின் கோபம் குறையவில்லை.

''நந்தினிக்கு பரிந்து பேசுகிறேன் என்று மாமாஎன்னை அவமானப்படுத்திட்டாரு. நீங்க உங்கப்பாவை ஒரு வார்த்தை கேட்லை.''

''என்ன கேட்க சொல்ற''

''அவங்களுக்கு குழந்தை இல்லை அதனால இன்னொரு கல்யாணம்ங்கிற பேச்சு வந்தது.

நம்ம குடும்பத்தில் இன்னொருத்தி வந்தால் நீ ஏத்துப்பியான்னு கேட்கிறாரு. இது உங்களை அவமானப்படுத்தறமாதிரி இல்லையா. என்னமோ நீங்க இன்னொருத்தியோடு குடும்பம் நடந்த தயாராக இருக்கிற மாதிரியும், நான் தடுக்கற மாதிரியும் சொல்றாரு.''

நீண்ட வருடங்களுக்கு பிறகு, தான் காதலித்து ஏமாற்றிவிட்டு

வந்த மாலதி அவன் நினைவுக்கு வருகிறாள்.

'இந்த விஷயம் மட்டும் புவனாவுக்கு தெரிந்தால் அவ்வளவுதான். உத்தமபுத்திரன் என்று நினைத்துக் கொண்டிருக்கும் அவள் முன் கூனிகுறுகி நிற்க வேண்டும்.

''என்னங்க பேசாம இருக்கீங்க...''

''சரிவிடு புவனா ஏதோ கோபத்தில்அப்பா நாலு வார்த்தை பேசிட்டாரு.''

''இன்னொன்றும் சொல்றேன். ஒரு சமயம் அத்தை, மாமா, மனசு மாறி, அவனை பேரனாக ஏத்துக்கிட்டாலும் குடும்ப சொத்துகளில் அவனுக்கு பங்கு இருக்கக் கூடாது எல்லாம் நம் பிள்ளைகளுக்கு தான் சேரணும். அப்படி ஒரு நிலைமை வந்தால் நீங்க கண்டிச்சு சொல்லணும்.

அப்பவும் இப்படியே வாயை மூடிக்கிட்டு மௌன சாமியார் மாதிரி இருக்கக் கூடாது புரியுதா.''

புவனா சொல்ல,

''அப்படி நடக்கும்போது பார்ப்போம்.''

பதில் சொல்கிறான் கிரிதரன்.

ஆதி விளையாடிக் கொண்டிருக்க

குளித்து பூஜையறையில் சாமி கும்பிடும் நந்தினியின் வருகைக்காகசோபாவில் காத்திருக்கிறான் ரகுவரன்.

''என்ன நந்தினி சாமி கும்பிட்டாச்சா... கடவுள் இப்ப உனக்கு பிள்ளைய கொடுத்துட்டாரு.

அப்புறம் என்ன கேட்டே,''

''என் பிள்ளையை அத்தையும், மாமாவும் பேரனாக ஏத்து க்கிற நாளை சீக்கிரம் கொடுன்னு வேண்டிக்கிட்டேன்.''

''அதுவும் கட்டாயம் நடக்கும் நந்தனி. அப்புறம் இந்த மாசம் ஹாஸ்பிடல் அக்கவுண்ட்ஸ் பார்கணும். எனக்கு ஒரு இரண்டு மணி நேர வேலை இருக்கு சன்டே தானே லஞ்ச் எல்லாரும் ே ஹாட்டலில் சாப்பிடலாம். நீ எதுவும் செய்ய வேண்டாம்.

''அம்மா இந்த மோட்டார் பைக்நல்லாயிருக்கு ''

''உனக்கு பிடிச்சிருந்தா எடுத்துக்க ஆதி''

''அப்புறம் இந்த ஸ்போர்ட்ஸ் கார்''

''அதுவும் உனக்குதான்''

''எனக்குஇவ்வளவு டாய்ஸா''

கண்களை அகலவிரிந்து கேட்க,

''இதுமட்டுமல்ல இன்னும் அம்மா உனக்கு நிறைய டிரஸ் வாங்க போறேன். துணிக்கடைக்கு அடுத்து போகப் போறோம்.''

சொன்னவள் குனிந்து அவன்கன்னத்தில்முத்தமிட,

''தாங்க்ஸ்மா, உங்களை எனக்கு இவ்வளவு பிடிக்கும். கை களை அகலவிரித்து காண்பிக்க வாய்விட்டு சிரிக்கிறாள் நந்தினி.

ஆதிக்கு பிடித்த மாதிரி நிறைய டீஷர்ட், பேண்ட் என எடு த்தவள் அவன் கைபிடித்து அழைத்துக் கொண்டு பில்போடும் கவுண்ட்டருக்கு வருகிறாள்.

''மேடம் நல்லாயிருக்கீங்களா...''

அருகில் ஹாஸ்பிடலில் வேலை பார்க்கும் சாந்தி நிற்பதை பார்த்து முகம் மலர,

''நீங்க எப்படி இருக்கீங்க சாந்தி. சன்டேன்னு ஷாப்பிங் கிளம்பிட்டீங்களா...''

விசாரிக்கிறாள்.

''ஆமாம் கொஞ்சம் பர்சேஸ் வேலை இருந்தது.''

சொன்னவள், அப்போதுதான் அவள் கைப்பிடித்து நிற்கும் சிறுவனை பார்க்கிறாள்.

''இவன் யாரு மேடம்...''

''உங்க கிட்டே சொல்லலையா... நாங்க இவனை எங்க மகனாகதந்தெடுத்திருக்கோம். பெயர் ஆதித்யா...'' சொன்னவள்.

''ஆதி ஆண்ட்டிக்கு ஹலோ சொல்லு''

ஆதியும் புன்சிரிப்போடு சொல்ல, சாந்தியின் முகம் மாறுகிறது

'இவன் மாலதியின் பையன் இவனை தன் மகனாக அங்கீகாரம் செய்திருக்கிறார் டாக்டர் அப்படியானால் அவருக்கும்

மாலதிக்கும் சித்தி சொன்னது போல, ஏற்கனவே...'' ''என்ன சாந்தி, ஏன் உங்க முகம் மாறிப் போச்சு... என்ன விஷயம் சொல்லுங்க...''

''ஒண்ணுமில்லை மேடம்... ஆதியை எங்கிருந்து அழைச்சுட்டு வந்தீங்க...''

''எனக்கு தெரியலை... ஏதோ ஹோமிலிருந்துதான்னு சொன்னாரு... ஏன்கேட்கறீங்க...''

குனிந்து ஆதியை பார்த்தவள்,

''ஆதி நீ இங்கே அம்மா கிட்டே வர்றதுக்கு முன்னால எங்கப்பா இருந்தே. யாரு உன்ன பார்த்துக்கிட்டா...''

சாந்தி கேட்கிறாள்

''நான் நிறைய பசங்களோடு இருந்தேன். அம்மா என்னை பார்த்துக்கிட்டாங்க. சாமிஅவங்களுக்கு வேறவேலை கொடுத்துட்டாரு இவங்க கிட்டே வந்துட்டேன்.''

சொன்னதை அப்படியே சொல்ல, ''சரி உன்னை பார்த்துக்கிட்டாங்களே அந்த அம்மா பெயர் என்ன...''

பொய் பேசத் தெரியாத குழந்தை அழகாக,

''மாலதி'' என்று சொல்ல,

நந்தினி புரியாமல் சாந்தியை பார்க்க,

''மேடம், நான்இப்படி சொல்றேன்னு தப்பாநினைக்காதீங்க... டாக்டர் நல்லவர்தான். இருந்தாலும் சில விஷயங்களை கண்ணால் பார்த்தபிறகு நம்பாமல் இருக்க முடியல,''

மனதில் சின்ன நெருடல் தோன்ற அவளை பார்க்கிறாள்.

''இந்த ஆதி, அந்த மாலதியின் மகன் தான். அவனை தான் டாக்டர் தத்தெடுத்து இருக்காரு.''

குழப்பத்துடன் பார்க்கிறாள்

''அவர் அப்படி சொல்லலையே. மாலதி எப்படி அவள் பிள்ளையை கொடுப்பாள். நிஜமாக தான் சொல்றீங்களா சாந்தி''.

''தயவு செய்து பொறுமையா கேளுங்க... டாக்டர் அடிக்கடி மாலதி வீட்டுக்கு போறாரு. நாலுமாசமாகவே இது நடக்குது

இப்ப அவள் மகனையே தத்தெடுத்து இருக்காரு.

என்ன காரணம்னு தெரியலை. இப்ப மாலதி ஊரை காலி பண்ணிட்டு பெங்களூருக்கு போகப் போறதாக கேள்விப்பட்டேன். சித்திஅங்கே பக்கத்தில் இருப்பதால் இந்த விபரம் தெரியும்.

எனக்கும் எதுவும் புரியவில்லை. நீங்களும் பதட்டப்படாமல் பொறுமையாக டாக்டர் கிட்ட கேளுங்க.

டாக்டர் ரொம்ப நல்ல மனிதர். ஆனால் இப்ப நடப்பதை தான் என்னாலும் நம்ப முடியலை.''

'இவள் சொல்வதை பார்த்தால் அந்த பெண் மாலதிக்கும் இவருக்கும்ரொம்ப காலமாகவே தொடர்பு இருந்திருக்கிறதா ஏற்கனவே பெங்களூரில் இருந்து இங்கு வந்ததாக சொன்னார்கள். அவள் கணவன் வெளிநாட்டில் இருப்பதாக சொன்னது பொய்யா... ஆதி மாலதியின் மகன் என்றால் அவனுடைய அப்பா யார்...

'ரகு ரகுவரனா....'

தலைசுற்றி மயக்கம் வரும் போல இருந்தது.

ஆதியுடன் உடனே அங்கிருந்துபுறப்பட்டாள் நந்தினி.

''என்ன ஆச்சு நந்தினி, ஒரு வாரமாகவே உன் முகம் சரியில்லை. திரும்ப அம்மா ஏதும் போனில் பேசி சண்டை போட்டாங்களா''

''அதெல்லாம் இல்லை. ஆதியை பத்தி யோசனை பண்ணினேன். பாவம் பெத்தவங்க யாருன்னு தெரியாமல், அனாதை இல்லத்தில் இருந்திருக்கிறான்.

நாம் இங்கே குழந்தைக்காக தவம் இருந்திருக்கோம் கடவுள் எப்படியெல்லாம் கண்ணாமூச்சி விளையாடறாரு''

''இப்ப என்ன, இவ்வளவு நாள் எப்படியோ யார் தயவுலயோ வளர்ந்துட்டான். இப்ப தான் நம்ப பிள்ளையாக நம்ப கிட்டே வந்துட்டானே... உன் பாசம், அன்பு எல்லாம் இனி அவனுக்கு தானே... ''

அவன் முகத்தையே கூர்ந்து பார்த்தவள்,

''நீங்க என்ன நினைக்கிறீங்க... நீங்களும்முழு மனசோடு அவனை மகனாக ஏத்துக்கிட்டீங்க இல்லையா''

'' என்ன நந்தினி இப்படி கேட்கற. என்னால் அவனை எந்த காலத்திலும் பிரிச்சு பார்க்க முடியாது. அவன் என் மகன். நம் குடும்ப வாரிசு. அந்த அருமை, பெருமையோடு நம் மகனாக வாழப் போறான்.

இனி உனக்கு எந்த குழப்பமும் வேண்டாம். நிம்மதியாக இரு நந்தினி.

அப்புறம் சொல்ல மறந்துட்டேன். இரண்டொரு நாள்ல பெங்களூர் போற வேலை இருக்கு. மீட்டிங் ஒன்று இருக்கு.

ஆதியை பத்திரமா பார்த்துக்க.

வந்ததும், அவனை கூட்டிக்கிட்டு நாம ஒரு வாரம் கொடைக்கானல் போயிட்டு வருவோம்''

ரகுவரன் சொல்ல, சாந்தி சொன்னது போல, இவர் மாலதியுடன் பெங்களூர் போகப்போகிறார். அவளை அங்கே குடித்தனம் வைக்கப் போகிறார்.

நிழல் வாழ்க்கையில் பிறந்தவனை, ஊரறிய மகனாக அறிமுகப்படுத்த தான் தத்தெடுத்து இருக்கிறார். இது உண்மையானால்....

இந்த நான்கு வருடமாக எனக்குத் தெரியாமல்... மாலதியுடன்... அதனால் தான் இரண்டாம் கல்யாணம் வேண்டாம் என்று மறுத்தாரோ...'

மனம் குழம்பித் தவிக்கிறது.

....

''நான் கிளம்பறேன் நந்தினி, ஆதி அம்மாவோடு சமர்த்தா இருக்கணும். இரண்டு நாளில் அப்பா வந்துடுவேன். வந்ததும் நாம் 'டூர்' போகலாம்''

கையசைத்து 'டாடா' சொல்ல, கார் கிளம்பிப் போகிறது.

வேலை செய்யும் பெண்ணை கூப்பிட்டு

''ஆதியை பத்திரமாக பார்த்துக்க. எனக்கு ஒரு அவசர வேலை

இருக்கு கொஞ்ச நேரத்தில் வந்துடுவேன்.''

ரகுவரன் கிளம்பிய அரை மணி நேரத்தில் அவளும் கிளம்புகிறாள்.

சாந்தியிடம் மாலதி இருக்கும் அட்ரஸ் வாங்கியதால் அந்த தெருவில் இருக்கும் சூப்பர் மார்க்கெட்டில் ஆட்டோவை நிறுத்தி இறங்குகிறாள்.

ரகுவரனின் கார், மாலதி வீட்டு வாசலில் நிற்பதை பார்த்ததும் துக்கம் தொண்டையடைக்கிறது.

.....

''ரெடியா மாலதி... புறப்படலாமா...''

''கிளம்பியாச்சு... அக்கா கிட்டே என்ன சொல்லிட்டு வந்தீங்க''

''பெங்களூரில் ஒரு 'மீட்டிங்' அதுக்கு போறதாக சொல்லியிருக்கேன். உனக்கு நைட் இரண்டு மணிக்கு 'ப்ளைட்' உன்னை அனுப்பிட்டு, ஹோட்டலில் கொஞ்சம் நேரம் 'ரெஸ்ட்' எடுத்துட்டு மதியம் 'லஞ்ச்' முடிச்சு கிளம்பிடுவேன்''

''உங்களுக்கு தான் சிரமம். இவ்வளவு தூரம் 'டிரைவ்' பண்ணிட்டு வரணும்''

''நீ எங்களுக்கு எவ்வளவோ செய்திருக்கே மாலதி. உனக்காக இது கூட செய்யலைன்னா எப்படி.

ஆதியை நேத்து அழைச்சுட்டு வரேன்னு சொன்னேன் நீ தான்


**கண்மணி**

கண்மணி தபாலில் பெற ஓராண்டு (உள்நாடு) சந்தா-ரூ.900
6 மாதம்-ரூ.450 மணியார்டர் மற்றும் காசோலை
MURASU PUBLICATIONS என்ற பெயரில் அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாகி
**கண்மணி**
மாலைமுரசு பில்டிங்,
246, அண்ணா சாலை,
ஆயிரம் விளக்கு,
சென்னை-600 006.

சந்தா தொகையை NEFT/RTGS மூலம் செலுத்த:-
MURASU PUBLICATIONS
A/C NO. 6034172999
Indian Bank, Peters Road Branch
IFSC:IDIB000R047
நிர்வாகப்பிரிவு:
murasupublication@gmail.com
போன்: 044-28297225

வேண்டாம்னு சொல்லிட்டே...''

''வேண்டாம் டாக்டர். அவன் உங்க மகன். அந்த திருப்தியோடும் சந்தோஷத்தோடும் கிளம்பறேன்.''

''மனசுக்கு கஷ்டமாக இருக்கு மாலதி''

உண்மையான வருத்தத்துடன் சொல்கிறான்.

''எதுக்கு''

''இப்படி ஒரு நல்ல மனசுள்ள பெண்ணை மனைவியாக அடைந்து வாழ என் தம்பிக்கு கொடுத்து வைக்கலை..''

''சரி.. நடந்து முடிந்ததை பத்தி பேச வேண்டாம். நீங்களும், அக்காவும் ஆதியோடு நிறைவான வாழ்க்கை வாழணும்''

''எல்லாம் நல்லபடியாக நடக்கும் மாலதி. நீ தயவு செய்து என்னோடு தொடர்பில் இருக்கணும். உன் மகனின் வளர்ச்சியை பார்த்து நீ சந்தோஷபடணும் மாலதி. மறுபடியும் உன்னை கெஞ்சி கேட்கிறேன். போனதும் எனக்கு போன் பண்ணு.''

''ப்ளீஸ் டாக்டர். மறுக்கிறேன்னு வருத்தப்படாதீங்க. என்னை ப்ளைட் ஏத்தினதும் இந்த மாலதியை மறந்துடுங்க. நான் இனி உங்க வாழ்க்கையில் வரமாட்டேன்.சரி. கிளம்பலாமா''

மன உறுதியுடன் இருக்கும் அந்த பெண்ணை நினைத்து நெகிழ்ந்தவனாய், பெட்டியை காரில் ஏற்றுகிறான்.

சூப்பர்.. மார்க்கெட்டில் பேருக்கு சில சாமான்கள் வாங்கி விட்டு யாருக்கோ காத்திருப்பது போல ஓரமாக நிற்கிறாள்.

''அதோ பெட்டியுடன் வெளியே வருகிறான் ரகுவரன் அவனை தொடர்ந்து மாலதி..

அங்கு நிற்கும் பெண்ணிடம் விடை பெற்று முன் பக்க கதவை திறந்து ரகுவரன் அருகில் உட்கார கார் புறப்படுகிறது.

கடவுளே எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

சாந்தி சொன்னது அத்தனையும் உண்மை. ரொம்ப வருஷமாக அவர்களுக்குள் தொடர்பு இருக்கிறது. எனக்கு தெரியாமல் இன்னொரு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்.

ஆதி அவர் மகன். இப்போது நான் என்ன செய்யப் போகிறேன்.

வேண்டாம். நான் அவருடன் வாழ தகுதியில்லாதவள் உரிமையுள்ளவள் அவள் தான். மகனுடன் இருவரும் சிறப்பாக வாழட்டும். உண்மை தெரிந்த பிறகு... நான் என் இடத்தை விட்டுக் கொடுத்து ஒதுங்குவது தான் நல்லது.

## 12

''என்னம்மா நந்தினி. என்னாச்சு ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கு. உடம்புக்கு முடியலையா...''

''மாமா சில முக்கிய விஷயங்களை முடிவு பண்ண வேண்டியிருக்கு. நீங்களும், அத்தையும் உடனே புறப்பட்டு வாங்க...''

''என்னம்மா ஆச்சு. அந்த பையன் ஆதி நல்லாயிருக்கானா... என்ன பிரச்சனை. ரகுவரன் எங்கே அவன் கிட்டே போனை கொடும்மா''

''வேண்டாம் மாமா, தயவு செய்து இப்போதைக்கு அவர்கிட்டே பேச வேண்டாம். நீங்க புறப்பட்டு வாங்க. நேரில் சொல்றேன்''

...

நந்தினி சொன்ன அனைத்தையும் கேட்டவர்கள் சிலையாக அமர்ந்திருக்கிறார்கள்.

''நம்ப முடியலை நந்தினி. என் மகனா இப்படியொரு காரியம் செய்திருக்கான்.

உன்மேல் அளவு கடந்த பிரியம் வைத்திருப்பவன், எப்படி இன்னொருத்தியுடன் வாழ முடியும்..''

சண்முகம் சொல்ல,

''நம்பிதான் ஆகணும் மாமா. நானே என் கண்ணால் நேரில் பார்த்துட்டேன். அவளுக்கு குடித்தனம் வைக்க பெங்களூர்

போயிருக்காரு.''

ஆதியை மடியில் வைத்தபடி உட்கார்ந்திருக்கும் வைதேகியிடம் வருகிறாள்.

''இப்ப உங்களுக்கு திருப்தியாக இருக்கும். ஆதி உங்க பேரன் தான்.

இப்ப நான் தான் இந்த குடும்பத்தில் இருந்து விலக வேண்டியவள்.

உங்க மகனுக்கு குழந்தைக்காக இன்னொரு கல்யாணம் பண்ணிவைக்க விரும்பினீங்க.

இப்ப அவர் குழந்தையோடு ஒருத்தி இருக்கா. அவளையே நீங்க கல்யாணம் பண்ணி வைக்க சந்தோஷமாக சம்மதிக்கிறேன்.

என் வருத்தமெல்லாம் என்ன தெரியுமா. அஞ்சு வருஷம் என்னோடு வாழ்ந்தவர்... ஒரு தடவை கூட அவருக்கு இன்னொருத்தியோடு, தொடர்பு இருப்பதை சொல்லவில்லை.

இந்த நிமிஷம் வரை எனக்காக அவர் இருப்பதாக சொன்னதை நம்பினேன் அத்தை.

இப்ப ஏமாந்து நிற்கிறேன். அதைத்தான் நான் என்னால தாங்க முடியலை.''

மனம் குமுறி மண்டியிட்டு அழ,,

வைதேகி மடியில் உட்கார்ந்திருந்த ஆதி ஓடி வந்து.

அம்மா அழாதீங்க. நீங்க அழுதா எனக்கும் அழுகை வருது''

பிஞ்சு விரல்களால் அவள் கண்ணீரை துடைக்க, சண்முகம் நடப்பதை ஜீரணிக்க முடியாமல், என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாக உட்கார்ந்திருக்கிறார்.

.....

வாசலில் கார் வந்து நிற்கிறது.

கை கொள்ளாமல் வாங்கிய பொருட்களுடன் உள்ளே வருகிறார். ரகுவரன்.

''ஆதி.. எங்கே இருக்கே. உனக்கு டாடி என்ன வாங்கிட்டு வந்திருக்கேன்னு வந்து பாரு''

கூப்பிட்டபடி வந்தவன், அப்போது தான் ஹாலில்அம்மா, அப்பா உட்கார்ந்திருக்க. ஓரமாக நந்தினி நிற்பதை பார்க்கிறான்.

வாங்கிய சாமான்களை தரையில் வைத்தவன், முகம் மலர,

'' வாங்கம்மா, வாங்கப்பா, எப்போ வந்தீங்க, உங்க மனசு மாறிடுச்சா... எங்க மகனை ஆசிர்வாதம் பண்ண வந்தீங்களா..''

சொன்னவன்,

''நந்தினி... நான் சொன்னேன் இல்லையா... அம்மா மனசு மாறும் நிச்சயம் ஆதியை பேரனாக ஏத்துக்குவாங்கன்னு.. அது நடந்துடுச்சு''

சந்தோஷ குரலில் சொல்கிறான்.

''இருக்கட்டும் ரகு, நீ இப்ப எங்கே போயிட்டு வர்றே.''

சண்முகம் இறுகிய முகத்துடன் கேட்க,

''நந்தினி சொல்லலையா. பெங்களூரில் ஒரு 'மீட்டிங்' அதுக்கு போயிட்டு வரேன்''

''பொய் சொல்றதை நிறுத்து ரகு. உண்மையை மட்டும் பேசு. ஆதியோட அம்மா யாரு.''

நேரிடையாக சண்முகம் கேட்க,

சற்று தடுமாறுகிறான். 'நான் ஊருக்கு போனதும் ஏதோ நடந்திருக்கிறது. இவர்களுக்கு சில விஷயங்கள் தெரிந்து இருக்கிறது. சமாளிக்க வேண்டும்.'

''என்னை மன்னிச்சுடுங்கப்பா.. பொய் சொல்லணும்னு நினைக்கலை. எனக்கு தெரிஞ்ச பெண், குழந்தையை தத்து கொடுக்க நினைத்த போது... குழந்தையில்லாத நானே அவளை தத்தெடுக்கலாம்னு முடிவு பண்ணினேன்.

அதை தெரிவிக்க விரும்பாமல் நந்தினி கிட்டேயும் ஹோமிலிருந்து அழைச்சுட்டு வந்ததாக சொன்னேன்.''

''சரி... அப்படியே இருக்கட்டும். ஆதியோட அம்மா பெயர்

என்ன''

சிறிது தயங்கியவன்,

''மாலதி'' மெல்லிய குரலில் சொல்கிறான்.

''சரி, அவனுக்கு அப்பா இல்லையா..''

''தெரியலை.. எங்கே இருக்கான்னு தெரியலை, நானும் கேட்கலை...''

''போதும் நிறுத்து ரகு. என்மேல சத்தியமாக சொல்லு. ஆதி என்பேரன்தானே. நம்ப குடும்ப வாரிசுதானே. உண்மையை மறைக்காமல் பதில் சொல்லு.''

கண்களில் கோபம் தெரிய பார்க்கிறார்.

'இனி மறைத்து எந்த பிரயோசனமுமில்லை. யாருக்கும் தெரிய வேண்டாம் என்று நினைத்ததை சொல்ல வேண்டிய இக்கட்டான நிலைமை வந்து விட்டது.'

''ஆமாம்பா. ஏத்துக்கிறேன். ஆதி உங்க பேரன் தான் நம்ப குடும்ப வாரிசு தான்''

இவ்வளவு நேரம் பேசாமல் அழுகையை அடக்கி ஓரமாக நின்ற நந்தினி,

''போதுமா மாமா. அவர் வாயாலேயே ஏத்துக்கிட்டாரு. நீங்க தாராளமாக உங்க மகனுக்கு மாலதியை கல்யாணம் பண்ணி வைக்கலாம்.

நான் அவருடன் வாழ தகுதியில்லாதவள். நான் எங்கேயாவது போறேன்.''

அழுகையுடன் சொல்ல,

''நந்தினி, போதும் நிறுத்தறியா. ஆதி அவங்க பேரன்தான்னு சொன்னேனே தவிர அவனுடைய அப்பா நான்தான்னு சொன்னேனா.. முட்டாள். உன்னை தவிர யாருக்கும் என் மனசி ல் இடமில்லை நந்தினி. என்னோடு வாழ்ந்த இவ்வளவு நாளில் இதைக் கூடவா நீ தெரிஞ்சுக்கலை.''

''ஆதியின் அப்பா யார் தெரியுமா. இப்ப சொல்றேன்.

எல்லாரும் கேளுங்க.

உங்க இளைய மகன் கிரிதரன்''

அனைவரும் வாயடைத்து போகிறார்கள்.

மாலதி ஹாஸ்பிடலில் வேலைக்கு சேர்ந்ததிலிருந்து, அவர்கள் பேமிலி போட்டோவை பார்த்து மயங்கியது..

பிறகு அவள் மூலமே அவன் கேட்டறிந்த அவள் கதை.. இதற்கெல்லாம் காரணம் கிரிதரன் தான் என்று தெரிந்து உடைந்து போனது எல்லாவற்றையும் சொல்கிறான்.

''என்னப்பா அப்படி பார்க்கிறீங்க. தங்கமாக வளர்த்த உங்க பிள்ளை தான் இத்தனை பெரிய தவறை செய்திருக்கிறான். அது தெரிஞ்சா நீங்க உடைஞ்சு போவீங்கன்னு பயந்தேன்.

கிரிதரன் மேலே ஆத்திரம், கோபம் வந்துச்சு.

மாலதி கிட்டே முடிவை விட்டுட்டேன்.

நீ என்ன சொல்றியோ அதை செய்யறேன். கிரிதரனை சட்டையை பிடிச்சு இழுத்துட்டு வந்து நிறுத்தச் சொல்றியா சொல்லுன்னு கேட்டேன்.

அந்த பெண் என்ன சொன்னாள் தெரியுமா...

''அவர் சட்டையை பிடிச்சு நியாயம் கேட்டு என்ன ஆகப்போகுது அவர் குடும்ப வாழ்க்கை சிதறிப் போகும். கிராமத்தில் கௌரவமாக வாழற அந்த பெரிய மனிதருக்கு தலை குனிவு ஏற்படும்.

ஒரு டாக்டராக, நல்ல மனிதராக மக்களுக்கு சேவை செய்யற உங்களுக்கு அவமானம் தேடி வரும்.

வேண்டாம் டாக்டர். போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ... தெரியலை...அம்மா, அப்பா யாருன்னு தெரியாத அனாதையாக வாழறேன். ஒரு நல்ல குடும்பத்தை கெடுத்த பாவத்தை நான் செய்ய விரும்பலை.

ஆனால் உங்க கிட்டே ஒரே ஒரு உதவி மட்டும் கேட்க

தோணுதுனு சொன்னா''

''பாவம்பா.. அந்த மகராசி உன்கிட்டே என்ன உதவி கேட்டா...''

குரல் தழுதழுக்க கேட்கிறார் சண்முகம்.

''நான் தான் அனாதையாக வாழ்ந்துட்டேன். என் மகனும் அப்பன் யாருன்னு தெரியாமல் வாழக்கூடாது.

நான் ஏற்கனவே எடுத்த முடிவு தான்.

இன்னும் இரண்டு மாசத்தில் வேலைக்கு ஆஸ்திரேலியா போறேன். திரும்பி இங்கே வரமாட்டேன்.

என் மகனை ஒரு நல்லவங்களுக்கு தத்து கொடுப்பதுன்னு முடிவு பண்ணி, அதற்கான ஏற்பாட்டையும் செய்துட்டு இருக்கேன்.

ஆனால் என் மகன் உங்க குடும்ப வாரிசுன்னு தெரிஞ்சபிறகு அவன் உரிமையுள்ள இடத்தில் வாழணும்னு என் மனசு ஆசைப்படுது.

என்னைப் பற்றி உண்மை யாருக்கும் தெரிய வேண்டாம் அது உங்க மனசோடு இருக்கட்டும்.

என் மகனை உங்க மகனாக தத்தெடுப்பீங்களா டாக்டர். நீங்களும், உங்க மனைவியும் அப்பா, அம்மாவாக இருந்து என் மகனை வளர்த்து, அவனுக்கு ஒரு கௌரவத்தை, ஒரு அடையாளத்தை தரணும்.

உரிமையுள்ள இடத்தில் சேர்த்துட்டேன்கிற திருப்தியோடு, இந்த உலகத்தின் ஏதாவது ஒரு மூலையில் வாழ்ந்துட்டு போயிடுவேன்''

''என்னப்பா சொல்ற.. இப்ப அந்த பெண் மாலதி...''

''ஆமாம்பா. அவ சொன்னது மாதிரி ஆஸ்திரேலியா கிளம்பி போயிட்டா. அவளை தான் பெங்களூர் போய் ப்ளைட் ஏத்திட்டு வரேன்! அவ இனி எந்த காலத்திலும் நம்மோடு தொடர்பு

கொள்ள மாட்டாள்''

வருத்தம் குரலில் தெரிய சொல்கிறான்.

கண்ணீர் பொங்கி வர, காலில் விழாத குறையாக அவன் முன் நிற்கிறாள் நந்தினி.

''என்னை மன்னிச்சிடுங்க. உங்க நல்ல மனசை புரிஞ்சுக்காம அஞ்சு வருஷம் உங்களோடு வாழ்ந்தும், உங்களை தப்பா நினைச்சுட்டேன்.''

''பரவாயில்லை நந்தினி, இதை நீ நேரிடையாக என்கிட்ட கேட்டிருக்கலாம். எப்ப உன் மனசில் இப்படியொரு சந்தேகம் வந்ததோ அப்பவே கேட்டிருந்தால், இப்ப அம்மா, அப்பா வரைக்கும் தெரிஞ்சிருக்காது.

''நான் உன்கிட்டேயாவது உண்மையை சொல்லியிருக்கலாம்''

நந்தினியை சமாதானப்படுத்துகிறான்.

''அவ எங்களை கூப்பிட்டது நல்லது தான் ரகு. இப்ப என் மனசும் மாறிடுச்சி. ஒரு குழந்தை இல்லைங்கிறதுக்காக நந்தினி கிட்டே நான் எவ்வளவு கடுமையாக நடந்திருக்கேன்னு எனக்கே புரியுது.

பாவம் இந்த குறை அவளாக விரும்பி கேட்டதில்லையே.

என்னை போன்ற மாமியார்கள் திருத்தணும் ரகு

தாய்மை பேறுங்கிறது ஒரு பெரிய வரம் தான். இருந்தாலும் ரத்த சம்பந்தமில்லாத ஒரு குழந்தைக்கு தாயாகும் நல்ல மனசு எல்லாருக்கும் வராது.

ஆதியை நீ அவக்கிட்டே கொடுத்ததும், தாய்மை பொங்க வாரியணைச்சாளே, அவளுக்கு முன்னால, இரண்டு குழந்தையை பெத்த நானெல்லாம் சாதாரணம்பா...''

குரல் கம்ம சொன்ன வைதேகி,

''நந்தினி நீயும்என்னை மன்னிச்சுடும்மா என் வார்த்தைகளால் உன்னை ரொம்பவே காயப்படுத்திட்டேன்''

''ஐயோ என்ன அத்தை நீங்க பெரியவங்க. என் கிட்டே கோபப்பட உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கு.''

நந்தினி சொல்ல, அவள் கையை ஆதரவாக பிடிக்கிறாள் வைதேகி.

''என்னங்க ரகு சொன்னதையெல்லாம் கேட்டுட்டு நீங்க எதுவும் சொல்லாமல் இருக்கீங்க.''

கணவனை பார்க்க

''நம்ப குடும்பத்துக்கு குலதெய்வமாக மாறி, குழந்தையையும் கொடுத்துட்டு, அவள் வாழ்க்கையயே தியாகம் செய்துட்டு போயிருக்கா அந்த மகராசி..

அந்த கடவுள் அடுத்த ஜென்மத்திலாவது அவளுக்கு ஒரு குடும்பத்தை நல்ல கணவனை கொடுத்து கௌரவமாக வாழ வைக்கணும்.

இதை தான் என்னால் நினைக்க முடியும்.

ஆனால் தப்பு செய்த கிரி, எந்த குற்ற உணர்வும் இல்லாமல் வாழ்ந்துட்டிருக்கான்.

ஒரு பெண்ணுக்கு செய்த துரோகம் மன்னிக்க முடியாதது. அவனை நேரில் நிற்க வைத்து நாலு வார்த்தை கேட்கணும். அப்பதான் என் மனசு ஆறும்.

நல்லதை சொல்லி தானே என் பிள்ளைகளை வளர்த்தேன். அவனால் எப்படி இப்படியொரு காரியம் செய்ய முடிந்தது. வேதனையாக இருக்கு வைதேகி''

''கண்ணீருடன் சண்முகம் சொல்ல,

அப்பாவிடம் வருகிறான் ரகுவரன்.

''அப்பா... தயவு செய்து.. இந்த விஷயம் நம்மோடு போகட்டும்.''

கிரியால் பாதிக்கப்பட்ட அந்த பெண்ணே, மன்னிச்சு அவன் குடும்பத்தோடு வாழட்டும்னு சொல்லிட்டு போயிட்டா..

அவளோட விருப்பம். ஆதி என் மகனாக வளரணும், இந்த சமூகத்தில் பேர் சொல்லும் நல்ல இடத்தை அவனுக்கு நாம் தரணும்.

அவள் விருப்பத்தை நிறைவேற்றுவோம்மா. ஆதி எந்த குறையுமில்லாமல் வாழட்டும்.''

''எப்படிப்பா தப்பு செய்தவன் அவன். நாமெல்லாம் குழம்பி தவிச்சு... உன்னை சந்தேகப்பட்டு... அவனால் தாயாக்கப்பட்டு... வாழ வழி தெரியாமல் அந்த பெண் ஊரை விட்டே போக,

இதோ பாருடா.. பாவி.. இப்படியொரு ஒரு அழகான மகனை கொடுத்து, அந்த மகராசியை ஏமாற்றி ஓடி வந்தாயே... நீயெல்லாம் ஒரு ஜென்மமான்னு கேட்கணும் ரகு''

''வேண்டாம்பா இதனால் என்ன நடக்கும் போனவளுக்கு தான் வாழ்க்கை கிடைக்கப் போகுதா... இல்லை புவனா கணவனின் தப்பை மன்னித்து, ஆதியை மகனாக ஏத்துப்பாளா...

எதுவும் நடக்கப் போறதில்லைபா. இதனால் கிரியின் வாழ்க்கை நாசமாகும்.

புவனா.. அவளை பிரிந்து பிள்ளைகளோடு போய் விடுவாள். அவளோட அம்மா ஜென்மத்துக்கும் மாப்பிள்ளையை மன்னிக்க மாட்டாள்.

இந்த தண்டனையை அவனுக்கு கொடுக்க வேண்டாம்மா... அது மட்டுமில்லை, ஆதி அவனுக்கு பிறந்தவன் என்று தெரிந்தால்

அது எங்களையும் பாதிக்கும்.

ஆதி எங்க மகன். தெய்வமான மாலதி எங்களுக்கு கொடுத்த பரிசு. எங்க உயிர் தொடும் அமுதம் ஆதி. அவனை சிறப்பாக வளர்ப்போம்மா. ஒரு தாய், தந்தையாக வாழ்ந்து காட்டுவோம்.

ப்ளீஸ்பா... எங்களை புரிஞ்சுக்குங்க''

அப்பாவின் காலடியில் சிறு பிள்ளையாக விழுந்து ரகுவரன் கதற, மனம் நெகிழ, அவனை தொட்டு தூக்குகிறார் சண்முகம்.

# 13

‘‘இப்ப எதுக்கு திரும்பவும் கிராமத்துக்கு கூப்பிட்டிருக்காங்க. ஒவ்வொரு முறை போகும் போதும், இப்பெல்லாம் ஏதாவது பிரச்சனையோடு தான் திரும்பறோம்.

முதலில் இருந்த சந்தோஷம் எல்லாம் தொலைஞ்சு போச்சு’’

புவனா சொல்ல,

‘‘அடுத்தவங்களையே குறை சொல்லாமல் அமைதியாக வா புவனா’’

காரை ஓட்டியபடி கிரிதரன் சொல்கிறான்.

‘‘எங்க அம்மா சொன்னாங்க. அந்த நந்தினி தன் இடத்தை விட்டு தரமாட்டா... அதனால் தான் அனாதை பிள்ளையை மகனாக தத்தெடுத்திருக்கான்னு... அது தான் உண்மை..’’

‘‘சரி, அப்படியே இருக்கட்டும். நந்தினியை சொல்றியே.. இப்ப நானே தடம்மாறி, இன்னொரு பெண்ணுடன் தொடர்பில் இருந்திருந்தால்.. நீ உன் இடத்தை விட்டு தருவியா...’’

கோபத்தில் கேட்க,

‘‘தாராளமாக விட்டுத் தருவேன். அந்த கேடு கெட்டவளோடு வாழுங்கன்னு சொல்லி, என் பிள்ளைகளை கூட்டிக்கிட்டு எங்கம்மா வீட்டுக்கு போயிடுவேன். இந்த புவனாவை நீங்க சரியா புரிஞ்சுக்கலை. அதனால் தான் இப்படி பேசறீங்க.

அப்படியொரு ஒழுங்கீனம் உங்க கிட்டே இருந்து, யாராவது உங்களை தேடி வந்தால்...

உங்களை தக்க வச்சுக்க போராட மாட்டேன். தூக்கியெறிஞ்சுட்டு போயிடுவேன்,’’

ஆக்ரோஷமாக புவனா சொல்ல,

மனதில் சின்னதாக ஒரு நடுக்கம் வருகிறது. ‘கடவுளே வயசு காலத்தில் தடம்மாறி, ஒரு அப்பாவி பெண்ணை காதல்ங்கிற

பேரில் ஏமாற்றி, வந்துட்டேன். என்னால் கற்பை இழந்த பெண், இப்போது எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் எதுவும் தெரியாது. என்னை மன்னிச்சிடு இறைவா... தயவு செய்து அவள் எந்த காலத்திலும் என் வாழ்க்கையில் வராமல் பார்த்துக்க. இனி எந்த ஜென்மத்திலும், இந்த மாதிரி தப்பை செய்யமாட்டேன்' மனம் வேண்டுகிறது.

''என்ன பேச்சு மூச்சையே காணோம். உங்க வாழ்க்கையில் இது வரை வேறுயாருக்காவது இடம் கொடுத்திருந்தால் சொல்லிடுங்க''

''என்ன புவனா இது. ஏன் இப்படியெல்லாம் பேசற. என் மனசிலிருப்பது நீ ஒருத்தி தான் போதுமா. இனி இப்படியெல்லாம் பேசாதே''

மன்னிப்பு கேட்பது போல சொல்கிறான் கிரிதரன்.

## 14

**கா**ரிலிருந்து இறங்கிய புவனா, ஆச்சரியப்படுகிறாள். கல்யாண வீடு போல் வாழைமரம் கட்டி, வெளியே பந்தல் போட்டு மலர் அலங்காரம் பண்ணி அந்த கிராமத்து வீடு, கல்யாண மண்டபம் போல காட்சிதருகிறது.

குழந்தைகளை அழைத்துக்கொண்டு உள்ளே வருகிறார்கள்.

''வாங்க, வாங்க''

ஏற்கனவே வந்திருந்த நந்தினியும், ரகுவரனும் மலர்ந்த முகத்துடன் வரவேற்கிறார்கள்.

''அதிதி, அஜய் எப்படியிருக்கீங்க. பெரியம்மா கிட்டே வாங்க''

குழந்தைகளை அருகில் அழைத்து கொஞ்ச,

சண்முகமும், வைதேகியும் வர, அவர்கள் இருவர் கைகளையும் பிடித்த படி நடுவில் நடந்து வருகிறான் ஆதி.

ஆச்சரியத்தில் விழி விரிய பார்க்கிறாள்.

'எப்படி இந்த மாற்றம். என்ன தான் நடக்கிறது.

அத்தையும், மாமாவும் மனசு மாறி விட்டார்களா... இந்த அனாதை சிறுவனை பேரனாக ஏற்றுக்கொண்டு விட்டார்களா.. எப்படி இதெல்லாம் நடந்தது....'

''என்ன திகைச்சு போய் நிக்கிறீங்க. எங்க மகனுக்காகவும், மருமகளுக்காகவும் எங்க மனசை மாத்திக்கிட்டோம்.

அவங்க சந்தோஷம் தான் எங்க சந்தோஷம். அந்த கடவுள் எங்க புத்தியை தெளியவச்சுட்டாரு.

அஜய் போல, ஆதியும் எங்க பேரன். இதில் எந்த மாற்றமும் இல்லை.''

''இன்றைக்கு சாயந்திரம் விருந்து வைத்து, என் பேரனை கிராமத்து ஜனங்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தப் போறேன்''

சண்முகம் பெருமிதம் பொங்க சொல்கிறார்.

....

உள்ளே தடபுடலாக விருந்து ஏற்பாடுகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

அண்ணனிடம் வருகிறான் கிரி.

'' ரகு, நீ ஆதியை உன் மகனாக தத்தெடுத்தது எங்களுக்கும் சந்தோஷம்தான். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அப்பா, ஏன் என்கிட்ட முகம் கொடுத்து பேசமாட்டேங்கறாருன்னு தெரியலை. நான் என்ன தப்பு செய்தேன்''

''நாம் செய்யற எல்லா தப்புகளும் வெட்ட வெளிச்சமாக எல்லாருக்கும் தெரியறதில்லை. பல தப்புகளை நாம் மறைச்சுடறோம். உனக்குள் ஏதோ மன உறுத்தல், குற்ற உணர்வு இருக்குன்னு நினைக்கிறேன். அதான் இப்படி பேசற.''

''அப்படியெல்லாம் இல்லை. சாதாரணமாக தான் கேட்டேன்.''

அவன் குரல் தடுமாற,

''பரவாயில்லை கிரி.. நானும் சாதாரணமாக தான் சொன்னேன். ஆதியை பார்த்தியா... அவனை உனக்கு பிடிச்சிருக்கா. அவனுக்கு நீ ஒரு நல்ல சித்தப்பாவாக இருக்கணும்''

''கட்டாயம் ரகு என்னவோ தெரியலை. அவன் முகத்தை பார்த்தா... எனக்கு வேறு யாரோவாக தெரியலை. நம் குடும்பத்தில் ஒருவன் போல தான் இருக்கான்''

புன்சிரிப்போடு அவனை பார்த்தவன்,

''சரி வா போகலாம். எல்லாரும் வர்ற நேரமாச்சு.''

சொல்கிறான்.

## 15

ஆதி, அஜய் இருவருக்கும் ஒரே மாதிரி புதிதாக எடுத்த டிரஸ்ஸை போடுகிறாள் நந்தினி.

''அக்கா ஆனாலும் உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு. நாலு வயது சிறுவனை மகனாக சுவீகாரம் பண்ணிட்டீங்க... அத்தான் ரொம்ப நல்லவர். இரண்டாம் கல்யாணம் என்ற பேச்சுக்கே இடம் கொடுக்காமல், உங்களை தாயாக்கிட்டாரு'' புவனா சொல்ல,

'' நீயும் இவனை உன் மகனாக பார்க்கணும் புவனா. ஆதி என்கிட்டே வந்தது பூர்வஜென்ம பந்தம்னு நம்பறேன்.

கடவுள் ஏதோ ஒரு காரணத்திற்காக தான், எனக்கு தாயாகும் பாக்கியத்தை தராமல்.. இவனை என் கிட்டே அனுப்பி வச்சுருக்காரு.இவனுக்கு நான் ஒரு நல்ல தாயாக இருப்பேன் புவனா''

மனம் நெகிழ நந்தினி சொல்ல,

''என்னையும் நீங்க மன்னிக்கனும் அக்கா. என் அம்மாவோடு சேர்ந்து, அத்தையின் மனசைமாற்றி, அத்தானுக்கு நான்தான் இரண்டாம் கல்யாணம் பண்ணி வைக்கும் படி சொன்னேன்.

ஆனால் ஒரு பெண்ணாக, என்னை அந்த இடத்தில் வைத்து

பார்க்கும் போது... ஒரு பேச்சுக்கு அவர் இன்னொருத்தி என் வாழ்க்கையில் வந்தால் ஏத்துப்பியான்னு கேட்டாரு.. எனக்கு அப்படியொரு கோபமும், ஆத்திரமும் வந்தது. எந்த ஒரு பெண்ணும் தன் கணவனை பங்கு போட விரும்பமாட்டாள்.

''குழந்தையில்லைங்கிற காரணத்துக்காக ஒரு பெண்ணை ஒதுக்குவது போன்ற இழிவான செயல் வேறுஏதுமில்லை. என்னை மன்னிச்சுடுங்க அக்கா''

அன்போடு அவளை தழுவுகிறாள் நந்தினி.

விருந்து உபசாரம் நடைபெறுகிறது.

கிராமத்து ஜனங்கள், விதவிதமான பலகார வகைகளுடன் திருப்தியாக சாப்பிடுகிறார்கள்.

''ஐயாவுக்கு ரொம்ப பெரிய மனசு. கிராமத்து ஜனங்களை எல்லாம் அவர் உறவுகளாக நினைக்கிறாரு. பணமும், பணிவும் ஒரே இடத்தில் இருப்பது இவர் கிட்டே தான்''

சாப்பிட்ட படி பேசிக் கொள்கிறார்கள்.

''இன்னைக்கு ஐயா வீட்டில் என்ன விசேஷம் தெரியுமா''

''ஏன் தெரியாமல். ஏழுமலை தான் விபரமாக சொன்னானே... பெரியதம்பி அஞ்சு வருஷமாகியும் குழந்தை பாக்கியம் இல்லைன்னு, ஆசிரமத்திலிருந்து ஒரு பிள்ளையை தத்தெடுத்து இருக்காங்களாம்.

பேரனை எல்லாருக்கும் அறிமுகப்படுத்த தான் இந்த விருந்து''.

'' கொடுத்து வச்ச புள்ளை. இந்த வீட்டில் வந்து வாழ என்ன புண்ணியம் செய்ததோ.. அப்பன், ஆத்தா பெயர் தெரியாத பிள்ளைக்கு ஒரு அடையாளத்தை கொடுத்துட்டாங்க''

....

''எல்லாருக்கும் வணக்கம். இந்த வீட்டில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும், நம்ப கிராமத்து ஜனங்களின் வாழ்த்துக்களோடு தான் நடக்கும். அதான் உங்களையெல்லாம் வரவழைச்சேன்.

''இன்னைக்கு என் பெரிய மகனின் புதல்வனை, என் அருமை பேரனை உங்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்த

போறேன்'' சொன்ன சண்முகம்.

அங்கே வைதேகி, மகன்கள், மருமகள்களுடன் நிற்கும் பேரனை அழைக்கிறார்.

''ஆதி இங்கே வாப்பா''

அவர் அழைக்க,

தன் கைபிடித்து அருகில் நின்றிருக்கும் அதிதியை பார்த்தவன்.

'நீயும் வா அதிதி'

அவளை அழைக்க.

''நீ போ ஆதி. தங்கச்சி இங்கே இருக்கட்டும் தாத்தா உன்னை தான் கூப்பிடுறாரு''

புவனா அன்போடு சொல்கிறாள்.

சண்முகத்தின் அருகில் வர,

''இங்கே வாப்பா. எல்லாரும் பாருங்க. இவன் தான் ஆதித்யா என் பேரன்''

அவனை குனிந்து தூக்கிக் கொள்கிறார்.

''என் பெரிய மகனுக்கு ஐந்து வருடமாகியும் குழந்தை பிறக்கலை. கடவுள் இந்த ஆதி அவங்க மகனாக வளரணும்ங்கிறதுக்காக அவங்களுக்கு குழந்தையை கொடுக்கலை. ரத்த பந்தங்களால் மட்டும் தான் உறவுகள் உருவாகும்னு கிடையாது. அன்பு, பாசம், நேசம் இதெல்லாம் உறவுகள் உருவாக்க பாலமாக இருக்கும். இதோ இந்த ஆதி அனாதை குழந்தை தான். தாய், தந்தை அறியாதவன். இவனை போல எத்தனையோ குழந்தைகள்... அனாதையாக வளரும் சூழ்நிலை.

''இது எதனால் தெரியுமா... அறிவு பூர்வமாக யோசிக்க தெரியாமல், வெறும் காமத்தை மட்டுமே பெரிதாக நினைத்து சில இளைஞர்களுக்கு ஏற்படும் காதல். இளம்பெண்களை ஏமாற்றி தங்கள் இச்சையை தீர்த்துக் கொண்டு விலகி விடுகிறார்கள். இவர்களால் கருவை தாங்கும் அந்த பெண் ஒரு கட்டத்தில் குழந்தையை அனாதை ஆசிரமத்தில் போட்டு விடுகிறாள்

தகப்பன் பெயர் தெரியாமல் குழந்தையை வளர்க்க முடியுமா.. இப்ப சொல்லுங்க. இதை போல அனாதை குழந்தைகள் உருவாக, இந்த மனப்பான்மையுள்ள இளைஞர்களும் காரணம் தானே'' அவர் கண்கள் அங்கே நின்றிருக்கும் கிரிதரனை பார்க்க அவன் தலை தானாக குனிகிறது.

தயவு செய்து இந்த காலத்து இளைஞர்களை கையெடுத்து கும்பிட்டு கேட்டுக் கொள்கிறேன்.

காதல் தப்புன்னு சொல்ல வரலை. காதலியுங்கள், அதற்கான தகுதியும், வயதும் வரும் வரை காத்திருங்க, இப்படி அறியாத வயதில் அபலை பெண்களின் வாழ்க்கையில் விளையாடதீங்க...''

சொன்னவர் கண்கலங்க ஆதியின் கன்னத்தில் முத்தமிடுகிறார்.

கூட்டத்தில் இருந்த ஏழுமலை,

''ஐயா.. இந்த ஆதித்யா. உங்க பேரனுக்கு இனி எந்த குறையும் கிடையாது. அவனை பெத்தவங்களைவிட அன்போடு சீராட்ட உங்க மகன், மருமகள் இருக்காங்க. இந்த ஆதித்யா நம்ப கிராமத்துக்கே செல்லபிள்ளை''

உணர்ச்சி வசப்பட்டு சொல்கிறான்.

நந்தினியும், ரகுவரனும், சண்முகம், வைதேகியின் அருகில் வந்து அவர்கள் காலில் விழ, அங்கு கூடியிருந்த ஜனங்கள் வாழ்த்து தெரிவிக்க,

''வாங்க நாமும் அத்தை, மாமா கிட்டே ஆசிர்வாதம் வாங்கலாம்.''

குழந்தைகளுடன், கிரிதரனையும் அழைத்துக்கொண்டு வருகிறாள் புவனா.

இருவரும் காலில் விழுந்து வணங்க,

''தீர்க்காயுசாக இருங்க''

வாழ்த்துகிறார்கள்,

காலில் விழுந்து எடுத்தவன்,

''அப்பா என்னை மன்னிச்சுடுங்க, அடுத்த ஜென்மத்திலும்

உங்க மகனாக பிறந்து, மனதளவில் கூட

எந்த தப்பும் செய்யாதவனாக இருந்து, உங்களை பெருமை படுத்துவேன்பா''

தன் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்கிறான். என்பதை உணர்ந்தவர் அவன் தோள் தட்டி சமாதானப்படுத்துகிறார்.

''சித்தப்பா, சித்தி, அதோ அந்த அங்கிள் நம்மை போட்டோ எடுக்கப் போறாரு எல்லாரும் சிரிங்க வரிசையாக நில்லுங்க''

சொன்ன ஆதி,

அதிதி, அஜய் பக்கத்தில் நிற்க,

அம்மா, அப்பா அருகில் நிற்கும் ரகுவரன், நந்தினியை அன்போடு பார்க்கிறான்.

''இனி இந்த குடும்பத்தின் பெரிய மனுஷன் யார் தெரியுமா நந்தினி.. உன் மகன் தான். இப்பவே பாரு அதட்டலும், அதிகாரமுமாக சொல்கிறான்.''

புன்சிரிப்போடு சொல்ல,

''அவன் நம்ப குடும்ப வாரிசு இல்லையா. அதான் அப்பாவின் அன்பான குணமும், அக்கரையும், அதட்டலும் அவன் கிட்டே இருக்கு''

கிரிதரன் சொல்ல,

சண்முகம், ரகுவரனை பார்க்கிறார்.

அந்த பார்வையில், ''கிரிதரனின் மகன், உன் மகனாக வளரப் போகிறான். அந்த ஒரு நிறைவிற்காக அவனை மன்னித்து விடுவோம் ரகு.

இது நாம் குல தெய்வமாக கும்பிட வேண்டிய அந்ததேவதைக்கு தரும் பரிசு.''

என்பதை சொல்லாமல் சொல்ல, அந்த இடத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் பூத்துக் குலுங்குகிறது..

**(முற்றும்)**

# சமையல்

**தேவையான பொருட்கள்:**

உருளைக்கிழங்கு (வேக வைத்தது) -5

பீன்ஸ் -100 கிராம், கேரட்-2, பச்சை பட்டாணி-1/2 கப், பிரெட்-2 துண்டுகள், மிளகாய்த்தூள்-1 டீஸ்பூன், ஆம்சூர் பொடி-1ஸ்பூன், சீரகத்தூள்-1ஸ்பூன், எலுமிச்சைச்சாறு-1டீஸ்பூன், மல்லித்தழை (நறுக்கியது)-2 டேபிள் ஸ்பூன், பிரெட் க்ரம்ஸ் -1/2 கப், உப்பு-தேவையான அளவு, எண்ணெய் -பொரிப்பதற்கு தேவையான அளவு.

**செய்முறை:**

உருளைக்கிழங்கை நன்கு மசித்துக்கொள்ளவும். கேரட், பீன்ஸ் இவைகளை சிறியதாக நறுக்கி, பட்டாணி சேர்த்து தண்ணீர் விட்டு வேக வைத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும். பிரெட்டை நைசாக அரைத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கு, அவித்த காய்கறிகள் மற்றும் எல்லா மசாலாக்களையும் அரைத்த பிரெட்டுடன் சேர்த்து நன்கு கலக்கவும். மல்லித் தழையையும் சேர்க்கவும். இதை சிறு சிறு உருண்டைகளாக்கி பிடித்த வடிவத்தில் செய்து பிரெட் க்ரம்ஸில் உருட்டி எடுத்து காய்ந்த எண்ணெய்யில் போட்டு பொன்னிறமாக எடுக்கவும். தக்காளி சாஸ்சுடன் பரிமாறவும்.

-லோ.சித்ரா
கிருஷ்ணகிரி-






**தேவையானவை:**

தனியா-4,கப், இஞ்சி-200கிராம், ஓமம்-100கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி-தலா 10 கிராம், வெல்லம்-100 கிராம் (துருவிக்கொள்ளவும்), பொடித்த ஏலக்காய்-5 கிராம் (விருப்பப்பட்டால்), நெய்-கால் கப்.

**செய்முறை:**

தனியாவை ஊற வைத்து அரைத்து வடிகட்டி சாறு எடுக்கவும். இஞ்சியை அரைத்து வடிகட்டி சாறு, எடுக்கவும். சுக்கு, மிளகு, திப்பிலியை பொடித்துக்கொள்ளவும் வடிகட்டிய தனியா சாறு, இஞ்சிச்சாறு, சுக்கு- மிளகு-திப்பிலி பொடி, ஓமம், பொடித்த ஏலக்காய் அனைத்தையும் சேர்த்து, வெல்லத்துடன் கலக்கவும். அடி கனமான வாணலியை அடுப்பில், வைத்து இந்தக் கலவையை சேர்த்துக் கிளறி, பின்னர் நெய் சேர்த்து, சுருள வந்தவுடன் கீழே இறக்கி, ஆற வைத்து, பாட்டிலில் போட்டு வைத்துக் கொள்ளவும்.

**-கவிதா சரவணன், திருச்சி.**

---

**தேவையானவை:**

கேரட்-1, வெள்ளரிக்காய்-1, குடைமிளகாய்-1, உப்பு-தேவையானஅளவு, மிளகுத்தூள்-2ஸ்பூன், எலுமிச்சம்பழம்-1

**செய்முறை:** காய்கறிகளை தோல் நீக்கி நறுக்கிக்கொள்ளவும். பின் உப்பு, மிளகுதூள், எலுமிச்சை சாறு கலந்து பின் நறுக்கிய காய்களோடு சேர்த்து கலந்து, கொத்தமல்லி கொண்டு அலங்கரித்துப் பரிமாறவும்.

**-கே.அஞ்சம்மாள், திருவாடானை.**





ஒரு நாட்டில் தொழில் செய்ய வருபவர்கள் அந்நாட்டின் மொழியை கற்க வேண்டுமா அல்லது அந்நாட்டில் வாழும் மக்கள் தொழில் செய்து லாபம் பார்க்க வரும் குறிப்பிட்ட தொழிலதிபரின் மொழியை கற்க வேண்டுமா?

# இந்தி தெரியாது போடா... தமிழ் கற்றுக்கொண்டு வாடா!

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன், 'ஒன்றிய அரசு இந்தியை திணிக்கும் வேலையில் நேரடியாக ஈடுபட்டு வருகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் வாயிலாக இந்தி திணிக்கும் வேலையையும் செய்து வருகின்றனர். கடந்த 1965ல் பிரதமராக இருந்த நேரு அளித்த வாக்குறுதிக்கு எதிரான செயல் இது' என்று கூறினாலும், இந்திய அளவில் அந்தக்கட்சியோ, மார்க்சிஸ்ட் கட்சியோ இந்திய அளவில் இந்தி திணிப்பை கொள்கை ரீதியாக எதிர்க்கவில்லை.**

ஒரு மாநிலத்தின் ஆட்சி மொழி, அலுவல் மொழி, சட்ட மொழி, வழக்குமொழி, நடைமுறை மொழி அம்மாநில மக்களின் மொழியாக இருக்கவேண்டுமா? வேற்று மாநிலத்தவர்கள் பேசும் மொழியாக இருக்கவேண்டுமா?

எளிதில் எவராலும் விடை காண முடியும் இந்த விவாதம் ஒன்றிய அரசின் ஒரு சார்பான நிலைப்பாட்டால் நீண்டுகொண்டே போகிறது.

மாநில மக்களின் பணம் வேண்டும். அவர்கள் மொழி மட்டும் வேண்டாம் என்று கருதும் ஒன்றிய அரசின் அலட்சியப்போக்கை சுட்டிக்காட்டி திருத்திக்கொண்டிருக்கும் நிலையில்... தமிழ்நாட்டு மக்களிடம் தொழில் செய்து காசு பார்க்கும் கார்பரேட் நிறுவனங்கள் ஆணவத்துடன் இந்தியை முன்னிலைப்படுத்துவதும் நிகழ்கிறது.

சென்னை தாம்பரத்தை சேர்ந்த விகாஷ்(27), சில நாட்களுக்கு முன்பு சொமேட்டோ உணவு விநியோக செயலியில் தொடர்பு கொண்டு, குறிப்பிட்ட ஒரு உணவகத்தில் உணவு ஆர்டர் செய்துள்ளார். ஆனால் அவருக்கு வந்த பார்சலில் ஒரு உணவு இல்லை.இதனையடுத்து அவர் சொமேட்டோ கஸ்டமர் கேரை சாட் மூலம் தொடர்பு கொண்டு புகார் தெரிவித்துள்ளார்.

அதற்கு வாடிக்கையாளர் சேவை பிரிவு அதிகாரி,சம்பந்தப்பட்ட ஓட்டலை பலமுறை செல்போனில் தொடர்பு கொண்டு விட்டோம். அவர்களுக்கு இந்தி

தெரியவில்லை. நீங்களே பேசிப் பாருங்கள் என்று அலட்சியமாக கூறி விட்டனர். அதாவது, மொழியை காரணம் காட்டி தங்கள் வேலையை தவிர்த்து விட்டனர்.


விகாஸ்

இதையடுத்து ஓட்டலை தொடர்பு கொண்டு கேட்டபோது, இது எங்கள் தவறுதான். ஆனால் சொமேட்டோ கால் சென்டரில் இருந்து பேசுபவர் இந்தியில்தான் பேசுகிறார். எனவே பணத்தை திருப்பித் தர ஓட்டல் சம்மதித்து விட்டதாக நீங்களே தெரிவித்து விடுங்கள் என்று விகாஷிடம் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து விகாஷ், சாட் சேவை மூலம் கஸ்டமர் கேரை தொடர்பு கொண்டபோது, ஒரு இந்தியராக இருந்து கொண்டு தேசிய மொழியான இந்தி தெரியாமல் எப்படி இருக்கிறீர்கள்? என சொமோட்டா வாடிக்கையாளர் சேவை அதிகாரி திமிராக தெரிவித்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த விகாஷ், வாடிக்கையாளர் சேவை மையத்துடனான தனது விவாதத்தை ஸ்கிரீன்ஷாட் எடுத்து தனது டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இதனால் பெரும் சர்ச்சை எழுந்ததையடுத்து வருத்தம் தெரிவித்த சொமோட்டோ நிறுவனம், சம்பந்தப்பட்ட ஊழியரை பணி நீக்கம் செய்து இருப்பதாக விளக்கம் அளித்தது. ஆனால், அடுத்த சில மணி நேரங்களில் பணி நீக்கம் செய்த ஊழியரை மீண்டும் பணியில் அமர்த்தியதோடு மட்டுமல்ல, ‘எல்லோருக்கும்



**ஒரு பொருள் எந்த மாநிலத்துக்குள்ளும் விற்பனைக்கு வரும்போது அதன் பெயர், விலை, உள்ளடக்கம், பயன்படுத்துவதால் ஏற்படும் பின்விளைவுகள் போன்ற நிபந்தனைகள் அந்த மாநில மொழியில் இருக்க வேண்டும். அதன் விளம்பரமும் விற்பனை பிரிவும் அந்த மொழி சார்ந்ததாக இருக்கவேண்டும். இல்லையேல் அப்பொருட்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்.**

**இது எந்த அரசு அமைப்புக்கோ, பிற மாநிலத்தவருக்கோ எதிரான செயல் அல்ல. மாறாக, தாங்கள் வாங்கும் பொருளை, பெறும் சேவையை பற்றி புரிந்துகொண்டு முடிவெடுக்க அனைத்து மக்களுக்கும் வாய்ப்பாக இருக்கும். இதுவே நியாயமும் ஆகும்.**

சகிப்புத்தன்மை வேண்டும்' என சொமோட்டோ அதிகாரி தமிழ் மக்களுக்கு அறிவுரை வேறு வழங்கியுள்ளார் என்பதுதான் காலத்தின் கொடுமை.

கடந்த ஆண்டு திமுக எம்.பி. கனிமொழி டெல்லி சென்றபோது சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த சிஐஎஸ்எஃப் பெண் அதிகாரி ஒருவர் கனிமொழியிடம் கேள்வி எழுப்பினார். தனக்கு இந்தி தெரியாது. ஆதலால், ஆங்கிலம் அல்லது தமிழில் பேசுங்கள் என்று சொல்லி இருக்கிறார் கனிமெழி. அதற்கு அந்த அதிகாரி, நீங்கள் இந்தியரா என்று கேட்டுள்ளார். ''இந்தியனாக இருக்க இந்தி அறிந்திருக்க வேண்டும் என்று எப்போது இருந்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்'' எனத் தெரிவித்திருந்தார் கனிமொழி.

காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் ''சென்னை விமான நிலையத்தில் திமுக எம்.பி. கனிமொழிக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் வழக்கத்துக்கு மாறானது அல்ல. எனக்கு உட்பட பலருக்கும் ஏற்பட்டுள்ளது'' என்று தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு மத்திய அரசை கண்டித்தார்.

ஆனாலும், அதற்கு தீர்வு

தேடும் அடுத்த கட்டத்துக்கு யாரும் செல்லவில்லை என்பதுதான் சோகம். இருந்தாலும் அவர்களின் இந்தி திணிப்புக்கு எதிரான பேட்டி மக்களின் உணர்ச்சியை உசுப்ப பயன் பட்டது சிறு மகிழ்சி .

சொமோட்டோ விவகாரத்தில், 'இந்தி கத்துக்க சொல்ல நீங்கள் யார். இந்தி யாருக்கு தேசிய மொழி சொல்லுங்கள் என்று பலர் கேள்வி எழுப்பி டிரெண்ட் செய்தனர். 'எங்கள் மாநிலத்தில் உள்ள நீங்கள், எங்கள் மாநில மொழியில் சேவை வழங்குங்கள்' என்று கேள்வி எழுப்பி ட்வீட் செய்தனர்.

டிவிட்டரில் 'ரிஜக்ட் சொமோட்டோ என்ற ஹேஷ்டேக் டிரெண்டிங் ஆகியதன் விளைவாக இந்திய பங்குச்சந்தையில் சொமோட்டோ நிறுவனத்தின் பங்குகள் 3 சதவீதத்துக்கு மேல் சரிந்தன. வர்த்தக நாளின் தொடக்கத்தில் ரூ.144.80 என்று இருந்த செ ாமோட்டோவின் பங்குகள், வர்த்தக நாளின் முடிவில் ரூ.4.45 ஆக குறைந்து பங்கின் விலை ரூ.139.60 ஆக இருந்தது.

ஆனாலும்,

**தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, 'மத்தியில் பாஜ ஆட்சி அமைந்த உடன் இந்தி பேசாத மக்கள் மீது இந்தி, சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளை திணிக்கிற முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. குறிப்பாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், ரயில்வே துறை, அஞ்சலகங்கள், மத்திய தேர்வு ஆணையம் ஆகியவற்றில் இந்தியை திணிக்கிற வகையில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.**

**இதை எதிர்த்து திமுக தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட மதசார்பற்ற கூட்டணி கட்சின் கடுமையாக போராடி வருகிறது. ஆனால், மொழி திணிப்பு முயற்சிகளை பாஜ அரசு கைவிடுவதாக இல்லை' என்று கூறியுள்ளார். ஆனால், காங்கிரஸ் ஆட்சி க்காலத்திலும் இது போன்ற இந்தி திணிப்பு நடவடிக்கை இருந்தது. இந்தி நாள், இந்தி வாரக்கொண்டாட்டம், இந்தி மொழிப்பயிற்சி என்று அம்மொழியை உச்சி மோந்து மெச்சி வளர்த்தது.**


ப.சிதம்பரம்


கனிமொழி


முத்தரசன்


கே.எஸ். அழகிரி

இவையெல்லாம் உணர்ச்சிப்போக்கில் நிகழந்த உடனடி நிகழ்வுகள்தாம். தொடர்ச்சியான போராட்டம், சட்ட நடவடிக்கை மேற்கொண்டு, வணிக மொழி, வணிகர்களின் தாய் மொழியாக இருக்க வேண்டுமா? வாடிக்கையாளர்களின் தாய் மொழியாக இருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுப்பப்பட வேண்டும். இனிமேல் இங்கு வணிகம் செய்ய வருபவர்கள், அவர்களின் ஊழியர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும்.

இதற்கு முன்பும் ஒன்றிய அரசு தமிழகத்தில் பல வழிகளில் இந்தி திணிப்பை கொண்டு வந்தது. அதற்கு எதிராக தமிழக மக்கள் நடத்திய போராட்டங்களால் திரும்ப பெற்றது. ஆனால், அது நிரந்தர விலக்கு அல்ல, தற்காலிக பதுங்கல். பதுங்கிய புலி பாயும் என்பது போல், இந்தியை கல்வியில், வழக்காட்டில், நீதி வழங்குவதில், வேலை வாய்ப்பில் கொண்டு வருவதற்கு அவ்வப்போது முயற்சித்துக்கொண்டே இருக்கிறது.

★ பெரும்பாலும் கிராமப்புற பகுதிகளை சேர்ந்த வாடிக்கையாளர்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் தமிழ் மொழி இல்லாத படிவங்கள் தரப்படுவதால் பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அதை நிரப்புவதற்கு ஆள் தேடி அலைகின்றனர். தங்கள் பணத்தை வைப்பாக வைத்து வங்கியின் வளர்ச்சிக்கு உதவுகிறார்கள். ஆனாலும், அதை வாங்கும்க் வங்கியோ, தானம் கொடுத்த மாட்டை பல் பிடித்துப் பார்ப்பது போல் தாய்மொழியில் படிவம் கூட வழங்காமல் கஷ்டப்படுத்துகின்றனர்.

★அதுமட்டுமல்ல, இந்தி ,

ஆங்கிலம் இரு மொழிகளில் மட்டும் எழுதப்பட்ட இன்சூரன்ஸ் விண்ணப்பத்தில் இருக்கும் நிபந்தனைகளை இங்குள்ளவர்கள் அறிய முடியாது. இதனால், விபத்தோ நட்டமோ நேர்ந்து இழப்பீடு கோரச்செல்லும்போது 'அந்த நிபந்தனையை படிக்கவில்லையா?அதனால் இழப்பீடு கிடைக்காது' என்ற பதில் வருவதும், வாடிக்கையாளர்கள் மனம் உடைவதும் நடக்கிறது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் வசித்து வரும் ஓய்வு பெற்ற தலைமை அரசு மருத்துவர் பாலசுப்பிரமணியனிடம் , 'இந்தி தெரியாதா? லோன் இல்லை' என வங்கி மேலாளர் கூறிய சம்பவம் கடந்த காலத்தில் நிகழ்ந்தது.

எத்தனையோ முறை இத்தகைய அவமானம் நேர்ந்தாலும் மாநில அரசு சார்பில் எவ்வித தீர்வும் காணப்படவில்லை.

நம்மை சார்ந்து வணிகம் செய்து வாழவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள் எம் மொழியை படித்துவிட்டு வாருங்கள் என்று நமக்கு கட்டளையிடுவதும், சகிப்பு தன்மை வேண்டும் என்று தயாளம் பேசுவதும் ஆணவ அகங்காரத்தின் உச்சம். இதற்கு தக்க பதிலடி கொடுக்காவிட்டால், இனி வரும் அனைத்து நிறுவனத்தாரும் இந்தியில் கேவலமாக திட்டிக்கொண்டே அவர்கள் பொருளை நம் வாயில் திணிப்பார்கள்.

அவர்களாக நம்மிடம் அறிவுரை மழை பெய்யத் தொடங்குமுன்பு சுய மரியாதையோடு சொல்லவேண்டும் - ' இந்தி தெரியாது போடா, தமிழ் கற்றுக்கொண்டு வாடா!' இதுவே ஒவ்வொரு தமிழரின் முழக்கமாக இருக்க வேண்டும்.

**ரயில்வே முன்பதிவு சீட்டு, வங்கி விண்ணப்ப படிவம், ஆயுள் காப்பீட்டு விண்ணப்பம் உள்ளிட்ட ஒன்றிய அரசுத்துறை ஆவணங்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருப்பதால் இந்தி தெரியாத மாநிலத்தை சேர்ந்த மக்கள் குறிப்பாக, இந்த சேவையை பெரிதும் பயன்படுத்தும் பாமரர்கள் பாதிக்கப்படுகின்றனர்.**

**-பரிதிபாலன்**




மனம் கவர்ந்த சினிமா

சிறு வயதிலேயே தாயை இழந்த ஒருவன், குழந்தைப் பருவம் முதலே யாருடைய அரவணைப்பும் இல்லாமல் அன்பில் வாசல் தேடி அலைகிறான். உண்மையான பாசம் தேடி பைத்தியம் போல அலையும் அவனுக்கு சரியாத துணை கிடைத்ததா என்பதே, பாகல் படத்தின் மையக்கதை.

# பாகல்

(தெலுங்கு)

சிங்கிள் மதரான பூமிகாவுக்கு, தன் மகன் பிரேம் என்றால் உயிர். குழந்தை பிரேமுக்கும் அம்மா தான் உலகம், உறவு எல்லாம். தன்னை பாசமாக பார்த்துக் கொள்ளும், பாதுகாப்பு அரணாக இருக்கும் அம்மா ஒருநாள் கேன்சரில் இறந்து விட, யாருமற்ற அனாதையாகி விடுகிறான் பிரேம். யாருடைய அரவணைப்பும் இல்லாமல் வளரும் அவன், அம்மாவைப் போல தன் மீது பாசம் காட்டும் உறவுக்காக ஏங்குகிறான்.

''நீ ஒரு பொண்ணை லவ் பண்ணு, அந்த பொண்ணும் உன்னை லவ் பண்ணா, உனக்கு தொலைஞ்சு போன உன் அம்மாவோட பாசம் திரும்ப கிடைக்கும் ''என்று நண்பன் ஐடியா கொடுக்க, பதின்ம வயதில் இருக்கும் பிரேம், கிட்டத்தட்ட ஸ்கூலில் படிக்கும் எல்லா பெண்களிடமும் லவ்யூ சொல்லி விடுகிறான். அவன் அன்பையும், மனதையும் உணராத பெண்கள் நோ சொல்லி விடுகிறார்கள்.

காதல் தோல்வி அடைந்த ஒரு சீனியர் மாணவியிடம் பிரேம் புரபோஸ் செய்ய, 'நான் உன்னோட பெரிய 'பொண்ணுடா ',என்கிறாள். அப்போ வயசை பார்த்து தான் லவ் வருமா' என்று பிரேம்



கேட்க, 'அவனுக்கு சொந்தமா வீடு, கார், பேங்க் பேலன்ஸ் இருக்கு' என்று சொல்ல, 'அப்போ அதெல்லாம் எனக்கு இருந்தா ஓகே சொல்லுவியா' என்கிறான். 'அப்போ பார்க்கலாம்' என்று சொல்லி விட்டு போய் விடுகிறாள்.

சில வருடங்களுக்கு பிறகு நன்றாக படித்து லட்ச ரூபாய் வேலைக்கு செலக்ட் ஆகும் பிரேம், ஆசையோடு, அவன் காதலைச் சொன்ன பெண்ணைத் தேடி போகிறான். அங்கே சென்று காலிங் பெல் அடித்தால், அவன் காதலித்த சீனியருக்கு கையில் ஒரு குழந்தையே இருக்கிறது.

இப்படி ஆகிடுச்சே என்று விரக்தியில் இருந்தவனை நண்பன் உசுப்பி விடுகிறான். அவன் ஐடியாபடி வைசாக்

பயணமாகிறான் காதலியை தேடி ,அங்குஏரியாவில் யூத் லீடர் ராகுல் ,இளசுகளை சேர்த்துக் கொண்டு வழியில் செல்லும் பெண்களை ஈவ் டீசிங் செய்கிறான். தன் கண் முன்னே ராதா என்ற பெண்ணை பலரும் கிண்டல் செய்ய, கடுப்பாகும் பிரேம், 'என் லவ்வரை கிண்டல் பண்ணது எவன்டா 'என்று கேட்டு எல்லோரையும் அடித்து துவம்சம் செய்கிறான்.

தன்னை காப்பாற்றி ஹீரோயிசம் காட்டியவன் மீது ராதாவுக்கு நல்ல அபிப்பிராயம் வந்து விடுகிறது. ஒரு காபி ஷாப்பில் இருவரும் உட்கார்ந்திருக்க, ராதா, பிரேமிடம் லவ் சொல்லும் வேளையில் அவன் டி.வி. சீரியல் அடிக்ட் என்பதால் அந்த லவ் பிரேக்-அப் ஆகிறது.

அடுத்து, மியூசிக் காலேஜ் சோபியை பார்த்து அட்ராக்ட் ஆகும் பிரேம், அவளிடம் தன் மனதை சொல்கிறான். ''கொஞ்ச நாள் பழகிப் பார்க்கலாம், அப்புறம் சொல்றேன்'' என தன் இஷ்டத்துக்கு அவனை அலைய வைத்து காசு பார்க்கும் சோஃபி, நன்றாக அவனை யூஸ் செய்து கொள்கிறாள்.

ஒரு கட்டத்தில் பஸ் ஸ்டாப்பில் தன்னை லுக் விட்ட பேபியிடம் ('பிகில்' பாண்டியம்மா) லவ் ஓகே செய்கிறான். அன்புக்காக அழகைப் பார்க்காமல் காதல் சொன்ன பிரேம் வம்பில் மாட்டிக் கொண்டு அவளிடம் வகையாய் சிக்கித் தவிக்கிறான். இதில் கொடுமை என்னவென்றால் அவளாகவே வந்து 'நமக்குள்ள இந்த லவ்வெல்லாம் செட் ஆகாது'என பிரேக்-அப் செய்கிறாள்.

6 மாதங்களுக்குப் பிறகு ஒருநாள், திடீரென ஒரு குரல் அவனை இழுக்கிறது, ''என் தொகுதி மக்களை நான் பாசமா பாத்துப்பேன், அன்பா நடந்துப்பேன்'' என்று மேடையில் பேசுகிறார் தேர்தலில் நிற்கும் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ராஜி. அவரிமும் போய் ஐ எல் யூ சொல்கிறான் பிரேம்.

ஆரம்பத்தில் எம்.எல்.ஏ அதை விளையாட்டாக எடுத்துக் கொண்டாலும், தான் போகும் இடங்களில் எல்லாம் விடாமல் துரத்தி வந்து லவ் டார்ச்சர் கொடுக்கும் பிரேமின் தொல்லை தாங்க முடியாமல் கடுப்பாகிறார். தன் அடியாட்களை விட்டு வெளுத்துக் கட்டுகிறார் எம்.எல்.ஏ. ஆனாலும், 'அடிச்சா உடம்பு தான் மரத்துப் போகுமே

தவிர மனசு மறந்து போகாது' என்று பஞ்ச் விடும் பிரேம், எம்.எல்.ஏ.வை எதிர்கட்சி கோஷ்டி ரவுண்டு கட்டி அட்டாக் செய்யும் போது ஆபத்பாந்தவனாக வந்து காப்பாற்றுகிறான்.

இதன் காரணமாக எம்.எல்.ஏ. உடன் பயணிக்கத் தொடங்குகிறான் பிரேம். அளவிட முடியாத அளவுக்கு அன்பைக் காட்டும் பிரேம், ஒரு கட்டத்தில்'' நீ இப்போ உடனே கிளம்பி வரலன்னா இந்த பில்டிங் மேல இருந்து குதிச்சி டுவேன்'' என்று எம்.எல்.ஏ.வை மிரட்ட, அவரும் பதறியடித்துப் போகிறார்.

''என்கிட்ட இருந்து உனக்கு என்னடா வேணும்'' என்று எம்.எல்.ஏ கட்க, என்னை லவ் பண்ணு போதும்..என்று பிரேம் மறுபடி அதையே சொல்ல, ''அடேய் நான் எப்படிடா உன்னை லவ் பண்றது, இதை யாராச்சும் கேட்டா என்ன நினைப்பாங்க''என்று தயங்கிறார்.

வேறு வழியில்லாமல் பிரேம் உயிரை காப்பாற்ற எம்.எல்.ஏ லவ் யூ சொல்ல, மறைத்து வைத்த துப்பாக்கி எடுத்து அவரை சுடுகிறான் பிரேம். தோளில் குண்டு பாய்ந்து சரியும் அவரிடம் பிளாஷ்பேக் சொல்கிறான் பிரேம்.

மூன்று காதல் பிளாப் ஆன பிறகு, என்னை விரும்ப இந்த உலகத்தில் யாரும் இல்லை என்று விரக்தியாகி பாலத்தில் இருந்து விழுந்து தற்கொலை செய்து கொள்ள பிரேம் ட்ரை செய்ய, ஒரு பெண்ணின் (தீரா) காதல் குரல் அவன் கவனத்தை ஈர்த்து காப்பாற்றுகிறது.

அவளை தேடிக் கண்டுபிடித்து, இதுவரைக்கும் நான் ''எத்தனையோ பெண்கள்கிட்ட லவ் சொல்லியிருக்கேன், ஆனா எனக்கு லவ் சொன்ன ஒரே ஒரு பொண்ணு நீதான், உன்னை மிஸ் பண்ண மாட்டேன் ''

என்று விடாமல் பின்னால்

**ரதன் இசையில் பாடல்களும், லியோன் ஜேம்ஸின் பின்னணி இசையும் படத்திற்கு பக்கபலம்.**

**மணிகண்டனின் கலர்புல்லான ஒளிப்பதிவும், கேரி பி.எச்.சின் நேர்த்தியான படத்தொகுப்பும் சிறப்பு.**

**ரொமாண்டிக், செண்டிமெண்ட் கலந்து நல்ல கமர்ஷியல் காமெடி என்டர்டெயினரைக் கொடுத்திருக்கிறார் அறிமுக இயக்குனர் நரேஷ் குப்பிலி.**

துரத்துகிறான்.

'ஓ, அவ்ளோ லவ்வா, அப்போ நான் சொன்னா இந்த ரெயில்'ல இருந்து கூட குதிச்சிடுவியா ''

என்று தீரா சொல்ல மறுவார்த்தைக்கு காத்திருக்காமல் வெளியே குதித்து, அதிர்ஷ்டவசமாய் உயிர் பிழைக்கிறான்.

தீரா, பிரேமை சந்தித்து, 'எனக்கு ஆல்ரெடி நிச்சயதார்த்தம் முடிஞ்சது, இன்னும் 6 மாசத்துல கல்யாணம்.

என் அப்பாகிட்ட, அவர் கை காட்டுற பையனை கல்யாணம் பண்ணிக்குறேன்னு வாக்கு கொடுத்திருக்கேன்'' என்கிறாள்.

மனமுடையும் பிரேம், ''இந்த 6 மாசம், உங்க அன்பு எனக்குக் கிடைக்குமா, அந்த ஞாபகத்தோட நான் ஆயுசு முழுக்க இருந்துடுவேன்'' என்று கெஞ்சிக் கேட்க, தீராவும் அதற்கு ஒப்புக் கொள்கிறாள்.

தீராவுடன் பிரேம் கழித்த 6 மாதங்கள் அவனுக்கு மறைந்த அவன் அன்னையை அவள் உருவில் காட்டி விடுகிறது. கண்டிஷன் தாண்டி இருவரும் மனதளவில் நெருங்கி விடுகின்றனர். ஆனாலும் 6 மாதங்களுக்கு பிறகு பிரிய வேண்டிய தருணத்தில், ''எப்படி உன்னை என்னால மிஸ் பண்ண முடியும்'' என்று பிரேம் கண்ணீர் விடுகிறான்.

''உனக்கு இது வெறும் 6 மாச மெமரிஸ், எனக்கு இது 12 வருஷ காதல். எந்த பொண்ணு நிச்சயம் ஆன பிறகு ஒருத்தனை 6 மாசம்

**விஷ்வக் சென் இதில் பிரேம் கேரக்டரில் உயிர்ப்புடன் நடித்துள்ளார்.**

**இரண்டாம் பாதியில் சர்ப்பிரைஸ் என்ட்ரி கொடுக்கும் நிவேதா பெத்துராஜ், தனக்கு முக்கியத்துவம் உள்ள கதாப்பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளார்.**

**சில காட்சிகளிலேயே வந்தாலும் நாயகனின் அன்னையாக பூமிகா மனதில் நிற்கிறார்.**

**எம்.எல்.ஏ ராஜி ரெட்டியாக முரளி சர்மா, காமெடியில் அதகளம் செய்திருப்பார்.**

**அடி வாங்கும் யூத் லீடராக 'அர்ஜுன் ரெட்டி புகழ்' ராகுல் ராமகிருஷ்ணா, பேபி கேரக்டரில் ரோபோ சங்கரின் மகள் இந்திரஜா, எக்ஸ் காதலிகளாக சிம்ரன், மேக்னா என பலரும் தேவையான பங்களிப்பை அளித்துள்ளனர்.**

லவ் பண்ண ஒத்துக்குவா? நீ படிச்ச அதே ஸ்கூல்'ல தான் நானும் படிச்சேன், நீ எழுதி பறக்க விட்ட லவ் லெட்டர் ஒருநாள் எனக்கு கிடைச்சது. என்னை நீங்க லவ் பண்ணா என் அம்மாவைப் போல பார்த்துப்பேன்'னு அதுல எழுதியிருந்தது, அனாதையான எனக்கு அந்த நொடியே பார்க்காத உன் மேல காதல் வந்தது.

ஆனால் நீ பாக்குற பொண்ணுக்கெல்லாம் லவ் சொல்லிட்டிருந்த. என்னை ஒரு பெரிய மனுஷன் தத்தெடுத்து சொந்த மகள் போல வளர்த்தாரு. ஆனாலும் உன்னை விடாம பாலோ பண்ணிட்டே இருந்தேன். நீ தற்கொலை பண்ணிக்க போனதால தான் நான் என்னை வெளிக்காட்டினேன் ''என்று தன் ரகசியத்தை அவனுக்கு சொல்கிறாள். உயிருக்கு உயிராக விரும்பினாலும் விதி வசத்தால் இருவரும் பிரிகிறார்கள்.

ஆனால், கல்யாண நாளன்று, தீரா தன் காதலனை சந்தித்தது தெரிந்து, ''நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வச்சாலும் அதோட புத்தி விட்டுப் போகாது, என் பேருக்கு எந்த களங்கமும் வரக் கூடாது'' என்று என்று தன் வளர்ப்பு மகளையே கொல்ல ஆட்களை அனுப்புகிறார் அந்த பெரும்புள்ளி.

அந்த நாள் தீரா மீது ஒரு கார் ஏற, ரத்த வெள்ளத்தில் விழுகிறாள். தீராவின் வளர்ப்புத் தந்தை வேறு யாருமல்ல... இப்போது பிரேம் முன்பு குண்டடி பட்டு நிற்கும் எம்.எல்.ஏ ராஜீ தான்.

'' கொஞ்ச நாள் பழகின நான் கூப்பிட்ட உடனே தலைதெறிக்க நீ ஓடி வந்த, 12 வருஷம் லவ் பண்ண அவ என்னை பார்க்க வரக் கூடாதா, உனக்கு கொடுத்த வாக்குதான் முக்கியம்'னு இன்னொருத்தனை கூட கல்யாணம் பண்ண தயாரா இருந்தா, அவளையா நீ கொலை பண்ண சொன்ன'' என்று பிரேம் கூறவும், ராஜீ உடைந்து அழுகிறார்.

பிறகே, தீரா உயிரோடு இருக்கும் விஷயத்தை சொல்லி சஸ்பென்ஸ்'க்கு முற்றுப்புள்ளி வைக்கிறான் பிரேம்.

ஹேப்பி எண்டிங் மோடில் கதை முடிய, பிரேமுக்கு அவன் தேடிய தாய் மடி தீரா ரூபத்தில் கிடைக்கிறது.

காதல், மானம் வீரம் முப்பெரும் பண்பாட்டை பறைசாற்றியது தமிழகம். இதில் காதல் என்று அவர்கள் குறிப்பிட்ட உணர்வார்ந்த உறவு உடல் சார்ந்த உறவாக மட்டுமே குறுகிவிட்டதால் மானம் இங்கு பறிபோகிறது. மானம் போனபின்பு வீரமான வீராப்பு உணர்வால் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிகழ்வும் அரங்கேறி வருகிறது.



# காத்து வாக்குல காதல்... மான ரோசத்தால் பறிபோகும் உயிர்!

உயிர்க்கொள்ளும் காதல் உயிர்க்கொல்லியாக மாறுவதற்கு தற்கால தகவல் தொழில்நுட்பமும் காரணமாக அமைகிறது.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் பகுதியை சேர்ந்த ஐஸ்வர்யா (29)வுக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். ஐஸ்வர்யா, முகநூல் மூலம் ராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த திருமணமாகாத விஜய் (31) என்பவருடன் பழகியுள்ளார். சில நாள்களுக்கு முன்பு ராமநாதபுரம் பகுதிக்கு சென்ற ஐஸ்வர்யா, விஜயை சந்தித்தார், அப்போதுதான் ஐஸ்வர்யாவுக்கு ஏற்கெனவே திருமணமானது தெரியவந்துள்ளது. இதுகுறித்து ஐஸ்வர்யாவின் கணவருக்கு விஜய் தகவல் தெரிவித்தார்.

இதற்கிடையே மனைவியைக் காணவில்லை என ஐஸ்வர்யா வின் கணவர் திருச்செந்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்து இருந்தார். ஐஸ்வர்யா இருப்பிடம் அறிந்ததும் ராமநாதபுரத்துக்கு சென்றார். அங்குள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விஜய், ஐஸ்வர்யா மற்றும் அவரது கணவர் உள்ளிட்டோரை அழைத்து மகளிர் போலீசார் பேசினர். அப்போது ஐஸ்வர்யாவுக்கு அறிவுரை கூறி, குழந்தைகள் நலன் கருதி கணவருடன் செல்லுமாறு கூறினர்.

ஐஸ்வர்யாவை முறைப்படி திருச்செந்தூர் போலீஸாரிடம் ஒப்படைப்பதற்காக அவரை அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள பெண்கள் காப்பக பிரிவில் தங்க வைத்தனர். இந்நிலையில் அங்கிருந்த குளியலறையில் ஐஸ்வர்யா தூக்கில் தொங்கினார். அவர் துப்பட்டாவால் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக போலீசார் தெரிவித்தனர்.

இது தகாத காதலால் ஏற்பட்ட மனக்குழப்பத்தால் நடந்த தற்கொலை என்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர் உயிர் துறப்பதை விட அவரது உறவினர்கள் உயிரிழப்பது அதிகம் நடக்கிறது.

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பகுதியில் வசித்து வந்த தாமரைசெல்வன், சரளா தம்பதியினருக்கு அர்ச்சனா என்ற மகள் இருக்கிறார். ஒரே மகள் என்பதால், அவருக்கு விருப்பமானதை எல்லாம்

செய்து, தந்து பல் டாக்டருக்கு படிக்க வைத்தனர்.

ஆனால், அர்ச்சனா கணபதி என்பவரை காதலித்துள்ளார். இந்த காதலுக்கு அர்ச்சனா வீட்டில் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஆனால், பெற்றோர் எதிர்ப்பையும் மீறி சமீபத்தில் திருமணம் செய்து கொண்டார். இதனால் பெற்றோர் அதிர்ச்சியடைந்தனர். காரணம், கணபதி ஏற்கனவே 2 திருமணங்கள் செய்தவர்.

செல்லமாக வளர்த்து டாக்டருக்கு படிக்க வைத்தால், 3 ஆவது மனைவியாகிவிட்டாரே என்ற மன உளைச்சலுக்கு பெற்றோர் இருவரும் ஆளாகி உள்ளனர். இந்நிலையில் சரளா வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அதை பார்த்து அதிர்ந்து போன தாமரை செல்வன் உடனே வயலுக்கு வைத்திருந்த பூச்சி மருந்தை எடுத்து குடித்துவிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இது ஒருபுறம் என்றால்... மறுபுறம் வயது அதிகமானவருடன் காதலில் ஈடுபட்ட இளம்பெண்ணுக்கு பெற்றோர் அறிவுரை கூறினர்.

ஆனால் அந்த பெண் செய்த செயலால்



கவுசல்யா



தென்னரசு - அமிர்தவள்ளி

பெற்றோரோ, அவமானத்தால் துடிதுடித்து தற்கொலை செய்துகொண்டனர்.

திருப்பூர் மாவட்டம் அவிநாசியை சேர்ந்தவர் பொன்னுசாமி (65). இவரது மனைவி சுமதி (55). இவர்களுக்கு ஜனனி (23) என்ற மகள் உள்ளார். இவர் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் பிசியோதெரபி டாக்டருக்கு மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார்.

ஜனனிக்கு அதே பகுதியை சேர்ந்த இறைச்சிக்கடை நடத்திவரும் சம்பத் (41) என்பவருக்கும் இடையே காதல் இருந்து வந்துள்ளது. ஜனனியின் காதலுக்கு அவரது பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளனர். கொரோனா தொற்று ஊரடங்கால் கல்லூரிக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வந்த ஜனனி செய்வதறியாமல் இருந்துள்ளார்.

தற்போது அரசு அறிவித்த தளர்வுகளால் மீண்டும் கல்லூரி திறக்கப்பட்டது. இதை நல் வாய்ப்பாக நினைத்த ஜனனி, சம்பத்தை திருமணம் செய்துள்ளார். இதையடுத்து இரவு தனது தந்தையின் வாட்ஸ் அப்பிற்கு கோவையில் தனது காதலனுடன் திருமணம் செய்து கொண்டதாகவும், அதற்கான போட்டோவையும் அனுப்பி வைத்துள்ளார்.

இதனை பார்த்து மனமுடைந்த ஜனனியின் தாய், தந்தை இருவரும் வாழைப்பழத்தில் விஷ மாத்திரையை வைத்து சாப்பிட்டு உயிரை மாய்த்துள்ளனர்.

**பி**ள்ளைகளை தண்டிக்கும் துணிவற்ற பெற்றோர் தங்களை தண்டித்துக்கொள்கிறார்கள். மானத்துக்கு முன்பு ரத்த பாசமும் நிற்க கூடாது என்று கருதும் பெற்றோர் பிள்ளைளையே கொல்லவும் துணிகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்ட த்தை சேர்ந்த கனகராஜ்- கௌசல்யாவுக்கும் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்துள்ளது. இருவருக்கும் குழந்தை இல்லாத நிலையில் ... தன்னுடன் படித்த ,காவலர்

**இப்போது 'போன் செக்ஸ்' என்ற ஒன்று இளந்தலைமுறையை ஈர்த்துக்கொண்டுள்ளது. தொலை பேசி, சமூல வலைத்தளங்கள் மூலம் பாலியல் ரீதியான உரையாடல்கள், சேட்டைகள், காட்சி களை கேட்டு, பார்த்து கிளர்ச்சியடைய இது வச தியாகிறது. நள்ளிரவு தொலைபேசியை பயன்படுத்தும் ஆண், பெண் இருவரும் இந்த பாதிப்புக்கு ஆளாகியிருப்பார்கள்,**

**திருமணமாகி தனியே வாழும் தம்பதியர் இத்தகைய பழக்கத்துக்கு ஆளாகின்றனர். முதலில் அடிக்கடி பேசுவார்கள். வேலை நிமித்தமாக பேச முடியாமல் போகிறபோது மிஸ்டு கால்களில் இச்சை தீர்க்க முயல்கிறார்கள். இந்த ஆன்லைன் விபச்சாரம் மூலம் பல்லாயிரம் கோடி தொழில் நடக்கிறது.**

பார்த்திபனை ராமநாதபுரத்தில் சந்தித்துள்ளார் கௌசல்யா. அப்போது செல்போன் நம்பரை வாங்கிச்சென்ற பார்த்திபன் தினமும் அவருடன் பேசி வந்துள்ளார்.

இதனை கண்ட

கௌசல்யாவின் கணவர் கனகராஜ் கண்டித்துள்ளார். ஆனாலும் அவர்களுடைய செல்போன் உரையாடல் நிற்கவில்லை. இதனால் கனகராஜ்க்கும் கௌசல்யாவுக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நான்கு மாதங்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியேறிய கௌசல்யா மதுரையில் காவலர் பார்த்திபனுடன் வாழ்ந்து வந்துள்ளார். தனது மனைவி காணாமல் போனது குறித்து கனகராஜ் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். வழக்கு பதிவு செய்த போலீசார் கௌசல்யா சென்ற கார் நம்பரை

**எச்சரிக்கை உணர்வால் ஆலோசனை கூறும் பெற்றோர் எரிச்சலடைய வைப்பதாக உணரும் விடலை பருவத்தினர், இத்தகைய வலைத்தொடர்பால் விரைவில் வீழ்கின்றனர். இதுவே போதையாகிறது. கனிவாக தொடங்கும் உரையாடல் இனிமையாக மாறுகிறது. காதலில் கசிந்துருகுவது போல் நடித்து காமத்தில் மெல்ல இறக்கிவிடுகிறது.**

வைத்து அதன் மூலம் அவர் எங்கு இருக்கிறார் என அறிந்து அவரை காவல் நிலையம் அழைத்து வந்தனர்.

அங்கு கனகராஜ் மற்றும் கௌசல்யாவின் குடும்பத்தினரை வரவழைத்துகௌசல்யாவுக்கு புத்திமதி கூறி, அனுப்பி வைத்துள்ளனர் . கௌசல்யா தனது பெற்றோருடன் வசித்து வந்துள்ளார். ஆனாலும் தொடர்ந்து தனது கள்ளக் காதலனான காவலருடன் அவர் பேசி வந்ததாகவும் கூறப்படுகிறது. இதனை பெற்றோர்கள் கண்டித்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு திடீரென கௌசல்யா எலி மருந்தை சாப்பிட்டு விட்டதால், பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். இரண்டு நாட்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கௌசல்யாவை அவரது பெற்றோர் மருத்துவமனையில் தகவல் தெரிவிக்காமலேயே வீட்டிற்கு அழைத்து வந்ததாக கூறப்படுகிறது. அழைத்து

**காதல் உறவை வளர்ப்பதாகவும், குடும்பத்தை பாதுகாப்பதாகவும் அமைந்தால் நீடித்த மகிழ்ச்சி ஏற்படும். உண்மையான காதல் என்றால் உறுதியாக நின்று பெற்றோர் மனமாற்றம் வரை பொறுமையை கடைப்பிடிக்கலாம். தனது தேர்வின் நியாயத்தை நிரூபிக்கலாம். ஆனால், அதிரடியாக நடவடிக்கை எடுத்தால் அதிர்ச்சி அடையும் இதயங்கள் துடிப்பை நிறுத்திக்கொள்ளவும் நேர்கிறது.**

வந்த மறுநாள் மீண்டும் கௌசல்யா எலி மருந்தை சாப்பிட்டு இறந்ததாக கூறி ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள கால்வாய் பகுதியில் உடலை எரித்துள்ளனர்.

இதுகுறித்து தகவலறிந்த போலீசார் விசாரித்ததில் தொடர்ந்து எங்களது பேச்சைக் கேட்காமல் குடும்பத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தும் வகையில் அவள் கள்ளத்தொடர்பை தொடர்ந்து வந்ததால் ஆத்திரத்தில் நானும் எனது கணவரும் மூச்சை பிடித்து அமுக்கி கொலை செய்தோம் என தாயார் அதிர்ச்சி வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அனுசரனையாக ஒரு வார்த்தை பேசுவதில்லை, எனது பேச்சை காது கொடுத்து கேட்பதில்லை, உணவை பராட்டுவதில்லை, என் ரசனையை ஏற்பதில்லை, வேலைக்கு பின் களைப்புடன் வந்து சலிப்புடன் உண்டு அலுப்புடன் படுக்கிறார் என்றெல்லாம் எண்ணும் பெண்கள் எளிதில் கிளை தாவத் தயாராகிவிடுகின்றனர். அவர்களுக்கு தேவை தாவுவதற்கு வசதியாக பக்கத்து கிளையை வளைத்துக் கொடுக்கும் காற்றாகிய தொடர்பு சாதனங்கள்தாம்.

பணியிடத்தில், பொது தளத்தில் அவர்களுக்கென்றே சிலர் வலை விரித்துக் காத்திருக்கின்றனர். விரித்த வலையில் விரும்பிய உண(ர்)வு இருக்கும் அல்லவா? அந்த சுவைக்காக வலையில் விழுந்துவிடுகின்றனர்.

ஒன்றின் மீது பிடிப்பு தளரும்போது மற்றொன்றை பற்றிக்கொள்ள நினைக்கிறார்கள். முந்தையதை விட இப்போது பற்றுவது பலவீனமானது என்று உணர்வதற்குள் விழுந்துவிடுகிறார்கள்.

**கண்ணில் படும் பெண்களை எல்லாம் காதலிப்பவர்களும் உண்டு. இவர்கள் காதலுக்கு அடிப்படை பாலியல் உணர்வே. எப்போதும் ரொமான்ஸ் மனநிலை கொண்டு திரிபவர்கள், அவ்வப்போது அது தொடர்பான காட்சிகளை, காணொளிகளை பார்த்து வெறியேற்றிக்கொள்வார்கள். அவர்களிடம் கிடைக்கும் இளம் பெண்கள் கதி அதோ கதிதான்.**

வாழ்வின் நளினமாக நேரங்களை இணையுடன் சேர்ந்து ரசிக்க தவறுவது. வேலை முடிந்து வந்தால் களைப்பு, தூக்கம் என்று காலங்கள் கழிவது. இந்த இடத்தில் மூன்றாம் நபர் உள்ளே புகுந்தால் காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதைதான்.

இன்றைய இளைய தலைமுறை காதலில் அவசரம் காட்டுகிறது. ஏட்டுக்கல்வியில் இருக்கும் அறிவு, அனுபவத்தில் இல்லை.

வீடு, வீடு விட்டால் பள்ளி என்று வாழ்ந்த பிள்ளைகள் இடையில் தட்டுப்படுபவர்களின் பின்னணியை எப்படி அறிய முடியும்? ஆனால், பெற்றோர் தங்கள் அனுபவ அறிவு காரணமாக எதிர்காலத்தை உய்த்துணர்ந்து பிள்ளைகளை தடுக்கிறார்கள். அதை அவர்கள் மதிக்காத போது அவமனாத்தால் உயிர்விடுகின்றனர்.

இப்படித்தான் பொருந்தாக் காதலும் மனித உயிர்களை பலிவாங்குகிறது. ஒருபக்கம் ஆத்திரம் காரணமாக கொலையில் முடிந்தாலும், மறுபக்கம் அவமானம் காரணமாக தற்கொலையிலும் முடிகிறது.

இதற்கும் பாலியல் திருப்தியை விட, பாசத்தில் நிறைவை அளிக்காத உறவே காரணமாகிறது.

அரவணைப்பு, ஆறுதல், ஆலோசனை, அன்பு பாராட்டுதல் மூலம் சிந்தனை மந்தி போல் தாவுவதை தடுக்கலாம்.

சிறு வயதில் போதிக்கப்படும் நற்பண்புகளும், பெற்றோர், ஆசிரியர், சுற்றத்தாரின் நடவடிக்கைகளும் தான் வேடர்கள் வலையில் இரையாக விழாமல் இளம்பெண்களை பாது காக்கும்.

விட்டால் பிடிக்க முடியாது, மானத்தையும், உயிரையும்தான்.

**–நெல்லை பரிதி**

# ரித்து வர்மாவின் போஸ்



தமிழ், தெலுங்கு படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கும் நடிகை ரித்து வர்மா ,'துருவ நட்சத்திரம்' படத்துக்காக இலவு காத்துக் கிடக்கிறார். சமீபத்தில் தெலுங்கில் நானியுடன் அவர் நடித்த 'டக் ஜெகதீஷ்' படம் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. இந்நிலையில் தமிழ், தெலுங்கில் ஒரே நேரத்தில் உருவாகும் 'ஒகே ஒக ஜீவிதம்' படத்தில் சர்வானந்துக்கு ஜோடியாக நடித்திருக்கிறார் ரித்து.

இந்த படத்தின் மூலம் அமலா மீண்டும் தமிழில் ரீ-என்ட்ரி தரவிருக்கிறார். இந்நிலையில் ரித்து வர்மா, துபாயில் உள்ள புர்ஜ் கலீபா டவர் பேக்கிரவுண்டில் இருக்க, ஊஞ்சலில் செம கியூட்டாக அமர்ந்து கொண்டு போஸ் கொடுத்த புகைப்படம் சோஷியல் மீடியாவில் வைரலாகியுள்ளது.

# தனித்தீவில் சரக்குடன் ரைசா



அடிக்கடி சமூக வலைதளங்களில் சர்ச்சைக்குரிய புகைப்படங்களை பதிவிட்டு வரும் நடிகை ரைசா வில்சன் தற்போது தனித்தீவு ஒன்றில் கையில் சரக்கு பாட்டிலுடன் இருக்கும் போட்டோவை ட்வீட்டியுள்ளார். இந்த புகைப்படம் தற்போது வைரலாகி சர்ச்சையில் சிக்கியுள்ளது.

# மேஜிக் உலகில் நானும் ஒரு அங்கம்!



நடிகையாக மட்டுமல்லாமல் பாடகியாகவும் கலக்கும் அதிதி ராவ் ஹைதரிதமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, மராத்தி என பல மொழிகளில் பிஸியாக வலம் வருகிறார். இவரது நடிப்பில் உருவான படங்கள் ரிலீசுக்கு வரிசையாக காத்திருக்கும் நிலையில் அவருடன் ஒரு பேட்டி.

–அதிதிராவ் ஹைதரி

**வெளியில் இருந்து இறக்குமதியாகும் நடிகைகளுக்கு பாலிவுட் ரிஸ்க் தானே?**

முதல்ல அவுட்சைடர்'னு (வெளியில் இருந்து வந்தவர்) சொல்லும் போது தான்... நாங்க, அவங்க'ன்னு பிரிவினை ஆரம்பிச்சிடுது. சினிமாத்துறை திறமையை வச்சு இயங்கனும்'னு ஆசைப்படுறேன். என் குடும்பத்தில் யாரும் சினிமாவில் இருந்ததில்ல. அதனால ஆரம்ப கால கட்டத்தில் சில சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதுவும், பல மொழிப்படங்களில் நடிக்கணும்'னு நினைக்குற எனக்கு சொல்லவே வேண்டாம். அதே சமயம், நமக்கான இடம் கிடைச்ச பிறகு எங்குபோனாலும் சரியான அங்கீகாரம் கிடைக்கும். நான் யாரோட இடத்தையும் தட்டிப் பறிக்கல. என்னோட திறமை மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. உண்மையிலேயே நான் சினிமா'ங்கிற மேஜிக் உலகத்தில் ஒரு அங்கமா இருக்க ரொம்பவே பெருமைப்படுறேன்.

**ஒரு நடிகையா உங்களோட பெஸ்ட் எது?**

பெர்சனலா, ஒரு கேரக்டரை எந்த அளவு சரியா கொண்டு வர முடியும்'னு யோசிச்சு தான் நான் வொர்க் பண்ணுவேன். கம்மியா


பத்மாவதி

பேசுற கேரக்டரா இருந்தாலும் சரி, நம்ம நடிப்பு பேசணும், அந்த கேரக்டராவே நாம மாறிடணும். உதாரணத்துக்கு, 'பத்மாவத்' படத்தில் மெகருனிசா கேரக்டர்'ல நடிச்சேன். அது ஜஸ்ட் நடிப்பா மட்டும் இல்லாம, ஒரு காலத்தில் வாழ்ந்த அந்த கேரக்டரை மறு உருவாக்கம் செஞ்ச மாதிரி இருக்கணும்'னு ஆசைப்பட்டு வொர்க் பண்ணேன். பல மெனக்கெடல்களைத் தாண்டி அந்த கேரக்டரை திரையில் சரியா கொண்டு வந்தப்போ கிடைச்ச சந்தோஷம் அலாதியானது.

**உங்க கனவு ரோல் எது?**

கனவு ரோல் எல்லாம் அந்த கனவிலேயே மூழ்கியிருக்குற இயக்குனர்கள் உருவாக்குவாங்க. நாம அந்த ரோலை சரியா நடிக்கணும், அது தான் என் அளவுகோல்.

**பல மொழி படங்களில் நடிக்குறது சவாலா**



**இல்லையா?**

ஒரு பான்-இந்தியா ஆக்டரா இருக்கத்தான் நான் எப்போவும் விரும்புறேன். அதே சமயம், ஒரே நேரத்தில் பல மொழிகளில் வித்தியாசமான கேரக்டர்களில் நடிக்கும் போது அதுக்காக பல விதங்களில் நாம மாற வேண்டியிருக்கும். பெரிய பெரிய நடிகர்கள், இயக்குனர்கள் கூட வொர்க் பண்ணும் போது அந்த கஷ்டம் பெருசா தெரியாது. எல்லா மொழிகளிலும் ரசிகர்கள் என்னை ஏத்துக்கிட்டாங்க, அதுக்கு முதல்ல நன்றிக்கடன் பட்டிருக்கேன்.

**ஒரு நடிகையா இருக்குறதுல என்னென்ன கஷ்டங்கள் இருக்கு?**

ஒரு நடிகையா ஒவ்வொரு படங்களிலும் பல புதுப்புது விஷயங்களை கத்துக்க முடியும். அதே சமயம், ஸ்க்ரிப்ட்'ல எனக்கு இருக்குற எல்லைகளுக்கு உட்பட்டு தான் நடிக்க வேண்டியிருக்கும். அதுவும் கால்ஷீட் பிரச்சனை வந்தாலோ, ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு, இந்தின்னு பல மொழிகளில் நடிக்க வேண்டி வந்தாலோ, பிளைட்டை பிடிச்சு அவசர அவசரமா ஓட வேண்டியிருக்கும். ஆனா எதிர்பார்த்த ரிசல்ட் கிடைக்கும் போது பட்ட கஷ்டம் எல்லாம்

பறந்து போயிடும்.

**பல ஹீரோயின் சப்ஜெட்டில் அதிகம் நடிக்கிறீர்களே?**

என்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு படத்தில் நடிக்க ஒவ்வொரு கேரக்டருமே ரொம்ப முக்கியம் தான். எனக்கு கதை பிடிச்சதுன்னா சும்மா 1 நிமிஷம் வந்துட்டு போற கெஸ்ட் ரோலில் கூட நடிப்பேன்.

**ஒரு கேரக்டருக்காக எந்த மாதிரி கிரியேட்டிவா யோசிப்பீங்க?**

பெரும்பாலும் ஷூட்டிங் இல்லாத நேரத்தில் எல்லாம் நான் புக்கும் கையுமா தான் இருப்பேன். அதே நேரம் என்னோட அடுத்த ஷெட்யூல் ஷூட்டிங் வரும் போது என்னோட கேரக்டருக்கு எப்படியெல்லாம் தயாராகணும்'னு யோசிப்பேன். ஒரு கேரக்டரோட தன்மையை நாம ஆழமா புரிஞ்சு நடிக்கும் போது ரசிகர்கள் கிட்ட அது சரியான முறையில் ரீச் ஆகும். அந்த மாதிரி விஷயங்களுக்கு யோகோ எனக்கு ரொம்ப உதவியா இருக்கு.

**சோஷியல் மீடியா விமர்சனங்களை எப்படி பாக்குறீங்க?**

இன்டர்நெட்டில் ட்ரோல்





பண்றது இப்போ வாழ்க்கையோட ஒரு அங்கமா மாறிடுச்சு. அதையெல்லாம் சகிச்சிட்டு தான் போயாகணும். பொதுவா நான் பாசிட்டிவ்வான கருத்துக்களை மட்டும் எடுத்துப்பேன். அதையும் தாண்டி தப்பான விஷயங்கள் கண்ணில் படும் போது வருத்தமா இருக்கும். ஆனா ஒரு நிமிஷம் கூட அது நீடிக்காது. அடுத்து வேலையைப் பார்க்க கிளம்பிடுவேன். என்னோட கவனம் எல்லாமே நேர்மறை எண்ணத்தில் மட்டும் தான் இருக்கும்.

**யாருக்கும் தெரியாத ரகசியம் ஒன்னு சொல்லுங்க?**

என் முதுகில் ஒரு சின்ன குழிவு இருக்கும்.

**உங்க அப்பாவி முகத்தை வச்சு யாரையாச்சும் ஏமாத்தினதுண்டா?**

இருக்கலாம் (சிரிக்கிறார்), சும்மா சொன்னேன். இதுவரைக்கும் அப்படி ஒரு தேவை ஏற்படல.

**உங்களோட அடுத்த கட்ட பணிகள்?**

நான்கு மொழிகளில் இப்போதைக்கு ஷூட்டிங் போயிட்டிருக்கு. சில சுவாரஸ்யமான கேர்கடர்கள்'ல நடிச்சி ட்டிருக்கேன். இன்னும் சில கதைகள் கேட்டிருக்கேன். சீக்கிரமே அது பற்றிய தகவல்கள் வெளியாகும். (வாழ்த்து செ ால்லி விடைப் பெற்றோம்).

–தவா

**கொஞ்சம் மருத்துவம்... நிறைய மனிதம்-50**

எங்கள் பள்ளிநாட்களில் செவிவழியாக உலவி வந்த பிரபலமான குட்டிக் கதை அது. இரண்டு சிறுவர்கள் சைக்கிளில் செல்கிறார்கள். ஒருவன் சைக்கிளை மிதிக்க, இன்னொருவன் பின்னால் அமர்ந்திருக்கிறான். திடீரென்று பின்னால் அமர்ந்திருப்பவன் ''டேய்! கால்ரா! கால்ரா!'' என்று கத்துகிறான்.



# பால் ஐஸ்... கப் ஐஸ்!



-டாக்டர் அகிலாண்ட பாரதி

ஐயையோ காலராவா துரத்துகிறது? என்று நினைத்துக் கொண்டு சைக்கிளை மிதிப்பவன் வேகவேகமாக, மேலும் அழுத்தமாக மிதிக்கிறான். சக்கரத்தில் மாட்டிக் கொண்டிருந்த பின்னால் இருந்தவனின் கால் மேலும் சிக்கிக்கொண்டு நைந்தே போகிறது. வண்டியை நிறுத்திய பின் தான் தெரிகிறது, வந்தது கால்ரா அல்ல,

''என்னோட கால் சிக்கிக்கிச்சு டா!''

என்பதையே அவன் கூறியிருக்கிறான் என்று.

அந்த நாட்களில் காலரா என்பது ஒரு நோய் என்றில்லாமல் பேய் என்று மக்கள் மத்தியில் உருவகப் படுத்தப் பட்டு வந்திருக்கிறது. ஏனெனில் அப்போது காலரா நோய்க்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. மலத்தின் வழியே கிருமிகள் வெளியேறி அது நீர் நிலைகளில் கலக்கும்போது குடிதண்ணீர் உணவு மூலமாக நோய்த்தொற்று ஏற்படுகிறது என்ற சங்கிலி அறியப்படாமல் இருந்ததால் (faeco oral route) அந்தக் கொள்ளைநோயைப் பேய் என்றும் கடவுளின் கோபம் என்றும் மக்கள் நினைத்திருந்தனர்.

ஆங்கிலேயர் நம் நாட்டை



ஆண்டு வந்த காலத்தில் காலரா நோய், நாடு முழுவதும் அதிகமான மக்களைப் பலி வாங்கி இருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட ஆங்கில இலக்கியங்களில் சிலவற்றில், இந்தியாவில் பணிபுரிந்து வந்த ஆங்கிலேயர்கள் காலராவால் இறந்து போனதாகக் கதை வருகிறது.

எப்படி பேய் என்று மக்கள் காலராவை நினைத்தார்களோ, அதேபோல காலரா விற்காக ஒரு அம்மனை உருவாக்கி காலரா அம்மன் என்று அதற்குப் பெயர் வைத்து கோவில் கட்டி பொங்கல் வைத்து வழிபட்டதும் நடந்திருக்கிறது. வீட்டிற்கு வீடு மஞ்சளும் சாணமும் கலந்து வாசல் தெளித்து, கதவை அடைத்து வேப்பிலையை வாசலில் தொங்க விட்டு

விட்டால் காலரா பேய் ஓடி விடும் என்ற நம்பிக்கையும் இருந்திருக்கிறது. அந்தக் காலத்தைய சமூக இடைவெளி, சானிடைசர் அது என்று நாம் கொள்ளலாம்.

காலரா முதலிய பல நோய்கள் கிருமித் தொற்றினால் ஏற்படுபவை என்பதைக் கண்டறிந்ததைத் தொடர்ந்து, கை கழுவுதல், திறந்தவெளிக் கழிப்பிடங்களைத் தவிர்த்தல், நீர்நிலைகள் சுத்தமாக வைத்திருத்தல் போன்றவை இத்தகைய வியாதிகளைத் தடுக்கும் என்பதும் அடுத்தடுத்து புரிந்து கொள்ளப்பட்டது. திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத பகுதிகளில் இத்தகைய நோய்த்தொற்றுகள் மிக மிகக் குறைவாக உள்ளன.

காலராவைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்ததில் குளோரினுக்கு மிக முக்கிய பங்கு உண்டு. இன்றளவும் நீர் மூலமாக பரவும் பல வியாதிகளை 'குளோரின் கலப்பது' என்ற எளிதான முறை மூலம் தள்ளி நிற்கச் செய்கிறோம்.

மழை நேரம் வரும்போது ஒரு இடத்தில் வயிற்றுப்போக்கு நோயாளிகள் அதிகம் காணப்பட்டால், சுற்றியுள்ள பகுதிகள் அனைத்திலும் குளோரின் கலந்த தண்ணீரை விநியோகிப்பார்கள். என்ன வியாதி என்பது தெரியாத கொள்ளை நோய்கள் ஏதாவது பரவினால் முதற்கட்டமாக எல்லா நீர்த் தேக்க தொட்டிகளிலும் குளோரின் கலப்பதும், ஊர் முழுவதும் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரப்படுத்துவதும் தான் முதற்கட்ட நடவடிக்கைகள்.

**நமது வீட்டிற்கு குடி தண்ணீர் வரும் பொழுது சில சமயம் அது வெள்ளை நிறமாக இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். சற்று கனமான வாடையும் கலந்திருக்கும். பெரியவர்கள், 'மருந்து கலந்துட்டானா. வாயில வைக்கமுடியாது தண்ணியை' என்றும் கூறியிருப்பார்கள். இதில் மருந்து என்று கூறப்படுவது குளோரினைத் தான். குளோரின் பயன்படுத்துவதன் மூலம் குடிதண்ணீரில் இருக்கும் நோய்த்தொற்று உருவாக்கும் பெரும்பாலான பாக்டீரியா மற்றும் வைரஸ் கிருமிகள் அழிந்து விடுகின்றன.**

எங்கள் தடுப்பு மருத்துவத் துறை பேராசிரியர் ஒருவர் ஒருமுறை ஒரு சுவாரசியமான அனுபவத்தைக் கூறினார். ஒரு கிராமத்தில் இருந்து மீண்டும் மீண்டும் காலரா நோயாளிகள் அதிக அளவில் வந்திருக்கின்றனர். நீர்நிலைகளை சுத்தம் செய்தாயிற்று, வீட்டுக்கு வீடு கிருமிநாசினி தெளித்தாயிற்று, எல்லாரும் கொதிக்க வைத்த நீரை தான் பயன்படுத்தவேண்டும் என்று மறுபடி மறுபடி கூறியாயிற்று.

எல்லா வகை முயற்சி களையும் எடுத்தும் நோய்க்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. புதிது புதிதாக நோயாளிகள் உருவாவதும் அதில் சிலர் மரணம் அடைவதும் கூட நடந்தது. ஒரு அணியாக அந்த ஊரிலேயே வல்லுனர்கள் போய்த் தங்கி, நோய்த்தொற்று ஆரம்பமாகும் இடத்தைக் கண்டுபிடிக்க பல நாட்களாக முயன்றிருக்கிறார்கள். கண்டுபிடிக்கவே முடியவில்லை.

கடைசியாக மனம் வெறுத்துப் போய் கிளம்பி விடலாம் என்று நினைத்திருந்த


டாக்டர்.அகிலாண்ட பாரதி

வேளையில் ஒரு ஐஸ் வண்டிக்காரன் தெருவில் போயிருக்கிறான். எங்கள் பேராசிரியருடன் சென்றிருந்த ஒருவர், 'ஐஸ் வாங்கிச் சாப்பிடுவோமா?' என்று கேட்க, பேராசிரியருக்குச் சட்டென்று பொறி தட்டி இருக்கிறது..


'ஒருவேளை.. அந்த ஐஸ் தயாரிக்கும் இடத்திலிருந்து காலரா தொற்று பரவிருக்கலாமோ?' என்று தோன்றியிருக்கிறது. அந்த வண்டிக்காரனிடமிருந்து இரண்டு குச்சி ஐஸ்களை வாங்கி அதை பாத்திரத்தில் பத்திரப்படுத்தி, பின் பரிசோதனை செய்து பார்க்க, அந்த ஐஸ் நிறைய காலரா கிருமிகள் இருந்தது தெரியவந்திருக்கிறது.

அதன்பின் ஐஸ் தயாரிக்கும் நிறுவனத்திற்குச் சென்று அங்கே இருந்த நீரிலும் அதே கிருமிகளைக் கண்டுபிடித்திருக்கிறன்றனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு பின் மீண்டு வந்த மக்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக, அந்தக் குறிப்பிட்ட கம்பெனி ஐசை

**ஒரு தீப்பெட்டி அளவு குளோரினை ஒரு வாளி நீரில் கலக்க வேண்டும். அந்த நீரை அப்படியே ஒரு நான்கு மணி நேரத்திற்கு வைத்து விட்டால் குளோரின் கீழே படிந்து, மேலுள்ள நீர் தெளிவாக நிற்கும். அந்த மேலே உள்ள நீரை ஒரு பெரிய தொட்டி தண்ணீரில் கலக்கலாம். இதுவே குளோரின் கலப்பதற்கு எளிதான வழி. இது தெரியாத சிலர் மூட்டை மூட்டையாக குளோரினைக் கொண்டுபோய் பெரிய வாட்டர் டேங்க் நீரில் அப்படியே கலந்து, நீரை குடிப்பதற்குத் தகுதியற்றதாக மாற்றிவிடுவார்கள். மக்களும் தண்ணீர் ருசியாக இல்லை, வாடை வருகிறது என்று கூறி அதைத் தவிர்த்து விடுவார்கள்.**

வாங்கிச் சாப்பிட்டீர்களா என்று கேட்க, என்று அத்தனை பேரும் ஆம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படி நாம் எதிர்பாராத இடத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் நோய்தொற்று வரலாம் என்பதற்கு இந்தச் சம்பவம்



ஒரு உதாரணம் உணவகங்கள் மற்றும் உணவுத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இதனால் தான் பல தரக்கட்டுப்பாட்டு சான்றிதழ்களை, சட்டம் அவசியமாக்கி இருக்கிறது.

நடைபாதை ஒர உணவகங்கள், தங்கும் விடுதிகள் போன்றவற்றில் பல சட்ட விதிகள் முறையாக கடைபிடிக்கப்படுவதில்லை. பெரிய உணவகங்களிலும் கூட சில சமயம் பெயரளவுக்கே சில விதிகள் கடைப்பிடிக்கப் படுவதைப் பார்க்கிறோம். சமையல் கலை வல்லுனர்கள், பரிமாறுபவர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் இவர்கள் முறையாக நகம் வெட்ட வேண்டும், சீரிய இடைவெளியில் குடல்புழு நீக்க மாத்திரைகளைச் சாப்பிடவேண்டும், கை கால்களில் புண் ஏதும் இருக்கக்கூடாது, டைபாய்டு

**தற்போதைய துரித உணவு கலாச்சாரத்தில் ஒரே கடையில் சாப்பிட்ட பலருக்கும் வாந்தி, வயிற்று வலி, காய்ச்சல், வயிற்றுப் போக்கு ஏற்படுவதைப் பார்க்கிறோம்.. செய்திகளிலும் படிக்கிறோம். ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்து பின் சூடாக்கிக் கொடுக்கும் உணவுகளான ஃப்ரைட் ரைஸ், நூடுல்ஸ், சாஸ் போன்றவற்றில்** Bacillus cereus **என்ற பாக்டீரியா இருப்பது சாதாரணம். இந்த சைனீஸ் வகை உணவுகளை சாப்பிட்டபின் வரும் பிரச்சனையை 'சைனீஸ் ரெஸ்டாரன்ட் சின்ட்ரோம்' என்கிறோம்.**

போன்ற வியாதிகளுக்கு தடுப்பூசி எடுத்திருக்க வேண்டும் என்ற அடிப்படை விதிகளை கடைப்பிடித்தால் பல பிரச்சனைகளை தடுக்க முடியும்.

குறிப்பிட்ட சில ஊர்களில் சாப்பிடும் பலருக்கு



மஞ்சள் காமாலை போன்ற சில நோய்கள் அடிக்கடி வருவதையும் பார்க்கிறோம். உணவுப் பாதுகாப்பு தொடர்பான முறையான சட்டங்கள் நம் நாட்டில் இருந்தாலும் அதை ஒழுங்காக நிறைவேற்றுவதில் இருக்கும் இடைவெளி அதிகம். வெளியூர் பயணங்கள், அடிக்கடி கடையில் சாப்பிடுவது போன்றவற்றைத் தவிர்க்க முடியாத சூழலில் மக்களுக்கு மத்தியில் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இனிவரும் காலங்களில் மிகவும் அவசியம்.

**(இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தடுப்பு மருத்துவத்துறையில் திருப்புமுனையாக அமைந்த ஒரு நிகழ்வு 'டைஃபாய்டு மேரி' தொடர்புடையது. மிகச் சுவாரசியமானதும் சிந்திக்க வேண்டியதுமான அந்தக் கதை குறித்து.. அடுத்த வாரம்!)**

தேவியின் கண்மணி
மலர்-33 vol- 33
மணி-40 Issue - 40
Published by R.Kannan Adityan on behalf of Murasu Publications from No.246, Anna Salai, Thousand Light Chennai-6 and Printed by R.Kannan Adityan at Deviyin Kanmani Achagam, 246, Anna Salai, Thousand Light, Chennai-6 Editor:R.Kannan Adityan


மாலை முரசு செய்திகள்
மாலைமுரசு
தொலைக்காட்சியில்
திங்கள் முதல் சனி வரை
காலை 8 மணிக்கு
கதிரவன்
புதிய-விடியல்
திணம் ஒரு திருக்குறள்
நலம் தரும் யோகா
தன்னம்பிக்கை தளம்
கதிர் வீச்சு
ஸ்டாக் மார்க்கெட் நிலவரம்
தங்கம் வெள்ளி நிலவரம்
வானிலை அறிக்கை
நாள் நல்ல நாள்
காணத்தவறாதீர்கள்!

Deviyin KANMANI-Tamil Weekly 03-11-2021 Registered With Registrar of News papers for India
Under No.49510/89 published every Wednesday of every Week.

